இந் நூலிலே பதிப்பிக்கப்பட்டுள்ள செப்பேடு கள்ளியங்காட்டிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது. இதன் காலம் கி. பி. 1722 (சகாப்தம் 1644) ஆகும். இது வன்னிய அதிகாரிகள் சிலர் தங்கள் தலைவர் கயிலாய வன்னியனாரின் நினைவு குறித்துச் சிதம்பரத்திலிருந்த ஒரு மடத்துக்குத் தானமளித்த செய்தியினைக் குறிப்பிடுகின்றது.

பேராதனை,
1970.

★

இலங்கைத் தொல்பொருள் ஆய்வுத்துறையினருடைய அனுமதியுடன் முன் அட்டையிலுள்ள கல்வெட்டுப்படம் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

[illegible]

[illegible]



Gunasing...
Navakkiri,
J/Puttur.

S. Gunasingam
Navakkiri,
J/Puttur.

# கள்ளியங்காட்டுச் செப்பேடுகள்

## பாகம் 1

(THE KALLIYANKATU COPPER PLATES - PART 1)

**செல்லத்துரை குணசிங்கம்**, B. A. Hons. (Ceylon)
வரலாற்றுத்துறை, இலங்கைப் பல்கலைக்கழகம்
பேராதனை

பேராதனை
**1970**

முதற்பதிப்பு — நவம்பர் 1970

பதிப்புரிமை — செ. குணசிங்கம்

கண்டி, நெஷனல் பிரிண்டர்ஸில் அச்சிடப்பட்டது.

Kaḷḷiyaṅkāṭṭuc Ceppēṭukaḷ —
(The Kaḷḷiyaṅkāṭu Copper Plates)
**Part I by Sellathurai Gunasingam**
of the University of Ceylon, Peradeniya.

A copper plate in Tamil, dated A. D. 1722, is edited in this work. This copper plate records a grant to a temple inn at Cidambaram (Tamilnadu State, India) by certain Vaṉṉi chieftains and their officials in memory of Kayilāya Vaṉṉiyaṉ, a chieftain of Paṉaṅkāmam (a region in the Vavuniya District). This copper plate is now in the possession of Mr. S. Sivakolunthu of Kaḷḷiyaṅkāṭu, Jaffna District.

Printed in Kandy at the National Printers.
November 1970.

# பொருளடக்கம்


| | |
|---|---|
| அணிந்துரை ... ... ... ... | V |
| முன்னுரை ... ... ... ... | IX |
| கயிலாய வன்னியனார் தர்ம சாதனப்பட்டையம் ... | 1 |
| செப்பேட்டிலுள்ளபடி பாடப்பிரதி ... ... | 51 |
| அடிக்குறிப்பு ... ... ... ... | 57 |
| பிற்சேர்க்கை ... ... ... ... | 63 |
| இந் நூலாக்கத்திற்கு உதவியவை ... ... | 66 |
| செப்பேட்டின் படங்கள் ... ... ... | 71 |
| அட்டவணை ... ... ... ... | 75 |

## இலங்கைப் பல்கலைக் கழகத்து (போராதனை) வரலாற்று விரிவுரையாளர்

## கலாநிதி கா. இந்திரபாலா அவர்கள் அளித்த

# அணிந்துரை

**இந்நூல்** பொதுப்பட ஈழத்துத் தமிழ்ச் சாசனவியல் வரலாற்றிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்துச் சாசனவியல் வரலாற்றிலும் ஒரு குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்த வெளியீடாகும். இலங்கையின் தமிழ்ச் சாசனவியல் வரலாற்றை அறிந்தவர் இதனை விளங்கிக்கொள்வர். பல காலமாகப் புறக்கணிக்கப்பட்டுவந்த இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள் பேராதனை இலங்கைப் பல்கலைக் கழகத்தினர் எடுத்த முயற்சிகளின் பயனாகக் கடந்த பன்னிரண்டு ஆண்டுக் காலத்திலே பெருங் கவனத்தைப் பெற்றுவந்துள்ளன. 1958 இல் பேராசிரியர் செ. பரணவிதான அவர்கள் லங்காதிலகத் தமிழ்க் கல்வெட்டையும், காலஞ்சென்ற பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை அவர்கள் மொரகஹவெலத் தமிழ்க் கல்வெட்டையும் பதிப்பித்து வெளியிட்டதுடன் ஆரம்பிக்கப்பட்ட முயற்சி தொடர்ந்து இலங்கைப் பல்கலைக்கழகத்து வரலாற்றுத் துறையினரால் மேற்கொள்ளப்பட்டுப் பல தமிழ்ச் சாசனங்கள் வெளியிடப்பட்டுள்ளன; இவை அனைத்தும் கட்டுரை வடிவிலே உள்ளன. கட்டுரைகள் மட்டும் எழுதும் கட்டத்திலிருந்து இன்று இலங்கைத் தமிழ்ச் சாசனங்களைப் பற்றித் தனி நூல்கள் எழுதுகின்ற கட்டத்தை நாம் அடைந்துவிட்டோம். திரு. செ. குணசிங்கம் எழுதிய இந்நூல் இலங்கைத் தமிழ்ச் சாசனம் ஒன்றைப் பற்றி எழுதப்பட்ட முதலாவது தனிநூல் என்ற வகையில் ஈழத் தமிழ்ச் சாசனவியல் வரலாற்றிலே முக்கியத்துவம் பெறுகின்றது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் ஐந்து சாசனங்கள் மட்டுமே ஆராய்ச்சியாளராலே அறியப்பட்டிருந்தன. அவற்றுள் மூன்று மட்டுமே தமிழ்ச் சாசனங்கள் (நயினாதீவுக் கல்வெட்டு, உரும்பராய்க் கல்வெட்டு, கள்ளியங்காட்டுப் பரராசசேகரன் பட்டையம்). ஆனால் அண்மைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் பயனாக இன்று யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பதின்மூன்று சாசனங்கள் ஆராய்ச்சியாளருக்குக் கிடைத்துள்ளன. இவற்றுள் ஒன்றை விரிவான விளக்கக் குறிப்புகளுடன் நூல்வடிவிலே வெளியிட்டுள்ளதனாலும் திரு. குணசிங்கத்தின் முயற்சி யாழ்ப்பாணத்துச் சாசனவியல் வரலாற்றில் முக்கியத்துவமுடையது.

கள்ளியங்காட்டில் தற்பொழுது இருக்கும் செப்பேடுகள் இரண்டாகும்: ஒன்று பரராசசேகர மகாராசாவின் பட்டையம் (கி. பி. 1603?). இது முதன் முறையாக 1932 இல் ஈழகேசரியில் பதிப்பிக்கப்பட்டது. மற்றது, இந்நூலின் பொருளாக அமைகின்ற பட்டையம். இது இற்றைக்கு 250 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டது; வட இலங்கையின் வன்னிச் சிற்றரசுகளைச் சேர்ந்த அதிகாரிகள் சிலர் சிதம்பரத்தி

லிருந்த மடம் ஒன்றுக்கு அளித்த தானத்தைப் பற்றியது இப்பட்டையம். இக்காரணத்தினல் ஈழத்து வன்னிச் சிற்றரசுகளின் வரலாற்றுக்கு இது பயனுள்ள ஓர் ஆதாரமாக முக்கியத்துவம் பெறுகின்றது. இச் செப்பேடு முன்னர் பதிப்பித்து வெளியிடப் படவில்லை.

வட இலங்கை வன்னிப் பிரதேசத்தின் வரலாற்றுக்கு இதுவரை ஒரு சில சாசன ஆதாரங்களே கிடைத்துள்ளன. இவ் வன்னிப் பிரதேசம் மிகப் பழமையான வரலாறுள்ள ஒரு பிரதேசம். கிறிஸ்துவுக்கு முற்பட்ட நூற்றுண்டுகளிலேயே இங்கு சிற்றரசுகள் சில தோன்றியிருந்தன. இற்றைக்கு ஈராயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் வன்னியில் நாக மன்னன் என்பானும் அவனுடைய மகள் அநுராதியை மணமுடித்த உத்தி மன்னன் என்பானும் ஆட்சி நடத்தியது பற்றிப் பெரிய புளியங்குளத்திலுள்ள நான்கு கல்வெட்டுக்கள் மூலம் அறிகின்றோம். இவர்கள் காலத்திலே வன்னியிலிருந்த தமிழ் வணிகன் விசாகன் போன்ற பல பிரமுகர்கள் பற்றியும் பிறர் பற்றியும் அறிவதற்கு இதுவரை 54 கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. இவர்கள் காலத்தின் பின் வன்னிப் பிரதேசத்திலிருந்த சிற்றரசுகள் வீழ்ச்சியடைய அநுராதபுர மன்னரின் ஆதிக்கம் அங்கு பரவியது. அநுராதபுரத்தின் வீழ்ச்சிவரை இந்நிலையே காணப்பட்டது என்று கொள்ளமுடியும்.

பொலன்னறுவையில் முதலிலே சோழரும் பின்னர் சிங்கள, கலிங்க, பாண்டிய மன்னர்களும் ஆட்சிநடத்திய காலத்தில் இவ்வன்னிப் பிரதேசம் முக்கியத்துவம் வாய்ந்த சம்பவங்கள் நடைபெற்ற ஒரு பிரதேசமாக விளங்கினலும், பொலன்னறுவையின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட பிரதேசமாகவே இருந்துவந்தது. பதின்மூன்றும் நூற்றுண்டின் முதலாங் காலில் நடைபெற்ற அரசியல் இயக்கங்களின் விளைவாக வன்னிப் பிரதேசத்தில் மீண்டும் சிற்றரசுகள் தோற்றம் பெற்றன.

இவ்வாறு மீண்டும் தோன்றிய சிற்றரசுகளே நாம் அறியும் வன்னிச் சிற்றரசுகள். இச் சிற்றரசுகளை ஆண்ட வன்னியர் என்போர் தென்னிந்தியாவிலிருந்து வந்தவர்கள் என அறிய முடிகின்றது. தென்னிந்தியாவில் சோழர் ஆட்சியின் முற்பகுதியிலே வன்னியர் பற்றிய குறிப்புக்கள் கல்வெட்டுக்களிலே இடம்பெறத் தொடங்கினலும், 12 ஆம் நூற்றுண்டின் பிற்பாதியிலேதான் அங்கு தோன்றிய வன்னிச் சிற்றரசர்களைப்பற்றிய தகவல்கள் கல்வெட்டுக்கள் வாயிலாக வெளிப்படுகின்றன. இத்தகைய சிற்றரசுகள் ஒரு பேரிராச்சியத்தின் வலிமை குன்றி மத்திய அரசாங்கம் தளர்ச்சியடையும் காலத்திலேதான் தோன்றுவது வழக்கம். அவ்வாறே, கி. பி. 1163 க்கும் 1216 க்கும் இடையிலே இரண்டாம் ராஜாதிராஜனும் மூன்றும் குலோத்துங்கனும் சோழநாட்டை ஆண்ட போது, சோழப் பேரரசின் வலிமை குன்ற, அப்பேரரசின் எல்லைப் புறங்களிலே, குறிப்பாகத் தொண்டை மண்டலத்தில், வன்னிச் சிற்றரசர்கள் எழுச்சிபெறுவதைக் காணலாம். தென்னிந்தியாவில் வன்னிச் சிற்றரசுகள் எழுச்சிபெறுவதற்கு முன்பே இலங்கையில் வன்னியருடைய சிற்றரசுகள் தோன்றிவிட்டன என்று கூறுவதற்கில்லை. இலங்கையில் பன்னிரண்டாம் நூற்றுண்டின் பிற்பாதியிலே வலிமை வாய்ந்த மன்னர் இருவர் பொலன்னறுவையில் இருந்து ஆட்சி நடத்தினர். இவர்கள் முதலாம் பராக்கிரமபாகுவும் நிஸ்ஸங்கமல்லனும் ஆவர். இவர்களுடைய ஆட்சியின்போது, பொலன்னறுவைக்கு மிக அண்மையில் அமைந்துள்ள வன்னிப் பிரதேசங்களில் சிற்றரசர்

எழுச்சிபெற்றிருந்தனர் என்று கூறுவதற்குச் சான்றில்லை. அப்படியான சிற்றரசருடைய எழுச்சி பதின்மூன்றாம் நூற்றாண்டின் முதற்காலில் மாகன் போன்றோருடைய ஆட்சியின்போதே ஏற்பட்டது என்று கொள்வதற்கே சான்று கிடைக்கின்றது. மாகன் போன்றோர் வன்னியரைத் தம் படைகளிலே சேர்த்துக் கூட்டிவந்திருந்தனர். இவ் வன்னியப் படைகளுக்கும் பதினோராம் பன்னிரண்டாம் நூற்றாண்டுகளிலே இலங்கைக்குக் கூட்டிவரப்பட்ட வேளைக்கார, அகம்படிப் படைகளுக்கும் இடையிலே பல ஒற்றுமைகள் இருப்பதனால் மட்டும் இப்படைகள் எல்லாம் ஒன்று என்று கொள்ளுவது பிழை. வன்னியர் தோற்றம் பற்றிய கட்டுக்கதைகள் எத்தகையவையாக இருந்தாலும் தற்பொழுது கிடைக்கின்ற சான்றுகளைக்கொண்டு வன்னிச் சிற்றரசர்களுடைய எழுச்சி தென்னிந்தியாவில் பன்னிரண்டாம் நூற்றாண்டுக்கு முன்னர் ஏற்பட்டது என்றோ இலங்கையில் பதின்மூன்றாம் நூற்றாண்டுக்கு முன்னர் ஏற்பட்டது என்றோ விஞ்ஞான ரீதியாக வரலாற்றாராய்ச்சியை மேற்கொள்ளும் எவரும் கூறி நிறுவுவது கஷ்டமாகும்.

பதின்மூன்றாம் நூற்றாண்டிலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை வட இலங்கையில் வன்னிச் சிற்றரசுகள் இருந்திருக்கின்றன. யாழ்ப்பாணத்து அரசர், கோட்டை அரசர், கண்டி அரசர், போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆகிய வல்லரசர்க்கு மாறி மாறித் திறை செலுத்தி, வட இலங்கை வரலாற்றிலே ஒரு தனிப்பட்ட பங்கினைப் பெற்று, ஆங்கிலேயர் காலம்வரை அதிகாரத்துடன் வன்னிச் சிற்றரசர் விளங்கியுள்ளனர். இவர்களுள் கயிலாய வன்னியன், காக்கை வன்னியன், பண்டார வன்னியன் ஆகியோர் பலவகையாலும் முக்கியத்துவம்பெற்று நாட்டோடி மரபிலும் இடம்பெற்று விட்டனர். இவ்வன்னி அரசுகளின் வரலாறு தனியாக ஆராயப்படவேண்டியது. இது சம்பந்தமாக இதுவரை ஒருசில கட்டுரைகளே கருத்திற் கொள்ளத்தக்க ஆராய்ச்சி வெளியீடுகளாக வந்துள்ளன.

திரு. குணசிங்கம் மேற்கொண்ட ஆராய்ச்சி பதினேழாம் நூற்றாண்டின் இறுதிக் காலிலும் பதினெட்டாம் நூற்றாண்டின் முதற்காலிலும் வன்னிப் பிரதேசத்தில் இருந்த அரசியல், பொருளாதார நிலை சம்பந்தமான தகவல்கள் பலவற்றை வெளிப்படுத்தியுள்ளது. வன்னியின் வரலாற்றை ஆராய முற்படுபவர்களை எதிர்நோக்கும் பிரச்சினைகளும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

தனது எம். ஏ. ஆய்வுரையை எழுதுவதற்காகப் பதின்மூன்றாம் நூற்றாண்டுப் பாண்டிநாட்டு வரலாற்றை ஆராய்ந்து இரண்டு ஆண்டுகளுக்குள் ஆய்வுரையை எழுதி முடித்த சிறப்பைப்பெற்ற திரு. குணசிங்கம் இந் நூலைப் பாராட்டத்தக்க முறையிலே எழுதியுள்ளார் என்பதை நடுநின்று வாசிப்பவர்கள் மறுக்கமாட்டார்கள். மேலும் திரு. குணசிங்கம் சர்வதேச ஆராய்ச்சியாளர் பயன்படுத்தும் MLA அடிக்குறிப்பு முறையை அனுசரித்திருப்பதும் போற்றத்தக்கது.

இளம் ஆராய்ச்சியாளராக இந்நூலை வெளியிடும் திரு. குணசிங்கம் மேலும் பல ஆராய்ச்சி வெளியீடுகளை வெளியிட்டுக்கொண்டே செல்வார் என எதிர்பார்க்கின்றேன்.

இலங்கைப் பல்கலைக்கழகம், கா. இந்திரபாலா
பேராதனை,
15 ஒக்டோபர், 1970.

# முன்னுரை

வட இலங்கை வரலாற்றில் வன்னியர் என்போர் ஏறக்குறையப் பதின்மூன்றும் நூற்றுண்டளவிலிருந்து குறிப்பிடத்தக்க பங்கை வகித்து வந்திருக்கிருர்கள். பொலன்னறுவை இராச்சியத்தின் வீழ்ச்சியைத் தொடர்ந்து தமது ஆதிக்கத்தை வட பகுதியில் ஏற்படுத்த முயன்ற வன்னியர்கள், போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆகியோர் இலங்கையில் அதிகாரம் செலுத்திய காலங்களில் அவர்களின் அதிகாரத்துக்கு முற்ருகக் கீழ்ப்படிய மறுத்தவர்களாய் அவர்களுக்குத் திறை செலுத்துவதோடு தமது நிலையினைப் பாதுகாத்திருந்தனர். அன்னிய ஆட்சியாளர்களின் ஆதிக்கத்திற்கு அடங்க மறுத்தவர்களில் கயிலவன்னியன், பண்டார வன்னியன் என்போர் குறிப்பிடத்தக்கவர்களாக விளங்குகின்றனர்.

இலங்கையின் ஏனைய பகுதிகளின் வரலாறு ஆராயப்பட்டது போன்று வன்னிநாட்டின் வரலாறு இதுவரை யாராலும் ஆழமான முறையில் ஆராயப்படவில்லை எனலாம். இதுவரையில் வன்னியர் பற்றிச் சில நூல்கள் எழுதப்பட்டிருந்த போதிலும் அவை அறிவியல் ரீதியாக ஆராயப்பட்டு எழுதப்பட்ட நூல்கள் எனக் கூறுவதற்கில்லை. வன்னியர்கள் பற்றிக் குறிப்பிடத்தக்களவிற்கு அறிவியல் ரீதியான கட்டுரைகள் ஒரு சிலவே வெளிவந்துள்ளமையைக் கவனிக்க முடிகின்றது. வன்னியர்கள் பற்றி இதுவரையில் வெளிவந்த கட்டுரைகளுள் பேராசிரியர் சி. அரசரத்தினம் அவர்கள் எழுதிய 'வட இலங்கையில் வன்னியர்கள்' (The Vanniar of North Ceylon) என்ற கட்டுரையும் கலாநிதி கா. இந்திரபாலா அவர்கள் எழுதிய "இலங்கையில் தமிழ் வன்னிபங்களின் தோற்றம்" (The Origin of the Tamil Vanni Chieftaincies) என்ற கட்டுரையும் குறிப்பிடத்தக்கவையாகும். மேற்கொண்டு வன்னியர்களது வரலாற்றை ஆராய்வதற்குக் குறிப்பிட்ட கட்டுரைகள் உதவியாகவுள்ளன.

மேலே கூறியவாறு, இலங்கையின் ஏனைய பகுதி வரலாறு ஆராயப்பட்டதுபோன்று வன்னி நாட்டின் வரலாறுபற்றி இதுவரை அறிவியல் ரீதியாக - ஆழமாக ஆராயப்படாமைக்கு முக்கிய காரணமாகக் கூறிக்கொள்ள முடிவது, ஏனைய பகுதிகளின் ஆராய்ச்சிக்குக் கிடைத்ததுபோன்று வன்னியர் பற்றிய ஆராய்ச்சிக்குப் போதுமான ஆதாரங்கள் கிடைக்கவில்லை என்பதேயாகும். சம காலத்துக்குச் சேர்ந்த ஒல்லாந்த அறிக்கைகளைத் தவிர இலக்கியச் சான்றுகள் எனக் கூறத்தக்கவை மிக அருமையாகவே உள்ளன. இலக்கியச் சான்றுகளைப் போன்றே, வன்னியர் பற்றிய சாசனச் சான்றுகளும்

மிக அருமையாகவுள்ளன. குறிப்பாகக் கூறுமிடத்து ஒரு சில சாசனங்களே அதாவது வெருகல் கல்வெட்டு, கங்குவேலிக் கல்வெட்டு, கள்ளியங்காட்டுச் செப்பேடு ஆகியனவையே கிடைக்கின்றன.

மேலே கவனிக்கப்பட்ட சாசனங்களுள் வன்னியர்களின் வரலாற்றைப் பொறுத்து, நாம் ஆராய்ந்த கள்ளியங்காட்டுச் செப்பேடு குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்தினைப் பெறுவதைக் காணலாம். இதற்கு முக்கியமாக இரு காரணங்களைக் குறிப்பிடலாம். முதலாவதாக ஏனைய சாசனங்களைவிட இச் சாசனத்தில் வன்னியர் பற்றி அதிகமான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது. இரண்டாவது, சமகாலத்து ஒல்லாந்தக் குறிப்புகளில் வன்னியர் பற்றி இடம்பெறும் குறிப்புகள் சிலவற்றை உறுதிப்படுத்துவதற்கு உதவியாக இருக்கும் இதுவரை கிடைத்த ஒரேயொரு சாசனம் இதுவேயாகும்.

இச் சாசனத்தைப் பதிப்பிப்பதில் சமகாலத்தைச் சேர்ந்த ஒல்லாந்தக் குறிப்புகள் பெரிதும் உதவியாக இருந்தன. சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளில் பலரை ஒல்லாந்தக் குறிப்புகளில் காணப்படும் அதே பெயருள்ள அதிகாரிகளுடன் அடையாளங் கண்டுகொள்ள முடிந்தது. அடையாளங்கண்டுகொள்ள முடிந்த அதிகாரிகளின் நடவடிக்கைகள் பற்றி இப்பதிப்பில் தனித்தனியே எடுத்துக் கூறப்பட்டுள்ளன. மற்றும் இச் சாசனத்தின் உதவிகொண்டு 18 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வட இலங்கையில் நிலவிய நிர்வாக அம்சங்கள் பற்றியும் இந்த நிர்வாகத்தில் காணப்பட்ட தென்னிந்தியச் செல்வாக்குப் பற்றியும் கவனிக்க முடிந்தது. பொதுவாக இச்சாசனம், குறிப்பிட்ட காலமளவில் வன்னிநாட்டிலிருந்த பிரிவுகள், நிர்வாக அம்சங்கள், வன்னியர்களின் அரசியல், மத நடவடிக்கைகள், ஆகிய விடயங்களை அறியப் பெரிதும் உதவுகின்ற காரணத்தினால், இப்பதிப்பு இனிமேல் வன்னியர்களின் வரலாற்றை எழுத இருக்கும் எவருக்கும், பெரிதும் உதவியாக இருக்குமென்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இச் சாசனத்தின் பதிப்பு கட்டுரை வடிவில் சிந்தனை, மலர் 4, இதழ் 1 & 2 (ஜனவரி - ஜூலை 1971) இலும் வெளிவருகின்றது.

குறிப்பிட்ட சாசனம்பற்றி ஆரம்பத்தில் ஒரு சிறு கட்டுரை எழுத வேண்டும் என எண்ணியபோது, அச்சாசனத்தில் மிக முக்கியமான சில பகுதிகள் விரிவாக ஆராயப்படவேண்டும் என்பதனை எடுத்துக்கூறி, அவற்றை ஆராய்ந்து இந்நூலைப் படைப்பதற்குப் பெருமளவிற்கு உதவிபுரிந்தது மாத்திரமன்றி இந்நூலுக்கான ஒரு அணிந்துரையை அளித்து இந் நூலைச் சிறப்பித்தமைக்காகவும் எனது மதிப்பிற்குரிய ஆசிரியர் கலாநிதி கா. இந்திரபாலா அவர்களுக்கு என்றும் கடமைப்பட்டுள்ளேன். இந் நூலின் பொருளாக அமைந்த குறிப்பிட்ட செப்பேட்டைப் பார்வையிடுவதற்காக அதனைக் கேட்டபோது உள்ளன்போடு அச்செப்பேட்டை எனக்குக் காட்டியது மன்றி அச் செப்பேட்டின் வரலாற்றை அறிந்துகொள்வதற்குச் சில தகவல்களைத்

தந்துதவிய, கள்ளியங்காட்டைச் சேர்ந்த ஓதுவார் சிவக்கொழுந்து அவர்களுக்கும் எனது நன்றியுரியதாகும். மேலும் இச் செப்பேட்டில் இடையிடையே சில பகுதிகள் விளங்காதபோது அவற்றை விளங்கிக்கொள்வதற்கு உதவிபுரிந்த கொழும்புப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த T. B. H. அபெயஸிங்ஹா, மற்றும் கலாநிதி வா. கணபதிப்பிள்ளை, திரு. சி. தில்லைநாதன் ஆகியோருக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இலங்கைப் பல்கலைக்கழகம்,
பேராதனை.
17 - 10 - 1970

செ. குணசிங்கம்

---

# [1]

# கயிலாய வன்னியனார் சிதம்பர தருமசாதனப் பட்டையம் (1722)

வன்னி நாட்டுச் சிற்றரசன் ஒருவன் சிதம்பரத்துக்குத் தானமளித்த செய்தி பற்றிக் குறிப்பிடுகின்ற செப்பேடு ஒன்று யாழ்ப்பாணத்தில் இருக்கின்றதென்பதனை அறிந்தபோது சாசனங்களை ஆராய்வதிற்கொண்ட ஆர்வம் காரணமாக, அக் குறிப்பிட்ட செப்பேட்டினைப் பெறுவதற்கு முயற்சித்தேன். இந்தச் செப்பேடு கள்ளியங்காட்டில் வசிக்கும் ஒதுவார் சிவக்கொழுந்து என்பவரிடம்[1] இருக்கின்றதென்பதனை அறிந்து அவரிடம் சென்று குறிப்பிட்ட செப்பேடுபற்றி விசாரித்தபோது அச்செப்பேடுபற்றிய விபரமான விளக்கங்களை அவர் அளித்ததோடு, யாழ்ப்பாண மன்னன் ஒருவனான பரராசசேகரன் சிதம்பரத்துக்குத் தானமளித்த செய்திபற்றிக் குறிப்பிடும் இன்னொரு செப்பேட்டையும் எனக்குக் காட்டி உதவினார். சிவக்கொழுந்து என்பவர் பழைய வரலாற்றை ஆராயும் ஆர்வம் உடையவராகவும், பழைய எழுத்துக்களை வாசிக்கும் ஆற்றல் ஓரளவு உடையவராகவும் இருந்த காரணத்தினால், அவர் தம்மிடமிருந்த செப்பேடுகளை மிகவும் கவனமாகப் பாதுகாத்து வைத்திருந்தார். சிவக்கொழுந்து அவர்கள் என்னிடம் காட்டிய இரு செப்பேடுகளின் வரலாறுபற்றி அவரிடம் பல மணிநேரம் உரையாடிக்கொண்டிருந்தபோது இந்த இரு செப்பேடுகளில் ஒன்று ஏற்கனவே பத்திரிகை ஒன்றில் பிரசுரிக்கப்பட்டது எனக் கூறினார். ஒதுவார் சிவக்கொழுந்து கூறியதனை அக்கறையோடு அவதானித்து அவர் கூறிய பத்திரிகை எது என்பதனையும் இரண்டு செப்பேடுகளிலும் பிரசுரிக்கப்பட்ட செப்பேடு எது என்பதனையும் அறிய அவாவினேன். இச் சந்தர்ப்பத்தில், அப்போது வெள்ளவத்தையில் வசித்த நெ. வை. செல்லையா என்பவர், ஒதுவார் சிவக்கொழுந்து என்பவரின் தந்தையாராகிய சிவஞானம் என்பவருக்கு 9-9-1932 எனத் தேதியிட்டு எழுதிய கடிதம் ஒன்றை எனக்குக் காட்டினார். அக்கடிதத்தின் ஆரம்பத்தில் பின்வருமாறு குறிப்பிடப் பட்டிருந்தது:

"மகா கனம் பொருந்திய ஓதுவாமூர்த்தி சிவஞானம் அவர்களுக்கு எழுதிக்கொண்டது,

ஐயா,

ஈழகேசரி ஆவணி மீ 20 திகதிப் பத்திரிகையில் 'பரராசசேகரன்' என்ற விஷயம் ஒருவரால் எழுதப்பட்டிருக்கிறது. அதில் ஒரு சாசனம் வெளியிடப் பட்டு அது தங்களிடம் இருப்பதாக அதன் பிரதியும் வெளியிடப்பட்டிருக்கிறது."[1அ]

மேலே குறிப்பிட்ட கடிதச் செய்தியிலிருந்து செப்பேடு பிரசுரிக்கப்பட்ட பத்திரிகையின் விபரத்தினையும் பிரசுரிக்கப்பட்ட பட்டையம் எது என்பதனையும்

அறிய முடிந்தாலும் இவ் விபரங்களை உறுதிப்படுத்த விரும்பிக் குறிப்பிட்ட கால ஈழகேசரிப் பத்திரிகையைப் பார்வையிட்டேன். அவ்வாறு பார்த்தபோது பத்திரிகையில் வெளிவந்த சாசனப் பிரதி, பரராசசேகர மகாராசா அளித்த தானம்பற்றிக் குறிப்பிடும் செப்பேட்டினுடையது என்பதனைக் கண்டுகொண்டேன்[1ஆ]. ஈழகேசரிப் பத்திரிகையில் இப்பட்டையம் பிரசுரிக்கப்பட்ட வரலாற்றைப் பின்னர் ஓதுவாரிடம் விசாரித்தபோது அவர், அப்போது கள்ளியங்காடு சைவ வித்தியாசாலை உதவி ஆசிரியராக இருந்தவரும் மீசாலையைச் சேர்ந்தவருமான வீ. நடராசா என்பவர் ஓதுவாரிடமிருந்த இரு செப்பேடுகளையும் பார்வையிடுவதற்காக வாங்கிச் சென்றார் என்றும் அதில் ஒரு செப்பேடுபற்றி ஈழகேசரிப் பத்திரிகையில் எழுதினார் எனவும் கூறினார். கயிலாய வன்னியனார் தானமளித்த செய்திபற்றிக் குறிப்பிடுகின்ற செப்பேடுபற்றியும் இதுவரை யாராலும் எழுதப்பட்டுள்ளதா என ஓதுவாரிடம் விசாரித்தபோது அவர், தான் அறிந்த வரையில் அதுபற்றி யாரும் இதுவரை எழுதியிருக்கவில்லை எனக் கூறினார். நாம் இங்கு குறிப்பிடும் இரு செப்பேடுகளையும் பார்க்கும்போது இவ்விரண்டினுள்ளும், பரராசசேகர மகாராசாவின் தானம்பற்றிக்குறிப்பிடுகின்ற செப்பேடு மிகவும் தெளிவானதாகப் பொறிக்கப்பட்டிருக்கின்றது. அடுத்த செப்பேட்டின் ஆரம்பப்பகுதி நெருக்கமாக எழுதப்பட்டுள்ள காரணத்தினால் அப்பகுதி ஓரளவு தெளிவில்லாமல் காணப்படுகின்றது. இவற்றைக்கொண்டு கவனிக்கும்போது, இப் பட்டையங்களைப் பார்வையிட்டோர், தெளிவாக அமைந்துள்ள பரராசசேகரனின் தானம்பற்றிய செப்பேட்டினையே முதலில் விரும்பிப் பிரசுரித்திருக்கவேண்டும் எனத் தெரிகின்றது. கயிலாய வன்னியனார் தருமசாசனப் பட்டையம் இதுவரை யாராலும் பிரசுரிக்கப்படவில்லையாதலால் இக்கட்டுரையே அதுபற்றிய முதல் பிரசுரமாகும்.

## செப்பேட்டின் வரலாறு

இப்பட்டையங்களின் ஆரம்ப வரலாறுபற்றி ஓதுவார் சிவக்கொழுந்து அவர்களிடம் கேட்டபோது அவர், அவற்றின் ஆரம்ப வரலாறு பற்றித் தனக்குத் தெளிவாகத் தெரியவில்லை எனக் கூறினார். அவர் இவற்றின் வரலாறுபற்றிக் குறிப்பிடுகையில், தனது தந்தையாரின் (சிவஞானம்) பேரனான வைரவநாதரின் மகன் சிவசங்கர தம்பிரான் காலத்தில் ஒரு வழக்குச் சம்பந்தமாக இப்பட்டையங்கள் இந்தியாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டவை யெனவும் அவை பின்னர் எவ்வாறு இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டவை எனத் தனக்குத் தெரியாது எனவும் கூறினார். பின்னர் அராலியிலுள்ள காணி ஒன்றின் வழக்குச் சம்பந்தமாகச் சிவஞானத்தின் சகோதரன் சரவணமுத்து, 1907 இல் மீண்டும் இவற்றை இந்தியாவுக்கு எடுத்துச் சென்றார் என்றும் பின்னர் சிறிது காலஞ்செல்லத் தன் தந்தை சிவஞானத்தின் வேண்டுகோளுக்கிணங்க இப்பட்டையங்கள் 1929 ஆம் ஆண்டு மீண்டும் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டன எனவும் கூறினார். இதுபற்றித் தொடர்ந்து அவர் கூறியபோது, தான் தனது தந்தையாரிடமிருந்து பெற்ற செய்தியின்படி, அப்போது மொத்தமாக நான்கு பட்டையங்கள் இருந்தனவென்றும் அவற்றில் இரு பட்டையங்கள் காணமற்போய் விட்டன வென்றும் காணமற்போன பட்டையங்கள், இப்போதுள்ள பட்டையங்களை விடப் பெரிதாக இருந்தன என்றும் மிகவும் கவலை அளிக்கக்கூடிய விதத்தில் கூறினார். இவ்வாறு கூறிக்கொண்டிருந்த சமயம், 1845 ஆம் ஆண்டு எழுதப்பட்ட உறுதியொன்றினை அவர் எனக்குக் காட்டினார். அந்த உறுதியில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

"1845 ஆம் ஆண்டு வைகாசி மீ 16 ந் திகதி அளவெட்டி மடப்பள்ளி ஆறுமுகம் கார்த்திகேசருக்கு சிதம்பரம் அம்பலவாண சுவாமி காரியம் பரராச சேகர மகாராசாவின் கட்டளைப்படி கோயில் தறுமம் மட தறுமம் பராபரிப்பு சுப்பிரமணிய தம்ரபிரான் என தத்துவ உறுதி முடித்துக் கொடுத்தவகை சிதம்பரத் தில் கோயில் தறுமம் மட தறுமமான இதுவரையும் பராபரித்துவந்து இப்போ நான் வயது பின்னிட்டிருக்கிறபடியால் இயாட்பாணத்திலும் மறு ஊர்களிலும் அந்தந்தப் பகுதிக்குட்பட்டிருக்கிற கட்டளைக்குண்டான வருமானமும் சிதம்பரத்தி லிருக்கப்பட்ட வரவு சிலவு எப்பேர்ப்பட்டதுகளும் நான் நடத்திவந்த பிரகாரமாக இது நாள் பிரகாரமாக இது நாள் துவங்கி யாதொரு தவறில்லாமல் இவர் தானேநடப்பித்துவரவும் குறித்த சிதம்பரம் அம்பல சுவாமி பேர்ப்பட்ட காணி உறுதிகளும் முன்னுழையில் பரராசசேகர மகா இராசாவினுடையவும் மற்றும் இராசாக்களினது பட்டயங்களும் இவர் வசமாய்க் கொடுத்து என்றுந் தவறில்லா மல் இவர்தானே நடப்பித்து வரவும் இவருடைய பராபரிப்பின்.............."

மேற்கூறப்பட்ட உறுதிப்பத்திரத்தின் தகவலுக்கிணங்க, இக்குறிப்பிட்ட கால மளவில் இச் செப்பேடுகள் ஆறுமுகம் கார்த்திகேசு என்பவரிடம் இருந்திருக்க வேண் டும் என்பதனையும், இவற்றைவிட வேறும்பல செப்பேடுகள் அவரிடம் இருந்தன என்ப தனையும் கூறமுடிகின்றது. இவற்றைவிட இச் செப்பேடுகளின் ஆரம்ப வரலாறு பற்றி அறிய முடியவில்லை.

## செப்பேட்டு வர்ணனை

கயிலாய வன்னியனார் சிதம்பரத்துக்கு அளித்த தானம்பற்றிய செப்பேடு 1 றுத்தல் 10 அவுன்சு நிறையுள்ளது. இச் செப்பேட்டின் இடதுபக்கம் 24 . 5 செண்டி மீற்றர் நீளமுடையது; வலது பக்கமும் அதே அளவினதாகும். இதன் மேல்பாகம் 20 . 2 செண்டி மீற்றர் நீளமும் அடிப்பக்கம் 19 . 8 செண்டி மீற்றரும் உள்ளது; இதன் கன அளவு மூன்று மில்லி மீற்றராகும். இந்தச் செப்பேட்டின் மேற்பாகத்தில் முடிபோன்று சிறிய பாகம் காணப்படுகின்றது; அது ஏறத்தாழ 5 செண்டி மீற்றர் நீள மும் 4 . 5 செண்டி மீற்றர் அகலமுமுடையது. இச் செப்பேட்டின் முடியின் மேற்பகுதி உடைந்து காணப்படுகின்றது. பொதுவாகச் செப்பேடுகளை ஒன்று சேர்த்துக் கட்டு வதற்காகச் செப்பேட்டின் மேற்பகுதியில் துளையிடுவது வழக்கம். அவ்வாறு துளை யிருந்த பகுதியே இச்செப்பேட்டில் உடைந்து காணப்படுகின்றது. இங்குள்ள முடிப் பாகத்தில் "கயிலை வன்னியனார் மடதற்ம சாதனப் பட்டையம் உ சிதம்பரம்" என எழுதப்பட்டிருக்கின்றது; இச் செப்பேட்டின் மேற்பாகத்தின் இருபக்கங்களிலும் இரு சின்னங்கள் காணப்படுகின்றன; வலது பக்கத்திலுள்ள சின்னம் வைரவ சூலம் ஒன்றை ஒத்திருக்கின்றது; இத்தகையதான சூலம் ஒன்று, பரராசசேகர மகாராசாவின் திருப் பணிபற்றிக் கூறுகின்ற சாசனத்தின் மேற்பாகத்தில் பெரிய அளவில் அமைந்திருக் கின்றதனைக் காணலாம்; இச் செப்பேட்டின் இடதுபக்கத்திலுள்ள சின்னமானது, மேலும் கீழும் சிறு வட்டங்களைக் கொண்டு அவ்விரு வட்டங்களும் இடையே இரு கோடுகளினால் தொடுக்கப்பட்டுள்ளன; அந்தச் சின்னம் எதனைக் குறிக்கின்றது என் பது சரியாக விளங்கவில்லை. சில வேளைகளில் அது சந்திரன், சூரியன் என்ற இரண் டையும் குறிப்பதாக இருக்கலாம்.

முற்காலத்தில், தற்காலம் போன்று செப்பேடுகளை மட்டப்படுத்திடு வெட்டுவதற்கான இயந்திரங்கள் இல்லாதிருந்த காரணத்தினால் கையினாலேயே செப்பேடுகள் வெட்டப்பட்டுச் சமன்படுத்தப்பட்டன. அவ்வாறு செப்பேடுகளை அடித்துச் சமன்படுத்திய பின்னரே அவற்றில் எழுத்துக்களைப் பொறித்தனர். இங்கு நாம் ஆராயும் செப்பேடும் மேற்கூறியது போன்றே சமன்படுத்தப்பட்டு எழுதப்பட்டது. கையினால் சமன்படுத்தப்பட்ட செப்பேடு என்பதனால் இச் செப்பேட்டின் இரு பக்கங்களிலும் இடையிடையே சில மேடுபள்ளங்கள் இருப்பதனைக் காணமுடிகின்றது. மேலே கூறியவாறு இந்தச் செப்பேடு சரியான முறையில் சமமாக்கப்படாதிருந்த காரணத்தினால் ஏற்பட்டிருந்த மேடு பள்ளங்கள், இச் செப்பேட்டின் மைப்பிரதியை எடுத்துக்கொள்வதற்குத் தடையாய் இருந்தன. குறிப்பாக இச் செப்பேட்டின் மேற் பாகத்தில் உள்ள எழுத்துக்கள் ஆழமாகச் செதுக்கப்படாதும் நெருக்கமாகவும் இருந்த காரணத்தினால் மைப் பிரதியின் மேற் பாகம் தெளிவாக விளங்கவில்லை. மேற்பாகத்திலுமுள்ள எழுத்துக்கள் நெருக்கமாக இருந்தாலும் செப்பேட்டின் பிற்பகுதியிலும் மறுபக்கத்திலுள்ள எழுத்துக்கள் பெரிய எழுத்துக்களாகத் தெளிவாய் அமைந்துள்ளன. இதற்குக் காரணமாகக் கூறக் கூடியது-எழுதவேண்டியிருந்த விஷயத்தைச் செப்பேட்டின் ஒரு பக்கத்திலேயே முதலில் எழுத விரும்பியிருக்கவேண்டும். சில வரிகள் எழுதப்பட்டபின்னர், முழு விஷயத்தையும் ஒரு பக்கத்தில் எழுத முடியாது எனக் கண்டு பின்னர் இருபக்கத்திலும் எழுதுவதற்குத் தீர்மானித்திருக்கவேண்டும். இதன் காரணமாகப் பின்னர் எழுதப்பட்டவை பெரிய எழுத்துக்களினால் போதிய இடம்விட்டு எழுதப்பட்டுள்ளன. இதன் காரணமாக மைப்பிரதியின் பிற்பகுதி முற்பகுதியைவிடத் தெளிவாகக் காணப்படுகின்றது.

## செப்பேட்டின் எழுத்து

இச் செப்பேட்டின் இரு பக்கங்களிலும் மொத்தமாக ஐம்பத்தைந்து வரிகள் எழுதப்பட்டுள்ளன. இதன் முதல் பக்கத்தில் நாற்பது வரிகளும் பின் பக்கத்தில் பதினைந்து வரிகளும் உள்ளன. இரண்டாவது பக்கத்தில் ஏறத்தாழ அரைவாசிப் பகுதிவரையே எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. மிகுதிப் பகுதி வெறுமையாகவுள்ளது. இச் செப்பேட்டில் தமிழ் எழுத்துக்களும் கிரந்த எழுத்துக்களும் கலந்து காணப்படுகின்றன. இருந்தும் தமிழ் எழுத்துக்களுடன் ஒப்பிடுகையில் கிரந்த எழுத்துக்கள் மிகக் குறைவானவையாகக் காணப்படுகின்றன. இச் செப்பேடு ஸ்வஸ்தி ஸ்ரீ என்ற கிரந்த எழுத்தினாலான தொடருடன் ஆரம்பிக்கின்றது. முப்பத்தொன்பதாவது வரிவரை இடையிடையே மாத்திரம் கிரந்த எழுத்துக்கள் காணப்படுகின்றன. முப்பத்தொன்பதாவது வரி தொடக்கம் நாற்பத்திமூன்றாவது வரிவரையுள்ள பகுதி பெரும்பாலும் முற்றாகக் கிரந்த எழுத்துக்களினாலேயே எழுதப்பட்டுள்ளது.[3] பின்னுள்ளபகுதி பெரும்பாலும் தமிழ் எழுத்துக்களாலானது. இச் செப்பேட்டிலுள்ள கிரந்த எழுத்துக்கள் எழுதப்பட்டிருக்கும் முறையினைக் கவனிக்கும்போது, இக் கிரந்த எழுத்துக்கள், பெரும்பாலும் கிரந்த எழுத்தில் அதிகம் பயிற்சியில்லாத ஒருவரால் எழுதப்பட்டனவாகத் தெரிகின்றன. இதற்கு எடுத்துக்காட்டாகச் சிலவற்றை நாம் இங்கு கவனிக்கலாம். 'வேங்கடபதி தேவ மஹாராயர் பிருதிவிராஜ்யம்' பண்ணியருளாநின்ற' என்ற தொடரில் பிருதிவிராஜ்யம் என்பது 'வுடலி விராஜ்யம்' என எழுதப்பட்டுள்ளது. இன்னொரிடத்தில் 'பாஷைக்குத் தப்புவராயர் கண்டன்' என்பது 'பாழைக்

குத் தப்புதவராயர் கண்டன்' என உள்ளது. இப்படியான கிரந்த எழுந்துக்களில் வழுக்கள் ஏற்பட்டமைக்குக் காரணம் குறிப்பிட்ட செப்பேட்டைப் பொறித்தவருக்குக் கிரந்த எழுத்தில் அதிக பயிற்சி இல்லாதிருந்தமை எனலாம். அல்லது கிரந்த எழுத்துக்களைப் பொறித்தபோது அதிககவனம் எடுக்காதிருந்திருக்கலாம். இச் செப்பேட்டிலுள்ள எழுத்துக்களையும் கி. பி. பதினைந்தாம், பதினாறும், பதினேழாம் நூற்றாண்டுகளுக்குச் சேர்ந்த சாசனங்களின் எழுத்துக்களையும் கவனிக்குமிடத்து இக் குறிப்பிட்ட சாசனத்திலுள்ள எழுத்துக்கள் வளர்ச்சிபெற்ற எழுத்துக்களாகக் காணப்படுகின்றன. இச் சாசனத்தில் அதன் காலம் குறிப்பிடப்படாதிருந்தாலுங்கூட சாசனத்தின் எழுத்துக்களது துணைகொண்டு இதன் காலத்தைக் கணித்திருக்க முடிந்திருக்கும். இதனால் இச் செப்பேடு, இலங்கையில் சாசனத் தமிழ் எழுத்துக்கள் வளர்ச்சியடைந்த விதத்தினை அறிந்து கொள்வதற்குப் பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியைப் பொறுத்து அதிகம் முக்கியத்துவமுடையதாகக் காணப்படும்.

## செப்பேட்டின் மொழி

இச் செப்பேடு எழுதப்பட்டுள்ள மொழிநடையைக் கவனிக்கும்போது, இதன் நடை தராதர இலக்கியத் தமிழ்ச் சொற்களிலிருந்து பெரிதும் வேறுபட்டுக் காணப்படுகின்றது. இச்செப்பேடு பேச்சு வழக்கில் இடம்பெற்ற நடையில் எழுதப்பட்டுள்ளது. கண்டனொடு, கொண்டனொடு குடாதான், கூடின, பரிபாலனம் பண்ணி, பண்ணின புண்ணியம், போகிற. குடுத்தபடி போன்ற சொற்கள் பேச்சு வழக்கு நடைக்குரிய உதாரணங்களாகும். மேலும் பிரதேச அடிப்படையில் இடையிடையே சொற்திரிபுகள் ஏற்பட்டு இலக்கணப் பிழைகள் உள்ளவையாக அவை விளங்குகின்றன. இதற்குப் பின்வரும் சொற்களை உதாரணங்களாகக் கொடுக்கலாம்.

| சாசனத்திலுள்ள சொற்கள் | | சரியான சொற்கள் |
|---|---|---|
| பூறுவ | (வரி 3) | பூர்வ |
| மூற்தித்தம்பிரான் | (வரி 9, 29) | மூர்த்தித்தம்பிரான் |
| செய்னுதிராய முதலியார் | (வரி 10, 54) | சேனாதிராய முதலியார் |
| அற்தசாமவேளை | (வரி 35) | அர்த்தசாமவேளை |
| தற்மசாதனம் | (வரி 25) | தர்மசாசனம் |
| தற்மத்துக்கு | (வரி 33, 37) | தர்மத்துக்கு |

மேலே குறிப்பிடப்பட்ட சொற்களில் மூற்தித்தம்பிரான், அற்தசாமம், போன்ற சொற்களைக் கவனிக்கையில் 'ற்' என்ற எழுத்து 'ர்த்' என்ற இரு சொற்களுக்குப்பதிலாக இக்காலமளவில் வழங்கப்பட்டிருக்கிறதென்பதனைக் காணமுடிகிறது. இதுபோன்று சாசனம் என்ற சொல்லு சாதனம் என எழுதப்பட்டிருப்பதைக் கவனிக்கையில் இங்கு 'ச' என்ற எழுத்துக்குப் பதிலாக 'த' என்ற எழுத்துப் பிரயோகிக்கப்பட்டுள்ளது. நாம் மேலே கவனித்த மொழிநடை, இலக்கண வழுக்கள், இக்குறிப்பிட்ட காலத்துத் தென்னிந்தியத் தமிழ்ச் சாசனத்திலுள்ள நடையினையும், வழுக்களையும் ஒத்தனவாகக் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக சகாப்தம் 1672க்குச் சேர்ந்த மதுரை ஜில்லாவிலுள்ள சாசனம் (இது கி. பி. 1750க்குச் சரி

யானதாகும்) ஒன்றில் மேலே காட்டிய மொழிநடையைக் காணமுடிகின்றது.[3அ] அதிகமான விஜய நகரச் சாசனங்களின் மொழிநடை, நமது சாசனத்தின் மொழிநடையை ஒத்திருக்கின்ற காரணத்தினால், விஜயநகரச் சாசன மொழி நடையின் செல்வாக்கு, நமது செப்பேட்டில் ஏற்பட்டிருக்க வேண்டும் எனத்தெரிகிறது. நமது இக்கருத்தினை வலுப்படுத்தக்கூடிய விதத்திலே இச்செப்பேட்டின் தொடக்கம் பிரஸஸ்தி வடிவில், அதாவது, ''சிறிமன் மகா மண்டலேசுரன் ஹரிஹராய விபாடன் பாஷைக்குத் தப்புவராயர் கண்டன் மூவராயர் கண்டன் கண்டனாடு கொண்டு கொண்டனாடு குடாதான் பூர்வ தக்ஷிண பச்சிமோத்தரசதுஸ் சமுத்திராதிபதி கஜ வேட்டை கண்டருளிய பதி வேங்கட பதிதேவமகாராயர்' எனப் பிரஸஸ்தித் தொடர் காணப்படுகின்றது. இதே தொடரினைப் பரராசசேகரமகாராசாவின் திருப்பணி பற்றிக்கூறுகின்ற சாசனத்திலும் மாற்றமின்றிக் காணக்கூடியதாக இருக்கின்றது. இக்காலத்துக்குரிய அனேகமான விஜய நகர காலச் சாசனங்களிலும் பிற்பட்ட தென்னிந்தியச் சாசனங்களிலும் இதே போன்ற மெய்க்கீர்த்தியினைச் சாசனங்களின் ஆரம்பத் தொடர்களில் கண்டுகொள்ளலாம். கி. பி. 1760ஆம் ஆண்டுக்குரிய சாசனமொன்றின் ஆரம்பத்தொடர் பின் வருமாறு அமைந்திருப்பதனை நாம் மேலே குறிப்பிட்டுள்ளதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்:

''சிறிமன் மகா மண்டலேசுன் அரியராய தழவிபாடன்
பாஷைக்கு தப்புவராயன் கண்டன் மூவராய கண்டன்
முத்தமிளாயிர கண்டன் கண்டனாடு கொண்டு
கொண்டனாடு குடாதான் பாண்டி மண்டல ஸ்தாபனாசாரி
யன் சோழ மண்டல பிறதிஷ்டா பனாசாரியன் தொண்டை
மண்டல சண்டப்பிழசன்டன்……… எனக் கல்வெட்டுத்

தொடர்ந்து செல்கின்றது[4].

மேலும் இந்தச் சாசனத்தில் இடம் பெறுகின்ற வேறுசில சொற்களும் கருத்தில் கொள்ளத்தக்கவை. இக்கல்வெட்டில் காணப்படும் சகாயம், அகிதம், புத்திர பவுத்திர பாரம் பரியம் போன்ற சொற்கள் பெருமளவு தென்னிந்தியச் சாசனங்களிலே காணப்படுகின்றன; பெரும்பாலும் விஜய நகர காலச் சாசனங்களிலும் பிற்பட்ட சாசனங்களிலுமே அடிக்கடி இடம்பெறுகின்றன; இக் காலத்துக்குச் சிறிது முற்பட்ட, அதாவது பதினேழாம் நூற்றாண்டுக்குரிய சம்பாந்துறைச் செப்பேடொன்றில் 'புத்திர பவுத்திர பாரம் பரியம்' என்பதற்குப் பதிலாகப் 'பிள்ளைமள்ளை தலைமுறைக்கு' என்ற தொடர் காணப்படுகின்றது[5].

இதுவரை நாம் கவனித்த இச்சாசனத்திலுள்ள மொழிநடை, இலக்கண வழுக்கள், மற்றும் சில சொற்கள் என்பவற்றைக் கவனிக்கும்போது இக்காலமளவில் தென்னிந்தியக் கலாச்சாரச் செல்வாக்கு இலங்கையில் ஏற்பட்டிருந்தது எனக்கூற முடிகின்றது.

## செப்பேட்டின் காலம்

இச்சாசனம் பொறிக்கப்பட்ட காலம், இச் சாசனத்தில் குறிக்கப்பட்டிருக்கின்றது; அதாவது, சகாப்தம் 1644ஆகும்; இது கி. பி. 1722க்குச் (1644+78)

சமமானதாகும். இந்த சாசனத்திலே கொடுக்கப்பட்டுள்ள வானசாஸ்திரத் தரவுகளை அதாவது சகாப்தம் 1644 இதன்மேல் செல்லாநின்ற சுபகிருது வருடம் சித்திரை மாதம் இருபத்திரண்டாந் திகதியும் பூர்வ பக்ஷத்தில் பறுவமும் சுவாதி நக்ஷத்திரமும் கூடின சுபதினத்திலே என்பதிலுள்ள குறிப்புக்களைக்கொண்டு இந்தக் கல்வெட்டுக் குறிப்பிடும் காலம் சரியானதா எனக் கவனித்தபோது அதன் காலம் சரியாக இருந்தது.[6] அதே வேளையில் பரராசசேகர மகாராசாவின் திருப்பணி கூறும் சாசனத்திலுள்ள குறிப்புகள் கொண்டு பார்த்தபோது அச்சாசனத்திலுள்ள காலக் குறிப்பு பிழையாக இருந்ததனைக் காணமுடிந்தது. அச்சாசனத்தைப் பொறித்தவர் காலத்தைக் குறித்தபோது தவறுதலாகக் குறித்திருக்கவேண்டுமெனத் தெரிகின்றது. வான சாஸ்திரத் தரவுகளைக்கொண்டு எங்களுடைய செப்பேட்டின் காலத்தைக் கணித்துப் பார்க்குமிடத்து, அது கிறிஸ்தாப்தம் 1722 ஏப்ரில் 19 வியாழக்கிழமை எனக்காணலாம்.

இச்சாசனம் பொறிக்கப்பட்டதன் நோக்கம், பனங் காமப் பத்து வன்னிபம் நிச்சயச் சேனாதிராய முதலியாரவர்களும் குலசேகர முதலியாரவர்களும் கரிக்கட்டு மூலைப்பத்துத் தென்னமரவடிப்பத்து வன்னிபம் புவிநல்ல மாப்பாண வன்னியனாரவர்களும் புண்ணிப்பிள்ளை வன்னியனாரவர்களும் மேல்பத்து வன்னிபம் ரண சூரரண தீர ராக வன்னியரா முதலியாரவர்களும் கந்தயினா வன்னியனாரவர்களும் மேல்பத்து முள்ளியவளை வன்னிபம் இலங்கைனாராயண முதலியாரவர்களும் மயிலாத்தை உடையாரவர்களும் பச்சிலைப்பள்ளி இறைசுவதோர் இலங்கைனாராயண முதலியாரவர்களும் நீலயினா வன்னியனாரவர்களும் மூத்தர்வன்னியனாரவர்களும் மற்றோரும் மற்றும் ஊரிலுள்ள குடியானவர்களும் தங்களின் தலைவரான கயிலாயவன்னியனாரின் பேரில் பரராசசேகர மடத்திற்கு கமத்துக்கு[7] மூன்று மரக்கால் நெல்லுத் தானம் அளித்த செய்தியைக் குறிப்பதற்காகவாகும்.

## பரராசசேகரன் மடம்

மேலே குறிப்பிட்டவர்கள் தானம் கொடுத்த பரராசசேகர மன்னரின் மடம் பற்றிய குறிப்பு, இம்மன்னரின் திருப்பணி கூறும் அடுத்த செப்பேட்டிலும் இடம் பெற்றுள்ளது. இந்தச் செப்பேடுகள் குறிப்பிடுகின்ற பரராசசேகர மடம்பற்றிய குறிப்பு இருபதாம் நூற்றாண்டுக்குரிய நூலொன்றிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது ஈழமண்டலச்சதகம் என்ற நூலில் சிதம்பரதசமடம் என்ற தலைப்பின் கீழ் பின்வரும் பாடல் அமைந்துள்ளது :-

மாமேவி யாழ்ப்பாண பரராசசேகர
மகாராச மணிதிருமட
மறுவின் மானாபரண முதலியார் தருமடமொர்
மதகரிக் கன்றின் மடம்
காமேவு சிவபுரிக் கடுமடம் வரணிகுரு
கட்டுவித் திடு புதுமடங்
காமப் புண்ணிய நாச்சிதருமடஞ் சாயரட்
சைத்திருக் கட்டளைமடம்
சாமேவலில் புகழ்ச் சங்கானை வடமடந்

தாவில் செவ்வாய்க் கிழமைபேர்
சார் மடம் பழமட மொடையிரு மடங்களிவை
சகல சம்பத்துமுடைய
தாமேவுபவர்க்குபா தானமன்னமு மீவர்
சாந்த நாயகி சமேத
சந்த் ரமௌலீசனே யைந்தொழில் விலாசனே
சந்த்ரபுர தலவாசனே.[8]

மேற்கூறப்பட்டதிலிருந்து நாம் அறிய முடிவது என்னவெனில், பிற்பட்ட காலம்வரை யாழ்ப்பாணத்து மன்னரின் மடம் தென்னிந்தியாவில் சிறப்புடன் விளங்கியிருக்கின்றது என்பதாகும். இதிலிருந்து 18-ம் நூற்றுண்டு முற்பகுதியில் யாழ்ப்பாண இராச்சியத்திற்கும் தென்னிந்தியாவுக்கு மிடையில் இருந்த தொடர்பினை அறிய முடிகின்றது. அதாவது 19 ஆம் நூற்றுண்டிலும் இருபதாம் நூற்றுண்டிலும் யாழ்ப்பாண இராச்சியத்திற்கும் தென்னிந்தியாவுக்குமிடையில் ஏற்பட்ட தொடர்புகளை அறிந்து கொள்வதற்கு நமக்கு வேறு ஆதாரங்கள் கிடைக்கின்றபோது, பதினேழாம் நூற்றுண்டிலும் 18 ஆம் நூற்றுண்டின் முற்பகுதியிலும் தென்னிந்தியாவுக்கும் வட இலங்கைக்குமிடையில் இருந்த தொடர்பினை ஓரளவுக்கு அறிந்து கொள்வதில் கயிலாய வன்னியனுர் தருமசாசனமும் பரராசசேகரனது தருமசாசனமும் உதவுவதனைப் பொறுத்து இவை முக்கியத்துவம் பெறுகின்றன எனக் கூறலாம்.

## கயிலாய வன்னியன்

இச்சாசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் அரசனின் பெயர் கயிலாய வன்னியனுராகும். இச்சாசனம் குறிப்பிடுவதனைப் பொறுத்துக் கயிலாய வன்னியனுர் என்பவர் பெருமளவு அதிகாரமுடையவராக இருந்திருக்கின்றுர் என அறிய முடிகின்றது. ஏனெனில் இங்கு, பனங்காமப்பத்து வன்னிபம் நிச்சயச் சேனுதிராய முதலியார், கரிக்கட்டு மூலைப்பத்து தென்னமரவடிப்பத்து வன்னிபம் புவிநல்லமாப்பாண வன்னியனுர், புண்ணிப்பிள்ளை வன்னியனுர், மேல்பத்து வன்னிபம் ரண சூரரணதீரராக வன்னியராய முதலியார், கந்தயினு வன்னியனுர், மேல்பத்து முள்ளியவளை வன்னிபம் இலங்கைனுராயண முதலியார், மயிலாத்தையுடையார், பச்சிலைப்பள்ளி இறைசுவதோர் இலங்கைனுராயண முதலியார், நீலயினு வன்னியனுர், மூத்தர் வன்னியனுர் ஆகியோர் கயிலைப்பிள்ளை வன்னியனுரைத் "தங்கள் கயிலைப்பிள்ளை வன்னியனுர்" என விளித்துக்கொள்வதிலிருந்து பெரும்பாலும் மேலே கூறப்பட்ட அதிகாரிகள் எல்லோரும் கயிலாய வன்னியனுரின் கீழிருந்து கடமை புரிந்திருக்கிறுர்கள் எனத் தெரிகின்றது.

கயிலாய வன்னியனுர்பற்றி இச்சாசனம் தரும் குறிப்பைவிட, இச்சாசனத்துக்கு முற்பட்ட இன்னுேர் கல்வெட்டிலும் கயிலாய வன்னியனுர் பற்றிய குறிப்புக் காணப்படுகின்றது. இக்கல்வெட்டைப் பதிப்பித்த கலாநிதி கா. இந்திரபாலா அவர்கள், அக் கயிலவன்னியன் பற்றிப் பின்வருமாறு கூறியுள்ளார்.

"இக் கல்வெட்டிலே வரும் கயிலவன்னியனுர் என்னும் பெயர் கவனிக்கத்தக்க ஒரு பெயராகும். பதின்மூன்றும் நூற்றுண்டு தொடக்கம் பழைய ராஜரட்டை, மாயரட்டை ஆகிய பிரதேசங்களிலும் கிழக்கிலங்கையிலும் வன்னிச் சிற்றரசுகள் பல தாபிக்கப்பட்டனவென்று இலக்கிய

ஆதாரங்களால் அறிகின்றோம். வன்னியரைக் குறிப்பிடுகின்ற சாசனங்கள் தென்னிந்தியாவில் முதலாம் ராஜராஜ சோழன் காலத்திலிருந்து கிடைத்தாலும் இலங்கையில் அப்படியான சாசனங்கள் மூன்று மட்டுமே இதுவரை கிடைத்துள்ளன. இவை மிகப் பிற்பட்ட காலத்தவையாகும். இவற்றுள் ஒன்று வெருகல் கல்வெட்டு. இதிலிருந்து கயிலைவன்னியனார் என்ற வன்னிச் சிற்றரசன் திருகோணமலை மாவட்டத்திலே பதினாறும் நூற்றாண்டளவில் ஆட்சி புரிந்தான் என்று அறியமுடிகின்றது 'கயில' என்பதை ஹியூநெவில் திருகோணமலை என்று கொண்டு 'கயில வன்னியனார்' என்பவர் திருகோணமலை வன்னியனார் ஆவர் என்று குறிப்பிட்டுள்ளார். 'திருகோணமலைக்குத் தக்ஷிணகைலாசம், தென் கயிலை என்ற பெயர்கள் இலக்கியத்திலே காணப்பட்டாலும் இக் கல்வெட்டிலே கயில வன்னியனார் எனும்போது 'கயில' என்பது வன்னியனாருடைய சொந்தப் பெயராக இருக்கலாம் என்றே தோன்றுகின்றது.''[9]

மேலே குறிப்பிட்ட கல்வெட்டிலுள்ள கயில வன்னியனாரும், நாம் இப்போது ஆராய்கின்ற சாசனத்தில் வரும் கயிலாய வன்னியனாரும் பெயரைப் பொறுத்து ஒற்றுமைப்பட்டாலும் அவர்கள் இருவரும் வெவ்வேறு காலத்தைச் சேர்ந்தவர்கள். ஏனெனில் மேலே கூறப்பட்ட சாசனம் பதினாறும் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். நாம் தற்போது ஆராய்கின்ற சாசனம் கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டின் முற் பகுதியைச் சேர்ந்ததாகும். இவற்றைவிட இலங்கையில் போர்த்துக்கீசராட்சியின் பிற் பகுதியளவிலும் ஒல்லாந்தராட்சியின் ஆரம்பத்திலும் பனங்காமம் என்ற வன்னிப் பிரிவில் கயிலாய வன்னியனார் என்ற மேலாதிக்கம் பெற்றிருந்த அதிகாரி பற்றிய குறிப்பு ஒல்லாந்தரது குறிப்பொன்றில் காணப்படுகின்றது. இக்குறிப்பினை ஆராய்ந்த பேராசிரியர் சி. அரசரத்தினம் பின்வருமாறு எடுத்துக்கூறியுள்ளார்:

''1658 ஆம் ஆண்டு ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தில் படையெடுத்தபோது கயில வன்னி என்பவனே மிகக்கூடிய அதிகாரமுடையவனாக இருந்தான். வன்னி மாகாணங்களுள் செல்வ வளமுடையதும் மிகப் பெரியதுமான பனங்காமம் என்ற மாகாணத்துக்கு இவன் பொறுப்பாக இருந்தான். சமகாலத்தைச் சேர்ந்த ஐரோப்பியர் சிலர் கயிலவன்னியனைப் பற்றிக் குறிப்பிட்டபோது அவனை ஒரு இளவரசன் எனக் கூறியுள்ளனர். மத்திய அதிகாரத்தைப் பொறுத்து இவன் அதனுடன் கொண்ட தொடர்பும் அவன் மத்திய அதிகாரம்பற்றிக் கொண்டிருந்த கருத்தும் இவன் தான் ஒரு இளவரசன் என்ற நிலைக்கு எந்த விதத்திலும் குறைந்தவன் என நினைக்கவில்லை என்பதனைக் காட்டுகின்றன. இவன் போர்த்துக்கீசரின் கீழும் ஒல்லாந்தரின் கீழும் இருந்தபோது, இவனை யாழ்ப்பாணக்கோட்டைக்கு வரவழைக்கும் அவர்களது கட்டளைகளைப் புறக்கணித்தான். ஒல்லாந்தர், போர்த்துக்கீசரிலும் பார்க்கத் தங்களின் சட்டபூர்வமான அதிகாரங்களை நிலைநாட்டுவதில் ஒழுங்காகவும் அக்கறையுடையோராகவும் இருந்த காரணத்தினால், ஆரம்பத்திலிருந்தே இவர்கள் கயில வன்னியனின் அதிகாரத்தை அவன் தங்களில் தங்கியிருக்குமளவிற்குக் குறைக்கவேண்டுமென்ற நோக்கம் கொண்டிருந்தார்கள். குறிப்பாக ஒல்லாந்தர், வன்னியர் தங்களுக்குக் கொடுக்கவேண்டிய கடன்களை, நிலவரிகளை ஒழுங்காகவும் தாமதமின்றியும் பெற்றுக்கொள்வதில் அக்கறையுடையோராக இருந்தனர். தங்களின் அதிகாரத்தை விரிவாக்குவதற்கு ஒல்லாந்தர் மேற்கொண்ட இந்த ஆரம்ப நடவடிக்கைகள், கயிலவன்னியனுடன் அவர்களை முரண்படச் செய்தன. மத்தியரசாங்கத்திற்கு எதிரான எதிர்ப்பில், கயிலவன்னியன் வன்னியர்களுக்குத் தலைமை தாங்கினான். ஏனைய வன்னியர்கள் ஒல்லாந்தரின் கட்டளைகளுக்கு அடிபணிந்து யாழ்ப்பாணத்திற்குச் சென்றாலும், கயிலவன்னியன் ஒருவனே அவ்வாறு கீழ்ப்படிந்து செல்லாதுவிட்டான். அவ்வாறன்றி அவன் பலமாக வருமாறு வற்புறுத்தப்படும்போதெல்லாம் தான் செல்லாது தனக்குப் பதிலாகத் தனது மாமனை அனுப்புவான். கயில வன்னியனைக் கைப்பற்றுவதற்கு ஒல்லாந்தர் பெரிதும் விரும்பியிருக்கவேண்டும். ஆனால் அந்த நேரத்தில் அவர்கள் யாழ்ப்பாணத்துக்குப் படையனுப்ப முடியாது என உணர்ந்தார்கள். இதனால் ஒல்லாந்தர் சில காலத்துக்குக் கயிலவன்னியனைத் தங்களிலிருந்து நீக்கிவைப்பதற்கு இராசதந்திர, நட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சித்தார்கள்.''[10]

மேலே குறிப்பிட்டவாறு கயில வன்னியனின் நடவடிக்கைகளை அவதானிக்கும் போது அவன் மிகவும் அதிகாரம் வாய்ந்த ஒரு சிற்றரசன் என்ற நிலையிலிருந்து போத்துக்கீசர், ஒல்லாந்தர் ஆகியோருக்கு அடிபணியாது ஆட்சி செய்திருக்கிறுன் என்பதனை அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கின்றது; றைக்லொவ் வான் கூன்ஸ் (Rycklof van Goens) என்ற ஒல்லாந்தத் தேசாதிபதி எழுதிய அறிக்கையில், முதலில் அவர் குறிப்பிடும்போது வன்னியர்களின் அடங்காத் தன்மைபற்றிக் குறிப்பிட்டுள்ளார். அதாவது வன்னியர்கள் புகழ்மிக்க ஒல்லாந்தரின் கம்பனிக்கு அடங்க மறுத்துத் தங்களுக்குள் கலகம் செய்தது மாத்திரமன்றி ஒல்லாந்தருக்கும் கொடுக்கவேண்டிய கடன்கள், நில வருமானங்கள் ஆகியவற்றைக் கொடுக்கமறுத்த செயல்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு குறிப்பிடும்போது கயில வன்னியனே பெரும் செல்வம் படைத்தவனுக இருந்தான் என்றும் ஏனையோருக்கு ஒரு பாடமாக அமையுமாறு அவன் அடக்கப்படவேண்டும் எனவும் கூறியுள்ளார்; அவர் தொடர்ந்து கூறுகையில், ஒல்லாந்தர் அவனைத் தங்களின்முன் தோன்றுமாறு கேட்டபோது அவன் தனக்கு வருத்தமெனக் கூறி ஓலை அனுப்பினுன் என்றும் ஈற்றில் அவன் கடுமையான வருத்தத்தால் பீடிக்கப்பட்டிருந்தான் எனத் தெரியவந்தது என்றும் கூறியுள்ளார்; ஏனெனில் அப்போதிருந்த நீர்கொழும்பு முதலியாரின் அறிக்கையின்படி அவன் குஷ்ட வியாதியினுல் (Leprosy) பீடிக்கப்பட்டிருந்தான் என அறிய முடிந்தது.[11]

கயில வன்னியன் உயிரோடு இருந்தபோது அவன் போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆகியோருக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கையிலிருந்து மாத்திரமன்றி அவன் இறந்த பின்னர் ஒல்லாந்தர் மேற்கொண்ட நடவடிக்கையிலிருந்தும் கயில வன்னியன் பெற்றிருந்த அதிகாரத்தை அளவிடலாம். 1678 இல் கயில வன்னியனுக்கு ஏற்பட்ட மரணம், ஒரு அடங்காத்தனமான அதிகாரமுள்ள ஒரு மானியத் தலைவனை - வன்னிப்படைகளை ஒன்று சேர்த்துத் திரட்டிய ஒருவனை வன்னிநாடு இழக்கச் செய்தது[11அ]. கயில வன்னியனின் இறப்பினைப் பயன்படுத்தி ஒல்லாந்தர் பின்னர் தங்களின் அதிகார வளர்ச்சிக்குச் சாதகமான நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள்.[12]

கயில வன்னியனின் ஆட்சியின் முடிவினை அறியமுடிந்தாலும் அவனது ஆட்சி எப்போது ஆரம்பித்தது என அறிந்துகொள்வது கஷ்டமாகும். 1661 ஆம் ஆண்டு அப்போதைய ஒல்லாந்து தேசாதிபதியினுல் எழுதப்பட்ட அறிக்கையில் கயில வன்னியன் பனங்காமப் பகுதியில் அதிகாரமுடையவனுக இருந்தான் என்ற செய்தியை அறிய முடிந்துகொள்வதால் கயிலவன்னியன் ஆட்சி அதற்கு முற்படத் தொடங்கியிருக்கவேண்டும் எனக் கொள்ளலாம்.[13] கயில வன்னியனின் ஆட்சித் தொடக்கத்தை ஓரளவுக்குத் தீர்மானித்துக் கொள்வதற்கு ஒல்லாந்தக் குறிப்பு ஒன்று ஓரளவுக்கு உதவியாக இருக்கின்றது. அதாவது 1661 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இருபத்தாறுந் திகதி றைக்லொவ் வான் கூன்ஸ் தேசாதிபதி தான் எழுதிய அறிக்கையில் கூறியிருப்பது:-

> ''வன்னியர்களைப் பொறுத்தமட்டில் அவர்களைத் தங்களுக்குக் கீழ்படியச் செய்வதில் போர்த்துக்கீசர் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்கினுர்கள். போர்த்துக்கீசர், வன்னியர்களை ஒருபோதும் தங்களின் அதிகாரத்தின் கீழ் கொண்டுவர முடியவில்லை. அதுவுமல்லாமல் போர்த்துக்கீசர் வன்னியர்களைத் தங்களின் முன் அழைப்பதற்குக் கட்டளைகளை அனுப்பினுலும் வன்னியர் அவற்றைப் பொருட்படுத்தவில்லை. இவ்வண்ணம் கயிலவன்னியன் பன்னிரண்டு அல்லது பதினுன்கு வருடங்களுக்கு யாழ்ப்பாணத்துக்கு வரவில்லை.''[14]

மேற் கூறிய ஒல்லாந்தக் குறிப்பினைக் கொண்டு பேராசிரியர் அரசரத்தினம் குறிப்பிட்டதுபோலச் சரியாகப் பதினன்கு வருடங்களாகக் கயில வன்னியன் யாழ்ப் பாணத்துக்குச் செல்லவில்லை[15] என எடுக்க முடியாவிட்டாலும் ஏறக்குறையப் பதி னன்கு வருடங்களுக்கு அவன் போர்த்துக்கீசரின் கட்டளைகளைப் புறக்கணித்து யாழ்ப் பாணத்துக்குச் செல்லவில்லை எனக் கூறலாம். போர்த்துக்கீசரின் ஆட்சி முடிவுற்றது 1658 இல் ஆகும். இதனைக்கொண்டு கவனிக்கையில் ஆகக் குறைந்தது 1644 அள விலாதல் (1658 — 14) கயில வன்னியனின் ஆட்சி ஆரம்பித்திருக்கவேண்டும். ஆனல் அதனை அறிந்து கொள்வதற்குப் போதிய தகவல்கள் தற்போதைய நிலையில் கிடைக்க வில்லை. அவனின் ஆட்சியின் ஆரம்பம் என நாம் தற்போது அறியக் கூடிய காலப் பகுதி 1644 ஆம் ஆண்டளவிலாகும். போர்த்துக்கீசரின் ஆட்சியின்போதே வன்னிப் பிரிவுகளுள் பனங்காமம் என்ற பிரிவும் இருந்திருக்கின்றது, என்பதனை நாம் அறிவ தால் 1644 ஆம் ஆண்டளவிலிருந்து கயில வன்னியனின் ஆட்சி பனங்காமம் என்ற பகுதியில் இருந்து வந்தது எனக் கொள்ளலாம்.

மேலே நாம் கவனித்த கயில வன்னியன் 1678 ஆம் ஆண்டில் இறந்த பின் னர் அதே பெயருள்ள அதிகாரம் வாய்ந்த இன்னேர் கயில வன்னியன் வன்னியருக் குத் தலைமை தாங்கி ஆட்சி புரிந்தான் என்பதனை அறியமுடியவில்லை. இதனைக் கவ னிக்கும்போது நாம் இப்போது ஆராய்கின்ற சாசனம் குறிப்பிடுகின்ற அரசனன கயிலாய வன்னியனும் மேலே நாம் கவனித்ததுபோல் போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆகியோருக்கு அடியணியாது ஆட்சிபுரிந்த கயில வன்னியனும் ஒருவனக இருந்திருக்க வேண்டும் எனக் கொள்ள இடமுண்டு. ஆனல் இந்த இடத்தில் கவனிக்க வேண்டிய இன்னென்று – நாம் முன்னர் கவனித்ததுபோன்று பதினறும் நூற்றண்டுக்குரியதாகக் கூறப்படும் வெருகல் சாசனத்தில் கயில வன்னியன் என ஒருவன் குறிப்பிடப்படுகின் றன். இதனல் கயில வன்னியன் என்ற பெயரையுடையவர்கள் வெவ்வேறு காலப் பகுதியில் இருந்திருக்கிறர்களே எனத் தெரிகின்றது. இதனல் பதினெட்டாம் நூற்றண் டின் ஆரம்பத்திலும் கயில வன்னியன் என்ற பெயருடைய ஒருவன் இருந்திருக்க லாம் என எண்ணத் தோன்றுகின்றது. இருந்தும் நாம் இங்கு கவனித்துக்கொள்ள முடிவது உண்மையில் கயில வன்னியன் என்ற பெயருள்ள வலிமையுள்ள ஒரு சிற்றர சன் பதினெட்டாம் நூற்றண்டின் ஆரம்பத்தில் இருந்திருந்தால், ஏனைய அதிகாரிக ளின் பெயர்கள் அறியப்படுவதுபோல அவனது பெயரும் அறியப்பட்டிருக்கலாம். நாம் முன்னர் கூறியதுபோன்று செப்பேட்டிலுள்ள கயில வன்னியன் பலதரப்பட்ட அதிகாரிகளுக்குத் தலைவனக இருந்தவன் என அறிய முடிவதால் இவன் அதிகாரம் வாய்ந்த ஒருவன் என்பதும் 1678 இல் மரணமான கயில வன்னியனும் இவனும் ஒருவனே என அடையாளங் கண்டு கொள்வதும் பொருத்தமானவையாகும். 1678 இல் கயில வன்னியனுக்கு ஏற்பட்ட மரணத்தையும் இங்கே ஆராயப்படும் சாசனம் 1722 இல் எழுதப்பட்டமையையும் கவனிக்குமிடத்து, இச்சாசனம் குறிப்பிடுகின்ற தானம், கயில வன்னியன் உயிரோடு இல்லாத சமயத்தில், அவனின்கீழ் கடமை புரிந்த பலதரப்பட்ட அதிகாரிகளினல் தங்களின் தலைவனின் நினைவாகக் கொடுக்கப் பட்டதொன்றக அறிய முடிகின்றது. அதாவது ஏற்கனவே தானம் அளிக்கப்பட்டு அதுபற்றிய குறிப்பு பிற்பட்ட காலத்தில் வரையப்பட்டிருக்கலாம். செப்பேட்டி லுள்ள தகவல்கள் சிலவற்றை மேலும் கவனிக்குமிடத்து நமது மேற்படி கருத்து ஓரளவுக்கு உறுதிப்படுத்தப் படுவதனைக் காணலாம், செப்பேட்டின் முடிபோன்று

அமைந்த பகுதியில் ''கயிலாய வன்னியனூர் மடதர்ம சாதனப்பட்டையம்'' என எழுதப்பட்டுள்ளது. கயில வன்னியன் உயிரோடு இருந்த சமயத்தில் இத்தானம் கொடுக்கப்பட்டிருந்தால் செப்பேட்டின் ஆரம்பத்தில் ''கயிலாய வன்னியனூருடைய மடதர்ம சாசனப்பட்டையம்'' என எழுதப்பட்டிருந்திருக்கலாம். இது பலமற்ற ஆதாரமாக இருந்தாலும் நமது மேற்படி கருத்தை உறுதிப்படுத்த ஓரளவு உதவு மெனலாம். மேலும் நாம் இங்கு கவனித்துக் கொள்ளமுடிவது செப்பேட்டில்தானம் கொடுத்த செய்தியைப்பற்றிக் குறிப்பிடுகையில் அங்கு கூறப்படுவது:-

> ''.........வன்னியனூரவர்களும் இவர்களைச் சேர்ந்த ஊரில் குடியானவர்களும் தங்கள் கயிலைப் பிள்ளை வன்னியனூரவர்கள் மட தருமத்துக்குத் தருமசாதனப் பட்டையங் கொடுத்தபடி.........''என்பதாகும்.

மேற்படி சாசனச் செய்தியைக் கவனிக்கும்போது, இறந்த தலைவன் ஒருவனின் நினைவாக அவனின் கீழ் இருந்த அதிகாரிகள் தானமொன்றை அளித்திருக்க வேண்டும் என அறிந்துகொள்ளலாம். மேலும் நமது கருத்துக்குச் சாதகமாக இன்னோர் உறுதியான சான்றையும் காட்டமுடிகின்றது. அதாவது செப்பேட்டிலிருந்து கயிலாய வன்னியனூர் மடதரும சாதனம் என நாம் அறிந்துகொள்ளுகிறோம். ஒல்லாந்த குறிப்பிலிருந்து கி. பி. 1678 இல் கயிலவன்னியன் இறந்த செய்தியை அறிய முடிகின்றது. மேலும் ஒல்லாந்த குறிப்பிலிருந்து ஏறத்தாழ 1644 ஆம் ஆண்டளவி லிருந்து கயில வன்னியன் பனங்காமப் பகுதிக்கு அதிகாரமுடையவனாக இருந்து வந்தான் என அறியமுடிவதனை முன்னர் கண்டோம். இதே நேரத்தில் சாசனம் தருகின்ற குறிப்பின் பிரகாரம் பனங்காமப் பகுதியில் நிச்சயச் சேனாதிராய முதலியார் என்பவன் அதிகாரியாக இருந்தான் என அறியமுடிகின்றது. தானம் கொடுக்கப்பட்ட காலப் பகுதியில் பனங்காமத்தில் கயில வன்னியன் இருக்கவில்லை என்றும் அப்போது பனங்காமத்தில் நிச்சயச் சேனாதிராய முதலியார் பதவியிலிருந்தார் என்றும் அறிய முடிவதால் இத்தானம் நிச்சயச்சேனாதிராய முதலியாரின் பதவிக்காலத்திலேயே கொடுக்கப்பட்டது என அறியலாம். ஆகவே இந்தச் சான்றும், நாம் முன்னர் தெரிவித்த அதாவது இத்தானம் கயிலவன்னியன் இறந்த பின்னர் அவனது நினைவாகக் கொடுக்கப்பட்ட தானம் என்ற கருத்தினை உறுதிப்படுத்துகின்றது.

மேலே நாம் ஆராய்ந்தவை ஏற்றுக்கொள்ளத்தக்கவையாக இருந்தால், ஒல்லாந்த குறிப்புகள் குறிப்பிடும் கயிலவன்னியனின் அதிகார நிலையை ஓரளவு உறுதிப்படுத்தக்கூடிய செய்திகளைத்தரும் இதுவரை கிடைத்த ஒரே ஒரு சாசனம் இந்தச் சாசனமாகும். அந்த விதத்தில் இச் சாசனம் ஒரு சிறப்பான முக்கியத்துவத்தைப் பெறுகின்றது.

மேலே நாம் ஆராய்ந்தது போன்று இச் சாசனம் குறிப்பிடுகின்ற தானம் கயிலாயவன்னியன் உயிரோடு இல்லாத சமயத்தில் அவன் நினைவாகக் கொடுக்கப்பட்டது என்பதனை அறிந்து கொள்ள முடிந்தாலும் இத்தானம் எந்த ஆண்டில் கொடுக்கப்பட்டது என்பதனை அறிந்துகொள்ளல் கஷ்டமான தொன்றாகும். இருந்தும் சாசனம் கூறுகின்ற மேற்படி தகவல்களிலிருந்தும் ஒல்லாந்தக் குறிப்புக்கள் சிலவற்றின் உதவியுடனும் எக்காலமளவில் இத் தானம் கொடுக்கப்பட்டிருக்கலாம் எனவும் ஓரளவு ஊகித்துக்கொள்ளலாம். இதனால் மேற்கொண்டு இச்சாசனம் தரும் தகவல்களை ஆராயலாம்.

## வன்னி அதிகாரிகள்

மேற்கொண்டு இந்தச் சாசனம் தரும் தகவல்களை நாம் கவனிக்குமிடத்து, இக்காலத்தில் வன்னிப் பகுதியின் சில பிரிவுகள் பற்றியும் அவ்வப்பகுதிகளில் அதிகாரம் பெற்றிருந்த அதிகாரிகள் பற்றியும் இக்காலமளவிலிருந்த சில பதவிப் பெயர்கள் பற்றியும் நாம் அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. இவ்வாறு நாம் அறியும் அதிகாரிகளை ஒல்லாந்தக் குறிப்புகளில் இடம்பெறும் இக்காலத்துக்குரிய அதே பெயர்களையுடைய அதிகாரிகளுடன் அடையாளங்கண்டு அவர்களின் நடவடிக்கைகள் பற்றி ஓரளவு விளங்கிக்கொள்ளலாம். இச் சாசனத்தில் வரும் அதிகாரிகள், இடப்பிரிவுகள், பதவிப்பெயர்கள் பின்வருமாறு :–

| அதிகாரிகள் | இடங்கள் | பதவிப் பெயர்கள் |
|---|---|---|
| (1) நிச்சயச் சேனாதிராய முதலியார் | பனங்காமம் | வன்னிபம், முதலியார் |
| (2) குலசேகர முதலியார் | | முதலியார் |
| (3) புவிநல்ல மாப்பாண வன்னியனார் | கரிக்கட்டு மூலைப்பத்து, தென்ன மரவடிப்பத்து | வன்னிபம் |
| (4) புண்ணிப்பிள்ளை | | |
| (5) ரண சூரரண தீரராக வன்னியனார் | மேல்பத்து | வன்னிபம், முதலியார் |
| (6) கந்தயினா வன்னியனார் | | |
| (7) இலெங்கைனாராயண முதலியார் | மேல்பத்து முள்ளியவளை | வன்னிபம், முதலியார் |
| (8) மயிலாத்தை யுடையார் | | உடையார் |
| (9) இலெங்கைனாராயண முதலியார் | பச்சிலைப்பள்ளி | முதலியார், இறைசுவதோர் |
| (10) நீலயினா வன்னியனார் | | |
| (11) மூத்தர் வன்னியனார் | | |
| (12) கங்காணித் தாண்டவராயன் | | |

மேலே குறிப்பிட்டுள்ள எல்லா அதிகாரிகளையும் அடையாளங்கண்டுகொள்வது கடினமாக இருந்தாலும் கிடைக்கின்ற ஒல்லாந்த குறிப்புகளின் உதவியுடன் பெரும்பாலான அதிகாரிகளை ஒருவாறு அடையாளங் கண்டுகொள்ள முடிகின்றது. ஒல்லாந்தக் குறிப்பிலிருந்து அறிந்துகொள்ள முடிவது, 1678 இல் கயிலவன்னியனுக்கு ஏற்பட்ட மரணத்தைத் தொடர்ந்து பனங்காமப் பகுதியில் ஆதிக்கம் பெற்றவர் தொன் பிலிப் நல்ல மாப்பாணர் என்பவராவார்.[16] கயிலவன்னியன், ஒல்லாந்தரிடமிருந்து தனக்கு அழைப்பு வந்தபோது ஒரு முறை தனது மாமனை அனுப்பினான் எனவும், அந்த மாமன்பற்றி ஒல்லாந்தக் குறிப்புக் கூறுகின்றபோது அவன் மருமகனுக்குப் பின்னர் பதவிக்காகக் காத்திருந்தான் என்றும் குறிப்பிடுகின்றது.[17] இதனால் கயிலவன்னியனின் மரணத்தையடுத்துப் பனங்காமப் பகுதிக்கு அதிகாரம் பெற்ற தொன் பிலிப் நல்லமாப்பாணர், கயிலவன்னியனின் மாமனாக இருந்திருக்கலாம் எனக்கொள்ள இடமுண்டு. இதே வேளையில் இக்காலமளவில் யானை வேட்டைக்குத் தலைவன் என்ற அந்தஸ்தைப் பெற்றிருந்தவன் தொன் பிலிப் நல்ல மாப்பாணரின் மகன் தொன் கஸ்பர் நிச்சயச் சேனாதிராயன் என்பவனாவான்.[18] தொன் கஸ்பர் நிச்சயச் சேனாதிராயனின் மைத்துனன் தொன் பிலிப் இலங்கை நாராயணனாவான்.[19] கயில வன்னியனின் மரணத்தைப் பயன் படுத்தித் தங்களுடைய ஆதிக்கத்தை விரிவுபடுத்தக் கருதி ஒல்லாந்தர் வன்னியர்களுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தில் வன்னியர் சார்பாகக் கைச்சாத்திட்டவர்கள், தொன் கஸ்பர் சிதம்பரப்பிள்ளை, தொன் பிலிப் நல்லமாப்

பாணர் (கயில வன்னியனின் வாரிசு), புண்ணியம்பிள்ளை உடையார், திருக்கைல உடையார் ஆகியோராவர்.[20] இங்கு குறிப்பிடப்படும் புண்ணியம் பிள்ளை உடையாரைச் சாசனம் குறிப்பிடும் புண்ணிப்பிள்ளை வன்னியனுருடன் அடையாளங் கண்டு கொள்ளலாம்.

## தொன் பிலிப் நல்லமாப்பாணர்

நாம் மேலே கவனித்த ஒல்லாந்தக் குறிப்பிற்கிணங்கக் கயில வன்னியனின் இறப்பைத் தொடர்ந்து பனங்காமப் பகுதிக்கு அதிகாரம் பெற்றவர் தொன்பிலிப் நல்ல மாப்பாணராவர். ஆனுல் இங்கு சாசனம் தருகின்ற தகவலைக் கவனிக்கும்போது பனங்காமம் என்ற பகுதிக்கு அதிகாரியாக இருந்தவன் நிச்சயச் சேனுதிராயன் என்பவனுவான். ஒல்லாந்தக் குறிப்பிலிருந்து நிச்சயச் சேனுதிராயன் நல்லமாப்பாணருக்கு மகன் என்பதனை அறிய முடிகின்றது. நாம் இங்கு கவனிக்கும் சாசனத்தில் நல்லமாப்பாணர் பற்றிய செய்தி கூறப்படாமையால் இந்தச் சாசனம் எழுதப்பட்ட போது நல்லமாப்பாணர் அதிகாரத்தில் இல்லாதிருக்கலாம் அல்லது இறந்திருக்கலாம்.[20] அதானம் அளிக்கப்பட்ட காலத்தை அறிந்து கொள்வதற்கு, நல்ல மாப்பாணரின் ஆட்சிக் காலத்தின் இறுதி நமக்கு ஓரளவுக்கு உதவியாக இருக்கும். இருந்தும் அவருடைய ஆட்சியின் முடிவு எப்போது ஏற்பட்டது என அறிவது கஷ்டமாகும். இவரைப் பற்றி நாம் கடைசியாக அறிகின்ற காலம் 1697 ஆகும். அதாவது 1697 ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி ஒல்லாந்தத் தேசாதிபதி எழுதிய அறிக்கையில் தொன் பிலிப் நல்லமாப்பாணர் குறிப்பிடப்படுகின்றுர். அவ்வறிக்கை குறிப்பிடுவதாவது:-

> ‘‘வன்னியர்களான தொன்பிலிப் நல்லமாப்பாணர், தொன் கஸ்பர் இலங்கைனுராயனர், தொன் தியோகோ புவிநல்லமாப்பாணர், அம்பலவாணர் ஆகியோர் மாலை 5 மணிக்குத் தேசாதிபதியின் முன்னிலையில் தோன்றுமாறு கேட்கப்பட்டார்கள். ஆனுல், தேசாதிபதியின் கட்டளைக்கிணங்க அவர்கள் குறித்த நேரத்தில் தேசாதிபதிக்கு முன்செல்லவில்லை. அவர்கள் ஏன் இவ்வாறு நடந்து கொண்டார்கள் என விளங்கவில்லை. ஆனுல் அவர்கள் கூறிய சாட்டு, ‘தங்களைச் சபைக்கு அழைத்து வருவதற்குத் தேசாதிபதியின் வாத்தியகாரர்கள் **(Governor's Tom - Tom beaters)** அனுப்பப்படவில்லை’ என்பதாகும்.[21]

மேலே கூறிய அறிக்கையிலிருந்தே நாம் கடைசியாகத் தொன் பிலிப் நல்லமாப்பாணர் பற்றி அறிந்துகொள்ள முடிகின்றது. மேல் கவனிக்கப்பட்ட நான்கு வன்னியர்களினது பெயர்களிலும் முதலாவது பெயர் தொன் பிலிப் நல்லமாப்பாணரினதாக இருப்பதால் அவர் ஏனையோருக்குத் தலைமை தாங்கியிருக்கலாம் எனவும், இக்காலகட்டத்தில் ஒல்லாந்தத் தேசாதிபதியின் கட்டளைக்குக் கீழ்ப்படிய மறுத்ததால் இச் சந்தர்ப்பத்தில் நல்லமாப்பாணர் தனது பதவியை இழந்திருக்கலாம் எனவும் கூறிக்கொள்ளலாம். இந்தக் கருத்துச் சரியாக இருந்தால் 1697 ஆம் ஆண்டளவில் அல்லது அதற்குப் பின்னரே நிச்சயச் சேனுதிராய முதலியார் பணங்காமத்தில் ஆதிக்கம் பெற்றிருக்கவேண்டும். செப்பேட்டில் பனங்காமப்பகுதியில் அதிகாரியாக இருந்தவர் நிச்சயச் சேனுதிராயர் எனக் குறிப்பிடப்படுகின்ற காரணத்தினுல் இச் செப்பேடு குறிப்பிடும் தானம் கி. பி. 1697 க்குப் பின்னரே கொடுக்கப்பட்டுள்ளது எனலாம்.

## புவி நல்லமாப்பாணர்

மேலும் இந்தச் செப்பேட்டில் உள்ள குறிப்பின்படி தென்னமரவடிப்பத்து என்ற பகுதியில் புவிநல்லமாப்பாண வன்னியனுர் என்பவர் அதிகாரியாக விளங்கினுர். இவர் ஒல்லாந்தக் குறிப்பில் தொன்தியோகோ புவிநல்ல மாப்பாணர் என அழைக்கப்படுகிறுர். இப்புவி நல்லமாப்பாணரும் நிச்சயச் சேனுதிராயரும் சேர்ந்து ஒல்லாந்தருக்குப் பல தொந்தரவுகளைக் கொடுத்திருக்கிறுர்கள் எனத் தெரிகின்றது. 1707 க்கும் 1716 க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் இலங்கையிலிருந்த ஒல்லாந்தத் தேசாதிபதியான ஹென்றிக் பெக்கர் (Hendrick Becker) என்பவரது காலத்தில், இலங்கையில் ஒல்லாந்த அதிகாரத்தை விரிவாக்குவதற்கு இன்னேர் முயற்சியெடுக்கப்பட்டது. இந்த முயற்சிகளுக்குப் புவிநல்லமாப்பாணரும் நிச்சயச் சேனுதிராயனும் எதிர்ப்புக் காட்டினுர்கள். வன்னியர்களின் இந்த எதிர்ப்பை அடக்குவதற்காக இக்காலமளவில் ஹென்றிக் பெக்கர் வன்னியர்களுக்கெதிராக ஒரு படையை அனுப்பி வைத்தார். இப்படையெடுப்பின்போது இந்த வன்னியர்கள் தென்னிந்தியக் கரையுடன் பாக்கு, துணிகள், மற்றும் பொருட்களின்மீது கள்ளத்தனமாகக் கடத்தல் வியாபாரம் செய்தமையும் கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வாறு கள்ளக்கடத்தல் செய்தமையைக் காட்டிக் கொடுத்தவன் ஒரு வன்னிய அதிகாரியாவான் என்பதும் குறிப்பிடத்தக்கது (இதுபற்றிப் பின்னர் கவனிக்கலாம்).[22]

மேலே கவனித்ததுபோன்று ஒல்லாந்தத் தேசாதிபதி ஹென்றிக் பெக்கர் அனுப்பிவைத்த படையைக் கண்டு அஞ்சிய வன்னியர்கள் இருவரும் (புவிநல்லமாப்பாணர், நிச்சயச் சேனுதிராயர்) தங்களுக்கேற்பட்ட இக்கட்டான நிலையைச் சமாளிப்பதற்காகக் கண்டியரசனின் உதவியை நாடினுர்கள். அதாவது தாம் கண்டியரசனுக்குக் கீழ்ப்படிந்து அவனுக்குத் திறை செலுத்துபவர்களாக இருப்பர் எனக்கூறிக் கண்டியரசனின் அரண்மனைக்குத் தூது ஒன்றை அனுப்பினுர்கள். அப்போது கண்டி மன்னன் ஒல்லாந்தருடன் நட்பு நிலையில் இருந்த காரணத்தினுல் வன்னியர்களின் தூதினை ஏற்க மறுத்து அவர்களுக்கெதிரான நடவடிக்கையை மேற்கொண்டான். வன்னியர்களின் தூதுவர்களைச் சங்கிலியினுல் கட்டி ஒல்லாந்தரிடம் அனுப்பினுன். இதன்பின்னர் குழப்பம் செய்த இரு வன்னியர்களும் நீக்கப்பட்டு அவர்களுக்குப்பதிலாக வேறு பேர்கள் நியமிக்கப்பட்டனர்.[23] இப்போதைய ஒல்லாந்தத் தேசாதிபதி ஹென்றிக் பெக்கர், மேலே கூறப்பட்ட நிகழ்ச்சிகள் பற்றித் தனது 1716 ஆம் ஆண்டுக்குரிய அறிக்கையில் குறிப்பிடும்போது—'' இந் நிகழ்ச்சிகள் எல்லாம் மிக விரிவான முறையிலே 1715 மே மாதம் 20 எனத்தேதியிடப்பட்டுப் பத்தேவியாவுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன'' எனக் கூறியுள்ளார்.[24] இதனைக் கவனிக்கும்போது நாம் அறிந்துகொள்ள முடிவது என்னவெனில் புவிநல்ல மாப்பாணரும் நிச்சயச் சேனுதிராயரும் பதவியிலிருந்து நீக்கப்பட்டமை கி. பி. 1715 இல் ஆகும் என்பதே. இதுவரை நாம் ஆராய்ந்த அதிகாரிகளின் பதவிக் காலத்தை ஏறக்குறையப் பின் வருமாறு குறிப்பிடலாம்.

| அதிகாரிகளின் பெயர் | பிரிவின் பெயர் | காலம் |
|---|---|---|
| கயிலவன்னியன் | பனங்காமப்பத்து | 1644 ? - 1678 |
| நல்லமாப்பரணர் | பனங்காமப்பத்து | 1678 — 1697 |


| | | |
|---|---|---|
| நிச்சயச்சேனாதிராயர் | பனங்காமப்பத்து | 1697 — 1715 |
| புவிநல்லமாப்பாணர் | தென்னமரவடிப்பத்து | 1697 — 1715 |

## தானத்தின் காலம்

நாம் இப்போது கவனிக்கின்ற செப்பேட்டின் பிரகாரம் பனங்காமத்தில் ஆதிக்கமுள்ளவராக இருந்தவர் நிச்சயச் சேனாதிராயராவார். ஆகவே நாம் இங்கு கவனிக்கவேண்டியது, கி. பி. 1715 க்குப் பின்னுள்ள ஒரு காலப்பகுதியில் செப்பேடு குறிப்பிடும் தானம் கொடுக்கப்பட்டிருந்தால் இத்தானத்தில் நிச்சயச் சேனாதிராயர் அடக்கப்படாமல் போயிருக்கவேண்டும். இதனால் இந்தத் தானம் கி. பி. 1697 க்கும் 1715 க்கும் இடைப்பட்ட ஒரு காலப்பகுதியில் கொடுக்கப்பட்டிருக்கவேண்டும் எனக் கொள்ளலாம். தற்போதைய நிலையில், நிச்சயமாக எந்த ஆண்டில் தானம் கொடுக்கப்பட்டது எனக் கூறுதல் கடினமாகும். இந்த இடத்தில் நாம் கவனிக்கவேண்டிய இன்னொன்று நாம் முன்னர் கவனித்தது போன்று சாசனத்தில் குறிப்பிட்டுள்ளவான சாஸ்திரத் தரவுகளை வைத்துக் கவனிக்கையில் அத்தரவுகள் யாவும் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 1722 (சகாப்தம் 1644) என்ற ஆண்டிற்குச் சரியாகப் பொருந்துவனவாய் உள்ளன, இதனால் நாம் மேற்கண்ட காலம்பற்றிய பிரச்சினையைத் தீர்த்துவைப்பதற்குச் சாசனத்தை எழுதியோர் அதன் காலத்தைப் பிழையாகக் குறிப்பிட்டுள்ளார்கள் எனக் கூறமுடியாது. ஆகவே நாம் இங்கு கூறக்கூடியது இச்சாசனம் குறிப்பிடும் தானம் புவிநல்லமாப்பாணரும் நிச்சயச் சேனாதிராயரும் பதவியிலிருந்த காலத்தில் (1697 - 1715) கொடுக்கப்பட்டதென்பதும் அவ்வாறு கொடுக்கப்பட்டதானம் 1722 இல் செப்பேட்டில் பிரதிபண்ணப்பட்டிருக்கவேண்டுமென்பதுமாகும்.

## பனங்காமத்து வன்னிபம்

குறிப்பிட்ட சாசனம் தெரிவிக்கும் அதிகாரிகளை ஒல்லாந்தக் குறிப்புக்களின் உதவியுடன் அடையாளங் கண்டுகொள்ள முயற்சித்தபோது மேலும் ஒரு சில தகவல்களை அறியமுடிந்தது. அதாவது கயிலவன்னியனின் ஆட்சியின் தொடக்கமாக நாம் தற்காலிகமாகக்கொள்ளும் 1644 க்கும் நிச்சயச் சேனாதிராயர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட காலமாகிய 1715 க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் பனங்காமத்தின் அதிகாரப்பதவி ஒரு குடும்பத்தவர்களிடையே இருந்திருக்கின்றது என்பதாகும். அவர்களின் உறவு முறையைக் கீழ்க் கண்டவாறு நோக்கலாம்:-



மேற் கூறியவாறு பனங்காமத்தின் அதிகாரப் பதவி ஒரு குடும்பத்திடமேயே கைமாறி யமையால், ஏனைய வன்னிப் பகுதிகளிலும் இத்தகையதான குடும்ப ஆட்சி நடைபெற்றிருக்கலாம் எனக்கொள்ள இடமுண்டு. சில வேளைகளில் இக்காலத்து வன்னிப் பிரிவுகள் எல்லாவற்றிலும் பனங்காமம் என்ற பிரிவே பெரிதாகவும் செல்வ வளமுடையதாகவும் இருந்தமையால் பனங்காமப் பகுதியில் ஆதிக்கம் பெறுபவனே கூடிய அதிகாரம் வாய்ந்தவனாகக் கருதப்பட்டு அப்பகுதியில் மாத்திரம் குடும்பஆட்சி நடைபெற்றிருக்கலாம். எமது இவ்விளக்கம் எத்தகையதாக இருந்தாலும், பனங்காமப் பகுதியில் இத்தகைய ஒரு குடும்ப ஆட்சி முறை இருந்ததற்குச் சான்றுண்டு. இவ்வாறு ஒரு குடும்பத்தவரின் ஆட்சி இங்கு நிலவியிருக்கின்றமையால், இவ்வதிகாரமுடைய குடும்பத்தைக் குறிக்கும் ஒரு சொல்லாகவே, எமது சாசனத்தில் அடிக்கடி இடம்பெறும் வன்னியர் என்ற சொல்லுப் பயன்படுத்தப்பட்டிருக்கவேண்டும்.

நாம் முன்னர் குறிப்பிட்ட ஹென்றிக் பெக்கர் என்ற தேசாதிபதி 1716 ஆம் ஆண்டு தான் எழுதிய அறிக்கையில், இக்காலமளவில் இருந்த ஆறு மாகாணங்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அவையாவன - பனங்காமம், கரிக்கட்டுமூலை, மேல்பத்து, முள்ளியவளை, தென்னமரவடி, கருநாவல்பத்து என்பனவாகும். மேலும் அவர் குறிப்பிடுகையில், இந்த மாகாணங்கள், மாட்சிமிக்க கம்பனியின் உயர்வான அதிகாரத்தின் கீழ் நான்கு வன்னியர்களினாலும் மூன்று முதலியார்களினாலும் மேற்பார்வை செய்யப்பட்டன எனக்கூறி நான்கு வன்னியர்களின் பெயரையும் கொடுத்துள்ளார். (முதலியார்களின் பெயர்களைக் குறிப்பிடவில்லை) அவ்வாறு தேசாதிபதியினால் குறிப்பிடப்பட்ட வன்னியர்கள் - தொன் அந்தொனி குலசேகரர் (Don Anthony Collesegras), தொன் பிலிப் கந்தப்ப மயிலாத்தை (Don Philip Candaspa Maylette),) கந்தப்பர் (Candappa) என்போராவர்.[25] மேலே குறிப்பிட்டுள்ள தொன் அந்தனி குலசேகரர், தொன் பிலிப் கந்தப்ப மயிலாத்தை ஆகிய இருவரும் பனங்காமத்தில் இரு வெவ்வேறு பகுதிகளுக்குத் தனித்தனியே அதிகார முடையவர்களாக விளங்கினார்கள்.

### குலசேகர வன்னியன்

மேற்கூறியவற்றை அடிப்படையாகக் கொண்டு நாம் இங்கே கவனிக்க முடிவது 1715 ஆம் ஆண்டளவில் நிச்சயச் சேனாதிராயர் பனங்காமத்தின் அதிகாரப் பதவியை இழந்தபோது அந்த இடத்துக்கு நியமிக்கப்பட்டவர் தொன் அந்தொனி குலசேகரராவார் எனலாம். ஏனெனில் தேசாதிபதியின் அறிக்கையில், குலசேகர வன்னியரே முதலில் குறிப்பிடப்படுகின்ற காரணத்தினால் பனங்காமத்தின் முக்கிய அதிகாரப் பதவி குலசேகரரிடம் இருந்திருக்கவேண்டும் எனலாம். எமது சாசனத்தில், நிச்சயச் சேனாதிராயரின் காலத்தில் பனங்காமப் பகுதியில் அவருடன் சேர்ந்து கடமையாற்றிய குலசேகர முதலியார் ஒருவர் குறிப்பிடப்படுகின்றார். இக் குலசேகர முதலியாரையும் 1715 க்குப் பின்னர் பனங்காமப்பகுதியில் அதிகாரம்பெற்ற குலசேகர வன்னியனையும் ஒருவன் என அடையாளங் கண்டுகொள்ளலாம். இவன் முதலில் முதலியார் பதவியை வகித்துப் பின் வன்னியராக நியமிக்கப்பட்டிருக்கிறான் எனத் தெரிகின்றது. ஏனெனில் ஒல்லாந்தக் குறிப்பின் பிரகாரம் இவன் 1716 ஆம் ஆண்டிலேயே வன்னியனாக நியமிக்கப்பட்டான் என அறிய முடிகின்றது.

மேலே கவனித்தவாறு தொன் அந்தொனி குலசேகர முதலியார் பதவி உயர்வு பெற்றதற்கான காரணத்தைக் கண்டுகொள்ள இக்கால ஹென்றிக் பெக்கர் தேசாதிபதியின் அறிக்கை பெரிதும் உதவுகின்றது. அந்த அறிக்கையிலிருந்து நாம் அறிய முடிந்தது:- முன்னர் நாம் கவனித்த, அதாவது நிச்சயச் சேனாதிராயரும் புவிநல்ல மாப்பாணரும் சேர்ந்து தென்னிந்தியாவுடன் நடத்திய, கள்ளக்கடத்தல் வியாபாரத்தை ஒல்லாந்தருக்குக் காட்டிக்கொடுத்தவன் இந்தக் குலசேகரனாவான். இவ்வாறு தனது சொந்த வம்சத்தினரான வன்னியருக்கெதிராக அன்னியரான ஒல்லாந்தருக்கு விசுவாசமாகக் குலசேகரன் நடந்து கொண்டமையால் பதவி உயர்வு பெற்றுப் பனங்காமப்பகுதிக்கு அதிகார முடையவனாக மாறினான். குலசேகரன் இவ்வாறு விசுவாசமாக நடந்து கொண்டதனைப் பாராட்டி ஹென்றிக் பெக்கர் தேசாதிபதி பின்வருமாறு கூறியுள்ளார்:

"நான் இப்பொழுது ஏனைய இடங்களைப் பற்றிக் கவனிக்கவேண்டும். அதற்கு முன்பு, புதிதாக வன்னியனாக நியமிக்கப்பட்டவன்பற்றி மிகவும் புகழ்ந்து குறிப்பிடவேண்டும். கடந்த வருடம், யாழ்ப்பாணக் கொமாண்டரின் வெறுப்பினைச் சம்பாதிக்கும் துர்ப்பாக்கியத்தைப் பெற்றிருந்தபோதிலும் கம்பனிக்கு விசுவாசமுள்ள, விடாமுயற்சியுடைய ஒரு பிரசையாகத் தொன் அந்தொனி குலசேகரன் விளங்குகின்றான். இவ்வாறு குறிப்பிடுவதற்கு முக்கிய காரணம், முன்னர் குறிப்பிட்ட (கள்ளக் கடத்தல் வியாபாரம் செய்தமை பற்றியது) கலகக்கார வன்னியர்களின் விவகாரங்களை எனக்குக் காட்டிக்கொடுத்தமையாகும். இவ்வாறு காட்டிக்கொடுத்தமை, எழுத்து மூலம், செயலாளராக இருந்த டி ஹான் (de Haan) என்பவருக்கும் கப்ரின் பேக்மன் (Captain Beeckman) என்பவருக்கும் முன்னிலையில் எனக்கு முன் கொடுக்கப்பட்டது. அத்துடன் அவன் தான் யாழ்ப்பாணத்தில் தடுப்புக்காவலில் இருந்தபோது தான் கொமாண்டரினால் எவ்வாறு கொடுமையாக நடத்தப்பட்டான் என்பதனை மாத்திரமன்றி, புரட்சிக்கார வன்னியர்கள் கடத்தல் வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் சமயத்தில் அவர்களைக் கைப்பற்றிக்கொள்வதற்கான சுலபமான வழிவகைகள் என்ன என்பதனையும் கூறினான்.[26]

மேலே கூறிய, ஹென்றிக் பெக்கரின் தொன் அந்தொனி குலசேகர (Colesegra) வன்னி பற்றிய அறிக்கை ஆங்கிலத்தில் பின்வருமாறு அமைந்துள்ளது:-

"I will now proceed to treat of the other stations. But before doing so I must strongly commend to you the newly appointed Wannia, Don Anthony Colesegra, as a faithful and diligent subject of the Company, although last year he had the misfortune of incurring the displeasure of the Commandeur of Jaffnapatnam. This was chiefly on account of the disclosure he made to me with regard to the rebellious Wannias, a matter referred to already. These disclosures (in writing) were handed to me in the presence of Captain Beeckman and the Secretary de Haan, and he showed therein not only how harshly he had been treated by the Commandeur during his detention in Jaffnapatnam, but he also pointed out the comparatively easy means by which the rebels might be captured in their smuggling coves. To all appearance a great deal more advantage might have been derived from the information obtained by those who were entrusted with the execution of his work, if this man had not been constantly mistrusted and suspected, and if the expedition had been carried out in a more suitable manner."

ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களாக, அதாவது வன்னியர்களாக, இருந்த போதிலும் அன்னியரான ஒல்லாதருக்கு ஆதரவாகத் தன்னினத்தவர்களான நிச்சயச் சேனுதிராயரையும் புவிநல்ல மாப்பாணரையும் குலசேகர முதலியார் ஏன் காட்டிக் கொடுத்தார் என்ற கேள்வி எழுகின்றது. இத்தகைய ஒரு வினவுக்கு விடையிறுக்கத் தக்க வகையில் ஒல்லாந்தக் குறிப்புக்களில் தகவல்கள் கிடைக்கவில்லை. அதே நேரத்தில் குறிக்கப்பட்ட வினவைப் பொறுத்து அதற்கான விடையை ஊகித்துக்கொள்ளச் சாசனம் ஓரளவுக்கு நமக்கு இடமளிக்கின்றது. சாசனக் குறிப்பின் பிரகாரம் பனங்காமப் பகுதியிலே நிச்சயச் சேனுதிராய முதலியாரவர்களும் ஆதிக்கம் உடையவராக விளங்கினர். இவ்விருவரும் பனங்காமத்தில் ஆதிக்கம் பெற்றிருந்தாலும் இவர்களில் நிச்சயச்சேனுதிராயரே கூடிய ஆதிக்கம் உடையவராக இருந்தார் என அறிய முடிகின்றது. காரணம் நிச்சயச்சேனுதிராயர், வன்னிபம், (இப் பதவிபற்றிப் பின்னர் ஓரளவு விரிவாக ஆராயப்படும்) முதலியார் ஆகிய இரு பதவிகளை வகித்தபோது குலசேகரர் தனியே முதலியாராக மாத்திரமேயிருந்தார். அதுவுமல்லாமல் கி.பி. 1696க்கும் 1715க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் இவ்விருவருடைய நடவடிக்கைகளையும் கவனிக்கும்போது இவர்களில் நிச்சயச்சேனுதிராயரே மிகவும் ஆதிக்கமுடையவராக இருந்திருக்கின்றார் எனத் தெரிகிறது. ஏனெனில் இக்குறிப்பிட்ட காலத்தில் அடிக்கடி ஒல்லாந்தருக்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டவர் இவராவார். இதே காலப்பகுதியில் குலசேகர முதலியார் பற்றி நாம் எதனையும் அறிந்துகொள்ள முடியவில்லை. 1716க்குப் பின்னரே ஒல்லாந்தர் அறிக்கையில் குலசேகரர் பற்றிய செய்திகள் நமக்குக் கிடைக்கின்றன. இவற்றையெல்லாம் நாம் கவனிக்கும்போது 1715ஆம் ஆண்டுவரை பனங்காமம் என்ற பிரிவில் நிச்சயச்சேனுதிராயருக்குக் கீழேயே குலசேகர முதலியார் இயங்கி வந்திருக்கின்றார் என அறிந்துகொள்ள முடிகின்றது. இத்தகையதாக இருவரும் சேர்ந்து ஆட்சிசெய்த காலத்தில் இவர்கள் இருவருக்குமிடையே ஏதாவது பகைமை ஏற்பட்டிருக்கலாம், அல்லது ஒல்லாந்தருக்கெதிராக நிச்சயச் சேனுதிராயரும் புவிநல்ல மாப்பாணரும் நடந்துகொண்ட விதங்களில் குலசேகர முதலியார் வெறுப்புற்றிருக்கலாம். இருந்தும் இப்படியான காரணங்களுக்காகப் புரட்சிக்கார வன்னியர்கள் பாரதூரமாகப் பாதிக்கப்படதக்க வகையில் குலசேகரர் காட்டிக்கொடுத்திருக்கவேண்டியதாய் இருந்திருக்காது. இந்த இடத்தில் நாம் கொடுக்கக்கூடிய காரணம் என்னவெனில், நிச்சயச் சேனுதிராயரும் குலசேகரரும் சேர்ந்து பனங்காமத்தில் ஆட்சிசெய்யும்போது, நிச்சயச்சேனுதிராயரின் ஆட்சிக்குப் பின்பு தனக்கே பனங்காமத்தின் ஆட்சிப் பொறுப்புக் கிடைக்குமெனக் குலசேகரர் எதிர்பார்த்திருக்கலாம். இவ்வாறு எதிர்பார்த்து ஏறக்குறையப் பத்தொன்பது வருடங்களைக் (1696-1715) கழித்திருக்கலாம். இத்தகையதாகப் பொறுத்திருந்த காலத்தில் பதவி உயர்வு வேட்கையினால் நிச்சயச்சேனுதிராயரைப் பதவியிலிருந்து நீக்குவதற்கும் அதே நேரத்தில் ஒல்லாந்தரின் நம்பிக்கையைத் தனக்காக்கிக்கொள்ளவும் விரும்பி, நிச்சயச் சேனுதிராயரையும் புவிநல்லமாப்பாணரையும் ஒல்லாந்தருக்குக் காட்டிக்கொடுத்திருக்கலாம். குலசேகரர் மேற்கூறிய இருவரையும் காட்டிக்கொடுப்பதற்கான காரணம் நாம் கடைசியாகக் கூறியதாக இருந்தால் குலசேகர முதலியார் தனது நோக்கத்தை நிறைவேற்றுவதில் பூரண வெற்றியைப் பெற்றார் எனலாம்.

## ரணசூரரணதீர ராகவன்னியராய முதலியார்

செப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளுள், மேல்பத்து என்ற பிரிவில் அதிகாரம் பெற்றிருந்த ரணசூரரண தீரராக வன்னியராய முதலியார் ஒருவரும் குறிப்பிடப்பட்டுள்ளார். சமகாலத்தைச் சேர்ந்த ஒல்லாந்தக் குறிப்புகளின் உதவியுடன், செப்பேடு குறிப்பிடும் ஏனைய அதிகாரிகள் பலரை அடையாளங்கண்டுகொண்ட போதிலும் ரணசூர ரணதீரராக வன்னியராய முதலியாரவர்களை அடையாளங்கண்டு கொள்ளமுடியவில்லை. பதினெட்டாம் நூற்றாண்டின் ஓரளவு பிற்பகுதியில், அதாவது கி. பி. 1762 அளவில், இலங்கையின் ஒல்லாந்தத் தேசாதிபதியாக இருந்த யான் ஷ்ரொய்டர் (Jan Schreuder) என்பவர் 1762 ஆம் ஆண்டில் எழுதிய அறிக்கையொன்றில் ''இரணசூரிய இரண ராஜ முதலியார்'' (Irrenasoria Irrenaraja modliar) ஒருவர்பற்றிய குறிப்புத் தற்செயலாக இடம்பெற்றுள்ளது. அவர் குறிப்பிட்டுள்ளதாவது:– ''தென்ன மரவடி என்ற பகுதி தொன் பிரான்சிஸ்கோ சேதுகாவல மாப்பாணரின் (Don Francisco Soeddoegawela mapane) கீழ் வந்தது. மேல்பத்து முள்ளியவளை ஆகிய பகுதிகளுக்கு தொன் பிரான்சிஸ்கோ அமரக்கோன் முதலியார் (Don Francisco Amaragon modliar) ஆதிக்கம் பெற்றார். முன்னைநாள் வன்னியரான இரணசூரிய இரணராஜ முதலியார் அவர்களின் இறப்பின் காரணமாகவே தொன் பிரான்சிஸ்கோ அமரக்கோன் முதலியார் மேல்பத்து வன்னியராக 1760 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நியமிக்கப்பட்டார்.''[27]

மேலே குறிப்பிடப்பட்ட இருவரையும், அதாவது செப்பேடு குறிப்பிடுகின்ற ரணசூரண தீரராக வன்னியராய முதலியாரவர்களையும் 1762 ஆம் ஆண்டுக்குரிய ஷ்ரொய்டர் தேசாதிபதியின் அறிக்கை குறிப்பிடுகின்ற இரணசூரிய இரணராஜ முதலியாரவர்களையும் ஒருவர் என அடையாளங்கண்டுகொள்ள முயற்சிப்பதற்கு இடமிருக்கின்றது. இவ்வாறு அடையாளங் காணும் நமது முயற்சிக்குப் பின்வரும் காரணங்கள் நமக்கு உதவுகின்றன:

(1) காலம் :

இரணசூரிய இரணராஜ முதலியாரவர்களின் இறப்பைத் தொடர்ந்தே அமரக்கோன் முதலியாரவர்கள் மேல்பத்தில் ஆதிக்கம் பெற்றிருப்பதனால், இந்த இரணசூரிய இரணராஜ முதலியாரவர்கள், நமது செப்பேடு குறிப்பிடும் காலத்துக்கு (1722) மிக நெருங்கியவராக இருந்திருக்கவேண்டும் எனலாம். 1760 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அமரக்கோன் முதலியார் பதவி பெற்றிருக்கின்ற காரணத்தினால், இரணசூரிய இரண ராஜ முதலியார் இறந்தது 1760 இல் அல்லது அதற்குச் சிறிது முன்னர் எனக் கூறலாம். இவ்வாறு கொண்டால், தானமளிக்கப்பட்ட காலத்தில் (ஆகக்கூடிய கடைசி யாண்டாக நாம் கொள்வது 1715) இவர் பதவியில் இருந்திருக்கலாம். ஆகவே கால அடிப்படையில் மேற்கூறிய இருவரையும் அடையாளங்கண்டுகொள்வது பெருமளவு பொருத்தமாகக் காணப்படுகின்றது.

(2) பதவி :

மேற்கூறிய அதிகாரிகள் இருவரும் வகித்த பதவிகளும் ஒன்றாகவே காணப்படுகின்றன; அதாவது செப்பேட்டில் ''மேல்பத்து வன்னிபம் ரணசூரரண தீரராக

வன்னியராய முதலியாரவர்கள்'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது; இதனுல் இந்த ரணசூரரண தீரராக முதலியார் மேல்பத்து என்ற இடத்தில் வன்னியனுர் பதவியைப் பெற்றிருந்தார் எனக் கூறலாம். ஒல்லாந்தக் குறிப்பிலும், அமரக்கோன் முதலியார் நியமிக்கப்பட்டதுபற்றிக் குறிப்பிடுகையில், முன்னை நாள் மேல்பத்து வன்னியனுர் இரணசூரிய இரண ராஜ முதலியார் இறந்த காரணத்தினுல், அதே பதவிக்கு அமரக்கோன் நியமிக்கப்பட்டார் எனக் கூறப்படுகின்றது. இதனுல், இரணசூரிய இரண ராஜ முதலியார் வன்னியனுர் பதவியை வகித்தார் என அறியலாம். ஆகவே இருவர் (ரணசூர ரணதீரராக முதலியார் = இரண சூரிய இரணராஜ முதலியார்) பெற்றிருந்த பதவிகளும் இருவரையும் ஒருவர் என அடையாளங் காண்பதற்கு உதவுகின்றன,

(3) அந்தஸ்து :

இங்கு நாம் கவனிக்கின்ற இரு அதிகாரிகளும் பெற்றிருந்த பதவிகள் மாத்திரமன்றி அவர்கள் கொண்டிருந்த அந்தஸ்தும் ஒன்றுகவே காணப்படுகின்றது. இருவரும் முதலியார் எனவே அவர்களது பேரின் முடிவில் குறிப்பிடப்படுகிறுர்கள். இதுவும், அவர்கள் இருவரும் ஒருவர் என நாம் அடையாளங்கண்டு கொள்வதற்கு ஓரளவுக்கு உதவுகின்றது.

(4) ஆதிக்கம் பெற்றிருந்த இடம் :

செப்பேட்டில் 'மேல் பத்து வன்னிபம் ரணசூரரண தீரராக வன்னியர்' எனக் குறிப்பிடப்பட்டிருத்தலால், ரணசூரரண தீரராக வன்னியர், மேல்பத்து என்ற வன்னிப் பிரிவில் ஆதிக்கம் பெற்றிருந்தவர் என அறியலாம். அதே நேரத்தில் ஒல்லாந்தக் குறிப்பிலிருந்து இரண சூரிய இரண ராஜ முதலியார் வன்னியனுராக இருந்தது மேல்பத்து என அறியலாம். ஆகவே இருவரும் ஆதிக்கம் பெற்றிருந்த இடம் மேல்பத்து என்ற பிரிவாதலால், இதுவும் அவர்கள் இருவரும் ஒருவர் என அடையாளங் கண்டுகொள்ள உதவுகின்றது.

(5) பெயர் ஒற்றுமை :

''ரணசூர ரணதீரராக'' என்ற பெயருக்கும் ''இரணசூரிய இரணராஜ'' என்ற பெயருக்குமிடையே பெருமளவு ஒற்றுமை காணப்படுகின்றது. இப்பெயர்களுக்கிடையே காணப்படும் கவனிக்கத்தக்க வேற்றுமை, 'ரணதீரராக' என்பது ஒல்லாந்தக் குறிப்பில் 'இரண ராஜ' எனக் கூறப்பட்டிருப்பதேயாகும். ஆனுல் நாம் இதனை ஒரு பெரும் வேறுபாடாகக் கொள்ளமுடியாது. அன்னியரான ஒல்லாந்தர் வன்னியர்கள் பெற்றிருந்த பெயர்கள் எல்லாவற்றையும் சரியான முறையில் எழுதியிருப்பர் எனக் கூற முடியாது. வன்னியர்களின் உண்மையான பெயர்கள் பல ஒல்லாந்த குறிப்புக்களில் திரிபுபட்டுக் காணப்படுகின்றன.[28] சாதாரணமாகவே ரணசூரரண தீரராக வன்னியர் என்ற பெயர் உச்சரிப்பதற்குக் கடினமாதலால், அன்னியரான ஒல்லாந்தர் அப் பெயரைச் சரியாக எழுதுவதில் தவறிழைத்திருந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆகவே, இவர்கள் இருவரும் பெற்றிருந்த பெயர்கள் ஒன்றுக்கொன்று பெருமளவு ஒற்றுமைப்படுவதாலுல், இவர்கள் இருவரையும்

ஒருவரெனப் பெயர் ஒற்றுமையைப் பொறுத்தும் அடையாளங்காணமுடிகிறது. இதுவரை நாம் கவனித்தவாறு காலம், பதவி, அந்தஸ்து, பதவி பெற்ற இடம், பெயர் ஒற்றுமை ஆகியவற்றின் உதவியினுல் செப்பேடு குறிப்பிடுகின்ற ரணசூர ரண தீரராக முதலியாரை, ஒல்லாந்தக் குறிப்பில் இடம்பெறும் இரணசூரிய இரண ராஜ முதலியாருடன் பெரிதும் அடையாளங்கண்டுகொள்ள முடிகிறது. செப்பேட்டிலுள்ள ஏனைய அதிகாரிகளில் பலர், சம கால ஒல்லாந்தக் குறிப்புகளில் அடிக்கடி இடம் பெறுகின்றபோது, பிரச்சினைக்குரிய ரணசூர ரணதீரராக முதலியார் ஏன் இடம்பெறவில்லை என்ற கேள்வி கேட்கப்படவேண்டிய‌தொன்று. திட்டவட்டமான பதில் ஒன்றை இக்கேள்விக்குக் கொடுக்க முடியாவிட்டாலும், இந்த இடத்தில் நாம் ஊகிக்க முடிவது:- இந்த ரணசூரரண தீரராக முதலியார், ஒல்லாந்தக் குறிப்புகளில் இடம்பெறுமளவிற்குச் செயற்படாமலிருந்திருக்கலாம். அதாவது ஏனைய அதிகாரிகள் செய்தது போன்று, ஒல்லாந்தருக்கு அடங்க மறுத்து ஒல்லாந்தருக்குக் கொடுக்கவேண்டிய திறையைக் கொடுக்க மறுத்து, அவர்களுக்கெதிராகக் குழப்பம் செய்யாதிருந்திருக்கலாம். ஏனெனில், ஏனைய அதிகாரிகள் அடங்க மறுத்துக் குழப்பம் விளைவிக்கும்போதே அவர்களின் நடவடிக்கைகள் ஒல்லாந்தரின் குறிப்புகளில் இடம்பெறுகின்றன. இதனுல், இவர் மேல்பத்து என்ற இடத்தில் ஒரு முக்கியத்துவமற்ற அமைதியான வன்னியராக இருந்து ஆட்சி செய்திருக்கலாம். எமது மேற்படி விளக்கத்தை உறுதிப்படுத்தக் கூடிய விதத்தில் இன்னென்றையும் எடுத்துக்காட்டலாம். ஒல்லாந்தக் குறிப்பின் உதவியுடன் இவர் இறக்கும்வரை ஆட்சிசெய்திருக்கிருர் என அறியலாம். உண்மையில் ஏனைய வன்னிய அதிகாரிகள் நடந்துகொண்டதுபோல ரணசூரரண தீர முதலியாரும் குழப்பம் விளைவிக்கும் ஒருவராக இருந்திருந்தால், நல்லமாப்பாணர், புவிநல்லமாப்பாணர், நிச்சயச்சேனுதிராயர் ஆகியோருக்கு ஏற்பட்ட கதி இவருக்கும் நடந்திருக்கலாம். அதாவது இவரின் ஆட்சிக்காலத்திலேயே பதவியிலிருந்து இறக்கப்பட்டிருக்கலாம். இவர் இறக்கும்வரை ஆட்சிசெய்த காரணத்தினுல், ஒல்லாந்தரின் அவநம்பிக்கைக்கு ஆளாகாத விதத்தில் ஆட்சி புரிந்திருக்கவேண்டும் எனலாம்.

## இலெங்கைஞராயண முதலியார்

நமது செப்பேட்டில் இவர் 'முள்ளியவளை வன்னிபம்' இலெங்கைஞராயண முதலியார் என அழைக்கப்படுகின்ருர். இவரை ஒல்லாந்தக் குறிப்பில் காணப்படும் தொன் கஸ்பர் இலங்கைஞராயண முதலியாருடன் அடையாளங்கண்டுகொள்ள முடிகின்றது. பதினேழாம் நூற்ருண்டின் பிற்பகுதிக்குரிய ஒல்லாந்தக் குறிப்புக்களில் இவர் முள்ளியவளைக்கு அதிகாரியாக இருந்தார் என்பதனை அறிந்துகொள்ள முடியாவிட்டாலும், அக்குறிப்புகளிலிருந்து இவர் இக்காலமளவில் பிரசித்திபெற்றிருந்தார் என அறிந்துகொள்ளலாம். ஒல்லாந்தக் குறிப்புத்தரும் தகவல்களுக்கிணங்க, கயிலவன்னியனின் பின் பனங்காமத்தின் அதிகாரப் பதவியைப் பெற்ற நல்லமாப்பாணரின் மகன் நிச்சயச்சேனுதிராயருக்கு இவர் மைத்துனர் முறையானவராவார். சில வேளைகளில் நல்லமாப்பாணரின் மகளை மணந்திருக்கலாம். இத்தகைய ஒரு உறவுமுறை, முள்ளியவளையின் வன்னிபப் பதவியை இலெங்கைஞராயண முதலியார் பெற்றுக்கொள்வதற்கு உதவியிருக்கலாம். இக்காலமளவில் ஒல்லாந்தருக்கெதிரான நடவடிக்கைகளை மேற்கொண்ட வன்னியர்களுள் இந்த இலெங்கைஞராயண முதலியாரும்

குறிப்பிடத்தக்கவர். 1697 ஆம் ஆண்டளவில், மாலை ஐந்து மணிக்கு ஒரு கூட்டத்துக்குச் சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டபோது ஏனைய வன்னியர்களான நல்லமாப்பாணர், புவிநல்ல மாப்பாணர், அம்பலவாணர் ஆகியோருடன் சேர்ந்து இலெங்கை ஞராயணரும் செல்லவில்லை.[29] அத்துடன் ஒல்லாந்தருக்குத் திறையாகக் கொடுக்க வேண்டிய யானைகளையும் அவ்வப்போது கொடுப்பதில் இவர் ஆர்வம் காட்டவில்லை. இதற்குப் பதிலாக ஒல்லாந்தரை ஏமாற்றுவதில் ஆர்வம் காட்டியுள்ளார் எனத்தெரிகின்றது. இதற்கோர் நல்ல உதாரணத்தை 1697 ஆம் ஆண்டுக்குரிய ஒல்லாந்த அறிக்கையிலிருந்து நாம் பெற்றுக்கொள்ள முடிகின்றது.

1697 ஆம் ஆண்டில் றைக்லொவ் டி பிற்றர் (Rycklof de Bitter) என்ற ஒல்லாந்த திசாவை, நல்லமாப்பாணரையும் நாம் இப்போது கவனிக்கின்ற இலெங்கை ஞராயணரையும் அழைத்து அவர்களுக்கிடையேயுள்ள வேறுபாடுகளுக்கும் பகைமைக்கும் காரணங்கள் என்ன என்பதனை அறிவதற்கு நீண்டநேரமாக அவர்களுடன் சம்பாஷித்துக்கொண்டிருந்தார். இருவரையும் சமாதானப்படுத்த விரும்பி ஒல்லாந்த திசாவை, அவர்களுக்கிடையேயிருந்த பகைமைக்கான காரணத்தை அறிய முயற்சித்தார். இவ்வாறு இவர்களிடையேயிருந்த பகைமைக்கான காரணத்தை அறிய முயற்சித்தபோது, 'இவர்களிடையே உண்மையான பகைமை எதுவும் இல்லை; கம்பனிக்குத் திறையாகச் செலுத்தவேண்டிய யானைகளைச் செலுத்தத் தவறியமைக்குச் சாட்டுச் சொல்லுவதற்காக இவர்கள் ஏற்படுத்திக்கொண்ட போலிப் பகைமையே இது,' என திசாவை அறிந்துகொண்டார். திறையைச் செலுத்தாமைக்கான காரணத்தை திசாவை கேட்டபோது அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் குற்றம்சாட்டினர். இருவரும் முதலில் தாம் கொடுக்கவேண்டியவற்றைக் கொடுத்துவிட்டோம் எனக்கூறினர். ஆதாரமாக நல்லமாப்பாணர், தான் ஒல்லாந்தரிடமிருந்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டொன்றைக் காட்டினர். செய்வதறியாது திகைத்த நமது இலங்கைஞராயணர், 'தன்னுடைய பங்கையும் நல்லமாப்பாணரே செலுத்தியிருக்கவேண்டுமென்றும் ஆதலால் குறிப்பிட்ட பற்றுச்சீட்டுத் தன்னுடைய பங்கிற்கும் பெறுமதியானது' எனக் கூறினர். இருந்தும் மேற்கொண்டு இவர்கள் தங்களுடைய நாடகத்தைத் தொடர்ந்து நடிக்க முடியாது குழப்பமடைந்து ஒருவரிடம் ஒருவர் பரிவாகக் கதைத்தனர். இவர்களுடைய இந்த நடவடிக்கை, ஒல்லாந்தன் ஏற்கனவே பெற்றிருந்த சந்தேகத்தை வலுப்படுத்தலாயிற்று. தங்களுடைய போலி நாடகம் அம்பலமாகிவிட்டதனை அறிந்து இருவரும் தம் தலைகளைத் தொங்கவிட்டபடியே மௌனமாயிருந்தனர்.[30]

மேற்கூறியவற்றைத் தவிர இலெங்கைஞராயணன்பற்றிக் குறிப்பிடத்தக்க எதனையும் அறியமுடியவில்லை. ஆனல் மேற்கூறிய இலெங்கைஞராயணரின் நடவடிக்கையிலிருந்து நாம் சிலவற்றை அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கின்றது. அதாவது ஒல்லாந்தரின் நடவடிக்கைகளையும் வன்னியர்களின் நடவடிக்கைகளையும் கவனிக்கும்போது ஒல்லாந்தர், வன்னியர்களைப் பொறுத்தவரையில் எத்தகைய அதிகாரத்தை அவர்கள்மீது ஏற்படுத்தியிருந்தார்கள் என அறியலாம். வன்னியர்களுக்கெதிராக ஒல்லாந்தர் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டால், வன்னியர் கண்டியரசனுடன் சேர்ந்துகொள்வர் என்ற பயம் ஒல்லாந்தருக்கிருந்தது.[31] இதனல் வன்னியர்கள் எவற்றைச் செய்தபோதிலும் ஒல்லாந்தர் சில விடயங்களில் கடுமையாக இருக்கவில்லை. இத்தகைய ஒல்லாந்தரின் செயலே மேற்கூறிய இலங்கைஞராயணரின்

நடவடிக்கைக்கு இடமளித்தது எனலாம்: இலங்கைனுராயணர், போலி நாடக மொன்றை அரங்கேற்றித் தோல்விகண்டபோதிலும் அவனுக்கெதிராக ஒல்லாந்த தேசாதிபதி கடுமையான நடவடிக்கை எதுவும் எடுத்ததாகத் தெரியவில்லை. அதே நேரத்தில் இங்கே கவனிக்கக்கூடிய இன்னென்று, ஒல்லாந்தர் வன்னியரைப் பொறுத்துச் சில விடயங்களில் கடுமையாக இல்லாதிருந்தபோதிலும், இலங்கைனுராயணர் ஆகியோரால், நேரடியாக ஒல்லாந்தருக்குத் திறை கொடுக்க, மறுக்கும் சக்தியில்லாம லிருந்ததனை அறியலாம். அன்றி அப்படியான தைரியம் இலங்கைனுராயணருக்கு இருந்திருக்குமானல், வேறு தந்திரங்களை மேற்கொள்ளவேண்டிய அவசியம் இருந்திருக்காது. இதனல் கயிலவன்னியனேடு ஒப்பிடுமளவிற்கு இவர்கள் ஒல்லாந்தருக்கு எதிர் நின்று செயல்புரிந்தனர் எனக்கூறமுடியாது.

## கந்தயின வன்னியனர்

நமது செப்பேட்டிலிருந்து கிடைக்கின்ற தகவலுக்கிணங்க இந்தக் கந்தயினர் என்பவர் மேல்பத்து என்ற இடத்தில் ரணசூரரண தீரராக வன்னியராய முதலியாருடன் ஆதிக்கமுள்ளவராக விளங்கினர் என அறியலாம். இக்கந்தயினர்பற்றி ஒல்லாந்த அறிக்கைகளில் மிகக் குறைவான தகவல்களே கிடைக்கின்றன. 1716 ஆம் ஆண்டுக்குச் சேர்ந்த அறிக்கையொன்றில் அப்போதிருந்த வன்னிப் பிரிவுகளும் அவற்றுக்குப் பொறுப்பாக இருந்த வன்னியர்களும் முதலியார்களும் குறிப்பிடப்படும்போது தொன் கஸ்பர் கந்தயினர் என்பவர் குறிப்பிடப்படுகின்றர்.[33] தானம் அளிக்கப்பட்ட காலமும் இந்தக் கந்தயினர் வாழ்ந்த காலமும் பெரிதும் ஒரே காலமாதலாலும் இக்காலமளவில் வேறு கந்தயினர் ஒருவர் இருந்தமைக்குத் தகவல்கள் இல்லாமையாலும் ஒல்லாந்த குறிப்பிலுள்ள கந்தயினரை சாசனம் குறிப்பிடும் கந்தயின வன்னியனருடன் அடையாளங்காண்பது பொருத்தமானதாகத் தோன்றுகிறது. மேற்கூறிய ஒல்லாந்த அறிக்கைதரும் குறிப்பைவிட 1678க்குச் சேர்ந்த டாக் பதிவேடும் (Dag Register) கந்தயினர்பற்றி அறிய ஓரளவுக்கு உதவுகின்றது.[33] அந்தப் பதிவேட்டில், யாழ்ப்பாணத்திலிருந்து கிடைத்த கடிதம் பற்றிய தகவல் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது அத்தகவல் வன்னியர்களுக்குத் தலைவனக இருந்த கந்தயினர் என்பவர் அடக்கப்பட்டமை பற்றியதாகும். நாம் முன்னர் கவனித்த 1716 ஆம் ஆண்டுக்குரிய அறிக்கை குறிப்பிடும் கந்தயினரும், 1678 ஆம் ஆண்டுக்குரிய டாக் பதிவேடு குறிப்பிடும் கந்தயினரும் ஒருவர் எனக்கொள்ள இடமுண்டு. இதனை ஏற்றுக்கொண்டால் நமது செப்பேடு குறிப்பிடும் கந்தயினர் அதிக காலத்துக்குப் பதவியிலிருந்திருக்கிறர் எனக்கொள்ளலாம். கயிலவன்னியன் இறந்தபின் வன்னியர்களுக்குத் தலைமை வகிக்கும் முக்கியத்துவத்தையும் சிறிது காலத்துக்கு ஒல்லாந்தரை எதிர்க்கும் சிறப்பையும் இவர் பெற்றிருந்தார் என மேற்குறிப்பிட்ட பதிவேட்டின் மூலம் அறியலாம். கந்தயினர் பற்றி வேறு தகவல்கள் கிடைக்காமையால் மேற்கொண்டு அவர்பற்றி அதிகம் அறிந்துகொள்ள முடியவில்லை.

## புண்ணிப்பிள்ளை வன்னியனர்

நமது சாசனக் குறிப்பிற்கிணங்க இப் புண்ணிப்பிள்ளை வன்னியனர் தென்னமரவடிப்பத்து என்ற பிரிவில் புவிநல்ல மாப்பாணருடன் கடமையாற்றியிருக்க வேண்டும் எனத் தெரிகின்றது. ஏற்கனவே இக்கட்டுரையின் ஓரிடத்தில், கயிலவன்னியனின்

இறப்பினைப் பயன்படுத்தி ஒல்லாந்தர் வன்னிய அதிகாரிகள் சிலருடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டவர்களாகத் தொன் கஸ்பர் சிதம்பரப்பிள்ளை, தொன்பிலிப் நல்லமாப்பாணர், புண்ணியம்பிள்ளை உடையார், திருக்கைல உடையார் ஆகியோரைக் குறிப்பிட்டு, இங்கு குறிப்பிடப்பட்டுள்ள புண்ணியம்பிள்ளை என்பவரை, நமது சாசனம் குறிப்பிடும் புண்ணிப்பிள்ளை வன்னியனுருடன் அடையாளங்கண்டு கொள்ள முடிகிறது எனக் கவனித்திருந்தோம். ஒல்லாந்தக் குறிப்புகளில் புண்ணியம் பிள்ளைபற்றி மிகக் குறைவான தகவல்களே கிடைப்பதாலும் பெயர் ஒற்றுமை பெரு மளவில் காணப்படுவதாலும் மேற்கூறிய இருவரும் ஒருவரென அடையாளங்கண்டு கொள்வது நியாயமாகும். இதே நேரத்தில் நாம் இங்கு கவனிக்க முடிவது, நாம் முன்னர் குறிப்பிட்ட அதாவது 1678 ஆம் ஆண்டுக்குரிய பத்தேவிய டாக் பதிவேட் டில் புண்ணிப்பிள்ளை என்பவர் ஒருவர் குறிப்பிடப்படுகின்ருர். இப் பதிவேடு புண்ணிப் பிள்ளை பற்றிக் குறிப்பிடும்போது, கந்தயினுரும் மற்றையோரும் ஒல்லாந்தரால் அடக் கப்பட்டது போன்று புண்ணிப்பிள்ளை என்பவரும் ஒல்லாந்தரால் அடக்கப்பட்டமை பற்றிக் குறிப்பிடுகின்றது. குறிப்பிட்ட பதிவேட்டில் இப்புண்ணிப்பிள்ளை ஒரு அயோக் கியன் (Scoundrel) எனக் கூறப்படுகின்ருன். ஆகவே பதிவேட்டிலுள்ள மேற்படி தக வல்களைக் கவனிக்கும்போது, இப்புண்ணிப்பிள்ளை என்பவர் ஒல்லாந்தருக்கு விரோத மான நடவடிக்கைகளை மேற்கொண்டு அவர்களது வெறுப்புக்கு ஆளாகி ஈற்றில் ஒல் லாந்தரால் அடக்கப்பட்டிருக்கிருர் எனத் தெரிகிறது. அதே வேளையில் ஏனைய ஒல் லாந்தக் குறிப்பில் இடம்பெறும் புண்ணியம்பிள்ளை என்பவரின் நடவடிக்கைகளைக் கவ னிக்கும்போது அவரும், ஒல்லாந்தருக்கு அடங்க மறுத்துத் தான் ஒல்லாந்தருடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தைப் புறக்கணித்தார் என்பதனைக் காணலாம். இவை எல்லாவற்றையும் நோக்கும்போது, நமது சாசனம் குறிப்பிடும் புண்ணிப்பிள்ளை, டாக் பதிவேடு குறிப்பிடும் புண்ணிப்பிள்ளை, ஏனைய ஒல்லாந்தக் குறிப்பிலுள்ள புண்ணி யம்பிள்ளை ஆகிய மூவரும் ஒருவரே என்ற எமது கருத்து வலுப்பெறுவதனைக் காணலாம்.

மேலே கூறப்பட்ட நமது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கது என்ருல், நாம் இங்கு தொடர்ந்து கூறமுடிவது என்னவெனில், செப்பேட்டில் குறிப்பிடப்பட் டிருப்பதுபோலப் புண்ணிப்பிள்ளை என்பதே அவருடைய உண்மையான பெயராகும். டாக் பதிவேட்டிலும் புண்ணிப்பிள்ளை என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. புண்ணிப்பிள்ளை என்பது புண்ணியம்பிள்ளை என்பதன் திரிபாகும் என்றே கொள்ளவேண்டும். அண்மை யில் கண்டுபிடிக்கப்பட்ட கரம்பன் கல்வெட்டிலும் ''புண்ணியமாக'' என்பது ''புண்ணிமாக'' என்று எழுதப்பட்டுள்ளதும் கவனிக்கத்தக்கது.[34]

## நீலயினு வன்னியனுர், மூத்த(ர்) வன்னியனுர்

நமது சாசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் பல வன்னியர்களை அடையாளங் கண்டுகொண்ட போதிலும் ஒரு சிலரை அடையாளங்காண முடியவில்லை. அவர்கள் மூத்தர் வன்னியனுர், நீலயினு வன்னியனுர் ஆகிய இருவர்களுமாவர். இவர்களைப்பற்றி அறிந்துகொள்வதற்கு ஒல்லாந்தக் குறிப்புகளில் எதுவித தகவல்களும் கிடைக்கவில்லை. சாசனத்தில் இவர்களைப்பற்றிய குறிப்பினைக் கவனிக்கையில் இவர்கள் இக்காலப் பகுதியில் அதிகாரமற்ற வன்னியர்களாக இருந்திருக்கவேண்டும் போலத் தோன்றுகின்

றது. ஏனெனில் மற்றைய எல்லா அதிகாரிகளும் குறிப்பிடப்பட்ட பின்னரே இவர்கள் இருவரும் குறிப்பிடப்பட்டுள்ளார்கள். இவர்களுக்குப் பின்னர் செப்பேட்டில் குறிக்கப்பட்டிருப்பது ''இவர்களும் இவர்களைச் சேர்ந்த ஊரில் குடியானவர்களும்'' என்பதாகும். இவர்கள் இறுதியாகக் குறிப்பிடப்பட்டிருப்பது மாத்திரமன்றி, இவர்கள் இருவரும் எந்த வன்னிப் பகுதிக்கு அதிகாரமுள்ளவர்களாக இருந்தார்கள் எனவும் குறிப்பிடப்படவில்லை. உண்மையாக இவர்கள் வன்னியின் எந்த ஒரு பிரிவுக்காவது அதிகாரமுள்ளவர்களாக விளங்கியிருந்தால் ஏனைய அதிகாரிகளின் வன்னிப் பிரிவுகள் குறிப்பிடப்பட்டிருப்பதுபோல இவர்கள் ஆதிக்கம் பெற்றிருந்த வன்னிப் பிரிவுகளும் குறிப்பிடப்பட்டிருக்கலாம். அல்லாவிடில் இவர்கள் ஏதாவது நிர்வாகப் பதவிகளைப் பெற்றிருந்தால் இலங்கைநாராயணர் பெற்றிருந்த இறைசுவதோர் பதவி குறிப்பிடப்பட்டிருந்ததுபோல, இவர்களது பதவிகளும் குறிப்பிடப்பட்டிருக்கலாம். இதனால் நாம் இங்கு கூறக்கூடியது, செப்பேட்டில் இவர்கள் குறிப்பிடப்பட்டிருக்கும் தன்மையைக் கொண்டு, ஒல்லாந்தக் குறிப்புகளில் இவர்கள் பற்றிய செய்திகளைப் பெறமுடியாமலிருப்பதாலும், செப்பேடு குறிப்பிடும் ஏனைய அதிகாரிகள் பெற்றிருந்ததுபோல இவர்கள் அதிகாரம் அற்றவராய் இருந்திருக்கலாம் என்பதாகும். அதிகாரம் அற்றிருந்தும் செப்பேட்டில் இவர்கள் குறிப்பிடப்பட்டமைக்கு, இவர்கள் சில வேளைகளில் சமூகத்தில் ஏதோவிதத்தில் முக்கியத்துவமுடையவர்களாய் விளங்கியிருக்கலாம் என்பதனைக் காரணமாகக் கூறலாம்.

## வன்னியரின் மத நடவடிக்கைகள்

இச் சாசனத்தில் காணப்படும் செய்திகள் சிலவற்றை அடிப்படையாகக் கொண்டு இக்காலத்து வன்னியர்களின் சமய நடவடிக்கைகள் பற்றிய சில தகவல்களை நாம் அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கின்றது. முன்னர், இச் சாசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் அதிகாரிகள் பெரும்பாலோரை ஒல்லாந்தக் குறிப்புகளில் உள்ள அதே பெயர்கொண்ட அதிகாரிகளுடன் ஒருவாறு அடையாளங் கண்டுகொண்டோம்; அவ்வாறு அடையாளங் கண்டபோது, ஒல்லாந்தக் குறிப்புகளில், அவ்வதிகாரிகள் பெற்றிருந்த கிறிஸ்தவ சமயப் பெயர்களைக் காணக்கூடியதாக இருந்தது; அவர்கள் பெற்றிருந்த கிறிஸ்தவ சமயப் பெயர்கள் இங்கு கவனிக்கத் தக்கன :-

| அதிகாரிகளின் பெயர்கள் | சமயப் பெயர்கள் |
|---|---|
| புவிநல்ல மாப்பாணர் | தொன் தியாகோ |
| நிச்சயச் சேனாதிராயர் | தொன் கஸ்பார் |
| குலசேகர முதலியார் | தொன் அந்தனி |
| மைலாத்தையுடையார் | தொன் பிலிப் |
| கந்தையினார் | தொன் கஸ்பார் |
| ரணசூரரண தீரராக முதலியார் | தொன் பிரான்சிஸ்கோ |
| இலெங்கைநாராயண முதலியார் | தொன் கஸ்பார் |

மேலே காட்டப்பட்டவாறு இவ்வன்னிய அதிகாரிகள் பெற்றிருந்த சமயப் பெயர்களைக் கவனிக்கையில் அவை கிறிஸ்தவ சமயத்திலும் போர்த்துக்கீசரின் மதப் பிரிவான கத்தோலிக்கப் பிரிவைச் சேர்ந்த பெயர்களாகக் காணப்படுகின்றன. அதா

வது மேற்கூறிய சமயப் பெயர்கள் எல்லாம் தொன் என்ற பெயருடன் ஆரம்பிக்கின்ற காரணத்தினாலும் தொன் என்ற சொல் கத்தோலிக்க மதத்துக்குரிய சொல் ஆதலாலும் மேற் கூறப்பட்ட வன்னிய அதிகாரிகள் கத்தோலிக்க மதப்பிரிவைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள் என்பதனை இங்கு நாம் கூறிக்கொள்ள முடிகின்றது.[35] இச் சாசனச் செய்திகளைக் கொண்டு போர்த்துக்கீசர் வன்னிப் பிரிவுகளில் ஆதிக்கம் செலுத்தியபோது தமது கத்தோலிக்க மதத்தின் செல்வாக்கை அங்கு ஏற்படுத்தியிருக்கிறார்கள் எனக் கூறலாம். இத்தகைய சாசனத்திலிருந்து நாம் பெறும் செய்தியினை உறுதிப்படுத்தக்கூடிய விதத்தில் போர்த்துக்கீசப் பாதிரியார் குவைறோஸ் சில தகவல்களைத் தந்துள்ளார். அவர் தரும் தகவலின்படி, 1624 ஆம் ஆண்டளவில் பனங்காமம் என்ற வன்னிப் பிரிவில் கிறிஸ்தவ கோவில் (Church) ஒன்றுகட்டி இரண்டு வன்னியர்களும் அதிகாரியும் மதம் மாற்றப்பட்டார்கள் என்பதனை அறிந்துகொள்ளலாம்.[36] பின்னர் வண. பிதா. பேதுரு டி பெரன்கோர் (Fr. Pedro de Betancor) மாந்தோட்டத்திலிருந்த மக்களிடையே சமயத்தைப் பரப்பும் நடவடிக்கையை மேற்கொண்டு வன்னி எல்லைப் புறங்கள்வரை அதனை விரிவுபடுத்தினர். அரிப்பு, நானாட்டான், பெருங்களி, சிதவேலி, பூநகரி ஆகிய இடங்களில் கிறிஸ்தவ கோவில்கள் கட்டப்பட்டன. அதே விதத்தில், வடக்கே பச்சிலைப்பள்ளி மாகாணத்தில் வன்னியின் எல்லைப்புறத்திலுள்ள கிராமங்களில் கிறிஸ்தவ கோவில்கள் இருந்தன.[37] இவற்றைக் கவனிக்கையில் இக்காலமளவில் ஆட்சிசெய்த குடும்பங்கள் கிறிஸ்தவ மதத்தைத் தழுவியிருந்தன என்பதனை அறிய முடிகின்றது. வணக்கத்துக்குரிய ஒல்லாந்தப் பாதிரியார் பிலிப் பால்டியஸ் (Rev. Philip Baldaeus) என்பவரின் அறிக்கையின் பிரகாரம் 1665 அளவில் வன்னி மாவட்டங்களில் 4533 முதுமைவாய்ந்த கிறிஸ்தவர்கள் இருந்தார்கள் என அறிய முடிகிறது.[38]

போர்த்துக்கீசர் தமது மதத்தைப் பரப்புவதில் அதிக அக்கறை கொண்டிருந்த காரணத்தினால், தங்களுடைய மதச் செல்வாக்கை இலங்கையில் எந்தளவிற்கு ஏற்படச் செய்யமுடியுமோ அவ்வளவுக்கு ஏற்படச்செய்ய முயற்சியெடுத்தார்கள். போர்த்துக்கீசரின் ஆட்சி 1658 இல் முடிவுற்று ஒல்லாந்தராட்சி இலங்கையில் இடம்பெற்றபோதிலும் ஒல்லாந்தர் தம் மதப்பிரிவினை வன்னியர்களிடையே ஏற்படுத்த முடியவில்லை என்பதனை அறியலாம். ஏனெனில் கத்தோலிக்க மதத்தைத் தழுவிய வன்னியர்கள், ஒல்லாந்தராட்சியிலும் கத்தோலிக்க மதத்தையே அனுசரித்தார்கள் என்பதனை அவர்கள் கொண்டிருந்த சமயப் பெயர்களால் அறியமுடிகின்றது. போர்த்துக்கீசரோடு ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து ஒல்லாந்தர் அதிக மதத்தீவிரவாதிகளாக இருக்கவில்லை. ஒல்லாந்தரது பிரதான நோக்கம் வர்த்தகத்தைப் பற்றியதாதலால் சமயம் இரண்டாந்தர இடத்தையே பெற்றது.[39] மற்றும் ஒல்லாந்தர் பொருளாதாரத்தைப் பெரு நோக்காகக் கொண்டிருந்த காரணத்தினால் ஆட்சிமுறையின் தன்மையிலும் ஓரளவு வேறுபாடு காணப்பட்டது. பொதுவாக ஒல்லாந்தர் தமது மதத்துக்கு இரண்டாந்தர இடத்தைக் கொடுத்த காரணத்தினால் இவர்களுடைய சமயம் மக்களிடையே வெகுவாகப் பரவுவதற்கு வாய்ப்புக் குறைவாகவே காணப்பட்டது. அத்துடன் ஒல்லாந்த குருமார் மக்களிடையே மக்களாகப் பழகவில்லை. குருமாரில் போதிய தொகையினரும் இருக்கவில்லை. இக்குருமார் ஓரளவு உயர்ந்த மனப்பான்மைகொண்டவர்களாகவே விளங்கினர். இவர்கள் பெரும்பாலும் கரையோரத்திலுள்ளோரைச் சமய மாற்றம் செய்வதிலேயே தமது காலத்தைக் கழித்தனர்.[40]

போர்த்துக்கேசரின் கத்தோலிக்க மத வளர்ச்சியினைத் தடுப்பதற்கு ஒல்லாந்தர் முயற்சியெடுத்தார்கள்; அதாவது அந்நோக்கத்திற்காக அடிக்கடி சட்டங்கள் இயற்றப்பட்டன. 1658, 1715, 1733, 1745, 1751 ஆகிய ஆண்டுகளில் இத்தகைய சட்டங்கள் பிரகடனப்படுத்தப்பட்டன.[41] இவ்வாறு காலத்துக்குக் காலம் கத்தோலிக்க மத வளர்ச்சியைத் தடுக்கும் சட்டங்கள் இயற்றப்பட்டபோதும், வடக்கே வன்னியர்களை மத மாற்றம் செய்வதில் ஒல்லாந்தர் ஏதும் முயற்சியெடுத்திருப்பார்கள் எனக் கூறமுடியாது. ஏனெனில் கிடைக்கின்ற ஒல்லாந்தக் குறிப்புகளின் உதவிகொண்டு கவனிக்கையில், வன்னியர்கள் பெரும்பாலும் ஒல்லாந்தரின் நடவடிக்கைகளுக்குக் கீழ்ப்படிய மறுத்தவர்களாகவேயிருந்தார்கள்; வன்னியர்களைப் பொறுத்தவரையில் இக்கால ஒல்லாந்தரின் நடவடிக்கைகளைக் கவனிக்கும்போது, இவர்கள் வன்னியரிடமிருந்து தமக்கு வரவேண்டிய வருமானங்களைப்பெற்றுக் கொள்வதிலேயே கவனமாக இருந்திருக்கிறார்கள் எனத் தெரிகின்றது. ஒல்லாந்தருக்கு வருடாவருடம் கொடுக்க வேண்டிய யானைகளையே கொடுக்கமறுத்து அவர்களுக்குக் கீழ்படிய வன்னியர்கள் மறுத்தமையால் அவர்கள்மீது தமது மத ஆதிக்கத்தை ஏற்படுத்த ஒல்லாந்தர் முயற்சிக்காது விட்டிருக்கலாம்; ஆகவே இந்த இடத்தில் நாம் கவனிக்கக்கூடிய அம்சம் என்னவெனில், ஒல்லாந்தரைக் காட்டிலும் போரத்துக்கேசர் தமது மத நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்கள் என்பதும் அதில் ஓரளவு வெற்றியும் பெற்றார்கள் என்பதுமாகும்.

இச்சாசனத்தின் உதவிகொண்டு நாம் இன்னும் சில விடயங்களைத் தெரிந்து கொள்ளமுடிகின்றது. இச்சாசனம் குறிப்பிடும் அதிகாரிகளில் பலர் கத்தோலிக்கர்களாக விளங்கினார்கள் என நாம் அறிகின்ற அதே வேளையில், இவ்வதிகாரிகள் இந்து மதத்தவரின் புனித ஸ்தலமான சிதம்பரத்துக்குத் தானமளித்தார்கள் என்ற செய்தியினை நாம் அறிந்துகொள்ளுகின்றோம். இவர்களின் இந்த நடவடிக்கைகள் அன்னியர்களான ஐரோப்பியரது ஆட்சிக் காலத்தில் அவர்களின் சமயங்களைப் பின்பற்றியவர்களில் பெரும்பாலோர் அரசாங்கத்தில் நன்மை பெறுவதற்காகவே சமயம் மாறினரன்றிக் கிறிஸ்தவ சமயத்தில் ஏற்பட்ட பற்றின் காரணமாக மாறவில்லை என்ற உண்மையை நிரூபிக்கலாம். அதாவது வன்னியர்கள் தங்களின் உண்மையான பெயர்களுக்கு முன்னர் கிறிஸ்தவ மதப் பெயர்களைக் கொண்டிருந்தார்களே தவிரத் தம் வாழ்க்கையில் கிறிஸ்தவ மத நம்பிக்கைகளை அனுசரித்தனர் எனக் கூறமுடியாது; இச்சாசனம் குறிப்பிடும் அதிகாரிகள், தாம் அளித்த தானம்பற்றிக் குறிப்பிடுகையில் தங்களுடைய கிறிஸ்தவ மதப் பெயர்களையும் குறிப்பிடவில்லை. இதனைக் கவனிக்கும் போது, தாம் புதிதாகக்கொண்ட மதத்தில் எந்தவித நம்பிக்கையும் இன்றிப் பதவிக்காகவும் மதத்தைத் தழுவியிருக்கிறார்கள் எனத் தெரிகின்றது. இரு போர்த்துக்கேச ஆசிரியர்களான குவைரோஸ் என்பவரும் ஆண்ரிலொபெஸ் (Andre Lopez) என்பவரும் இலங்கையில் கிறிஸ்தவ மதமாற்றம் பற்றிக் குறிப்பிடுகையில் ''அதிகமான இலங்கையர்கள் உண்மையான மதமாற்றமடைந்தவர்கள் அல்ல'' எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.[42]

வன்னியர்கள் உண்மையாகத் தாம் புதிதாக மேற்கொண்ட கிறிஸ்தவ மதத்தில் பற்றற்றவர்களாக இருந்தார்கள் என நாம் மேலே கவனித்ததனை உறுதிப்படுத்தக்கூடியதாக இன்னோர் நிகழ்ச்சிபற்றி அப்போது யாழ்ப்பாணத்துக்குக் கொமாண்டராக இருந்த ஷெவார் தெக்ரூன் (Zwaardekroon) என்பவர் குறித்துள்ளார்; அவரின் குறிப்பிலிருந்து பின்வருவதனை அவதானிக்கலாம்.

"1690 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணக் கோட்டைக்குக் கிட்டவாக நல்லூரில் தமிழ் பிள்ளை களின் கல்விக்காக ஒரு கிறிஸ்தவ கலாசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. பனங்காமத்தில் மிகச் செல்வாக்குப்பெற்றிருந்த தொன் பிலிப் நல்லமாப்பாணர் அவர்கள், தன்னுடைய மக்களில் ஒருவரை அக் கலாசாலையில் மாணவனுகச் சேர்த்துக்கொள்வதற்கு விண்ணப்பித்திருந்தார். அவரின் மகன் அப்பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டு அங்கு மதபோதனைகளும் அளிக்கப்பட்டான். அந்த மாணவன் தனது விடுமுறை நாட்களில் ஒருநாள், ஒல்லாந்த அதிகாரி ஒருவருடன் நாகபட்டினத்துக்குச் செல்ல நேரிட்டது. அந்த மாணவன் நாகபட்டினத்தில் இருந்தபோது, தன்னைப் பிறர் அறியாதவாறு மாறுவேடம் பூண்டு களவான முறையில், அவ்வூரிலுள்ள பெரிய இந்துக் கோயில் ஒன்றில் வழிபாடு செய்வதற்காகச் சென்ருன். இவ்வாறு மாறுவேடம் பூண்டு குறிப்பிட்ட இந்துக்கோயிலில் வழிபாடு செய்தபோது அம்மாணவன் ஒல்லாந்த அதிகாரியின் கையில் சிக்கிக்கொண்டான்"[43]

நாம் மேலே கூறிய ஷெவார் தெக்ரேன் என்ற கொமாண்டர் மாணவனின் செய்கை பற்றிக் கூறுகையில் ஏறக்குறையப் பன்னிரண்டு வயதுடைய அம்மாணவன் இவ்விடயத்தில் தந்தையின் செல்வாக்குக்குட்பட்டிருந்தான் எனக் கூறியுள்ளார்.[44] இவ்வாறு கிறிஸ்தவ மதத்துக்கு மாறியும், மாறுவேடம் பூண்டு இந்துக் கோவிலில் வழிபாடு செய்த தொன்பிலிப் நல்லமாப்பாணரின் மகன் எனப்படுபவர், நல்லமாப்பாணரின் பின் பனங்காமத்தில் ஆதிக்கம் பெற்ற அவரது மகன் தொன்கஸ்பர் நிச்சயச் சேனுதிராயராகவும் இருந்திருக்கலாம். இது எவ்வாருக இருந்தாலும், இந்த நல்லமாப்பாணரின் மகன் செய்துகொண்ட முறையில் நடந்தவர்களாகவே நமது சாசனம் குறிப்பிடும் வன்னிய அதிகாரிகள் காணப்படுகின்ருர்கள் எனக்கூறலாம். எனினும், ஒல்லாந்தர் ஆட்சியின்போது போர்த்துக்கீசப் பெயர்களைத் தாங்கிக் கத்தோலிக்கராக இருந்தமையைப் பதவிக்காகச் செய்த செயல் என்று ஏன் கூறவேண்டும் என்ற கேள்விக்கு இடமுண்டு. இதனை நோக்குமிடத்து, இவ்வன்னியர்கள் போர்த்துக்கீசப் பெயர்களுடன் கத்தோலிக்கராக ஆரம்பத்தில் மாறியிருந்தாலும், பின்னர் அதே பெயர்களுடனே ஒல்லாந்தருடைய இறப்பிறமாதுக் கிறிஸ்தவத்தைத் தழுவியவர்களாய் மறைவாக இந்து மதத்தவர்களாக வாழ்ந்திருக்கலாம் என்றுகூற இடமுண்டு.

முன்னர் இச் செப்பேடு குறிப்பிடும் தானத்தின் காலத்தைப் பற்றிக் கவனித்தபோது, இத்தானம் கி.பி. 1696 க்கும் கி.பி. 1715 க்கும் இடைப்பட்ட ஒரு காலப்பகுதியில் கொடுக்கப்பட்டிருக்கவேண்டுமென்றும் அத்தானம்பற்றிய குறிப்பு, பட்டையத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆண்டாகிய 1722 இல் எழுதப்பட்டது என்றும் கவனித்தோம், இத்தானம் கொடுக்கப்பட்ட காலத்துக்கும் அது எழுதப்பட்ட காலத்துக்குமிடையே ஆகக்குறைந்தது ஏழு வருடங்கள் இருக்கின்றன. இவ்வாறு இத்தானம் ஏழு வருடங்கள் கழித்து எழுதப்பட்டமைக்கான காரணத்தை விளக்குதல் தற்போதைய நிலையில் கஷ்டமானதொன்ருக இருந்தாலும், நாம் இதற்கான காரணம் என்னவாகலாம் என ஓரளவுக்கு ஊகித்துக்கொள்ளலாம். அதாவது நாம் ஏற்கனவே கவனித்தோம், குறிப்பிட்ட வன்னிய அதிகாரிகள் கிறிஸ்தவ மதப் பெயர்களைப் பெற்றிருந்தும் பட்டையத்தில் தங்கள் பெயர்களைக் குறிப்பிடுகையில் மதப் பெயர்களைத் தவிர்த்துத் தங்கள் பெயரை மாத்திரமே குறித்திருக்கிருர்கள் என: அத்துடன் இவர்கள் கத்தோலிக்க மதத்தை ஏற்றுக்கொண்டு இந்துக்களின் புனித தலமாகிய சிதம்பரத்துக்குத் தானமளித்திருக்கிருர்கள். கத்தோலிக்க மதத்துக்கு மாறிய பின்னர் தாம்பெற்ற சமயப் பெயர்களை மறைப்பதும், கத்தோலிக்க மதத்தைத் தழுவிய பின்னரும் இந்துக்கோயில் ஒன்றுக்குத் தானமளிப்பதும் தமக்கு ஏற்ற செய்கையன்று எனக்கருதித் தங்கள் தலைவன் கயிலாயவன்னியனின் சார்பில் இத்தானத்தைப்

பிறர் அறியாத வகையில் இரகசியமாக அளித்திருக்கலாம். பின்னர் சுமார் ஏழு வருடங்கள் கழித்துத் தங்களின் சுதந்திரத்தைத் தம்பகுதிகளில் ஓரளவு வலிமைப் படுத்திக்கொண்டு அத்தானத்தை எழுதிவைத்திருக்கலாம். இந்துக் கோயிலுக்குத் தானம் அளித்த காரணத்தினாலேயே இவர்கள் தங்கள் மதப்பெயரை மறைத்திருக்க வேண்டும் என்ற கருத்து இன்னோர் தகவலினாலும் உறுதிப்படுத்தப்படுகின்றது. அதாவது 1781 ஆம் ஆண்டுக்குரிய வன்னியர் பற்றிய ஆவணமொன்றில் ''பனங்காமப் பற்று அயுதாந்தி வன்னிபந் தொஞ்சுவாங் குலசெகர நல்லமாப்பரண வன்னியனார்'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.[45] இங்கு வன்னியர் குலசேகர நல்லமாப்பாணர் பெற்றிருந்த சமயப் பெயரும் இடம் பெற்றுள்ளது. இதனைக் கவனிக்கும்போது இந்துக் கோயிலுக்குத் தானமளித்த காரணத்தினாலேயே இப்பட்டையத்தில் குறிப்பிட்ட வன்னிய அதிகாரிகள் பெற்றிருந்த மதப் பெயர் இடம்பெறவில்லை என்ற கருத்து உறுதிப்படுத்தப்படுகிறது. இது மாத்திரமன்றி இச் செப்பேட்டின் வரலாறு பற்றிக் கவனித்தபோது, இச்சாசனத்தைத் தந்துதவியவர், அதன் ஆரம்ப வரலாறு பற்றித் தனக்குத் தெரியாது எனக் கூறினார் எனக் கவனித்தோம். இவ்வாறு இச்செப்பேட்டின் ஆரம்ப வரலாறு பற்றி அறியப்படாமைக்கும் நாம் மேற்கூறிய விளக்கம் சில வேளைகளில் காரணமாக இருக்கலாம். அதாவது தாம் புதிதாக மாறிய கிறிஸ்தவ மதத்திற்கு விசுவாசமற்ற முறையில் நடந்துகொண்டமையால் பிறர் அதனை அறியாமல் இருக்கவேண்டுமெனக் கருதிச் செப்பேடுகளைச் சில காலத்துக்கு ஒழித்துவைத்திருக்கலாம். இதனால் தொடர்ந்து சிலகாலத்துக்கு ஏனையோருக்கு இப்பட்டையங்கள் கிடைக்காமல் போயிருக்கலாம். இந்த இடத்தில் நாம் முக்கியமாகக் கூறிக்கொள்ள வேண்டியது, நாம் மேலே அளித்த காரணங்கள் எந்தவிதமான திட்டவட்டமான சான்றுகளின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டவையல்லவாதலால் அவை வெறும் ஊகங்களே என்பதாகும்.

மேலும் தொடர்ந்து நோக்குகையில் நாம் அறிய முடிவது, வன்னிய அதிகாரிகள் பலர் மதம் மாறியிருந்தார்கள் என நாம் அறிந்துகொண்டபோதிலும், பனங்காமப்பகுதியில் ஆதிக்கம் பெற்று ஏனைய எல்லா வன்னிய அதிகாரிகளைக்காட்டிலும் வலிமைமிக்கவனாக விளங்கிய கயிலாயவன்னியன் எக்காலத்திலும் மதம்மாறவில்லை எனத் தெரிகின்றது. ஏறக்குறைய கி. பி. 1644 இல் இருந்து கி. பி. 1678 வரைப்பட்ட 34 வருடங்களில் போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆகியோர்கள் அவனுக்கெதிராக எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளுக்குச் சற்றும் இடம்கொடுக்காது நடந்துகொண்டான் என்பதற்கு அவன் தனது கடைசிக்காலம்வரை அன்னியரது மதத்தைத் தழுவாது ஆட்சிபுரிந்தமை தக்க சான்றாக அமைகின்றது. இவனின் இத்தகைய நடவடிக்கைகளே றொபேர்ட் நொக்ஸ் என்பவர் இவனை ஒரு இளவரசன் என்ற முறையில் ''இவன் ஏனையோரைக்காட்டிலும் மிக வலிமையுடன் விளங்கினான்''[46] எனக்கூற வைத்ததுபோலும்.

## வன்னிப் பிரிவுகள்

இச் செப்பேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற வன்னிப்பிரிவுகளாவன:- பனங்காமப்பத்து, கரிக்கட்டு மூலைப்பத்து, தென்னமரவடிப்பத்து, மேல்பத்து, முள்ளியவளைப்பத்து, பச்சிலைப்பள்ளி என்பனவாகும். இவ்வன்னிப் பிரிவுகள் இலங்கையில் ஒல்லாந்தராட்சிக்காலத்தில் மாத்திரம் ஏற்படுத்தப்பட்டவையல்ல. அதற்கு முற்

பட்ட காலத்திலிருந்தே இந்த வன்னிப்பிரிவுகள் இருந்து வந்திருக்கின்றன என அறியலாம். இவ்வன்னிப் பிரிவுகள்பற்றி நாம் ஆகக் குறைந்தது போர்த்துக்கீசர் காலத்திலிருந்து அறியமுடிகின்றது; போர்த்துச்கீசர்காலத்தில் பனங்காமம், கருநாவல்பத்து முள்ளியவளை, தென்னமரவடி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரிவுகள் இருந்தன என்பதனைக் குவைறோசின் குறிப்பிலிருந்து அறிந்து கொள்ளலாம்.[47] பதினேழாம் நூற்றாண்டின் ஓரளவு பிற்பகுதியில் அதாவது 1675க்கும் 1679க்கும் இடைப்பட்ட காலத்தில் இலங்கையில் ஒல்லாந்த தேசாதிபதியாக இருந்த றைக்லோவ் வான் கூன்ஸ் என்பவரின் அறிக்கையிலிருந்து வன்னிப்பிரிவுகள்பற்றியும் அப்பிரிவுகள் ஒவ்வொன்றும் ஒல்லாந்தரின் கம்பனிக்குக் கொடுக்கவேண்டியிருந்த யானைகளின் எண்ணிக்கைபற்றியும் அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கின்றது; இவ்வாறு இவ்வறிக்கை தரும் குறிப்பிற்கிணங்க ஒவ்வொரு வன்னிப்பிரிவும் செலுத்தவேண்டிய யானை வருமானம் பின்வருமாறு அமைந்திருந்தது;

| பிரிவுகள் | அதிகாரிகள் | யானைகள் |
|---|---|---|
| பனங்காமம் | நல்லமாப்பாணர் + காசியனார் | 11½ |
| பரந்தன்வெளி | நல்லமாப்பாணர் | 2 |
| மேல்பத்து முள்ளியவளை | கொற்றெபிள்ளை? (Cottepille) | 8½ |
| கரிக்கட்டுமூலை | கந்தயினார் | 7 |
| கருநாவல்பற்று | திரிகைலர் (Tircaila) | 7 |
| தென்னமரவடி | கைமத்தர்? (Chiammatte) | 48 |
| | | 2 48 |

மேலே குறிப்பிட்ட வன்னிப் பிரிவுகளுள் பச்சிலைப்பள்ளி என்ற பிரிவு குறிப்பிடப்படவில்லை; இருந்தும் இக்காலமளவில் வன்னியர்கள் கம்பனிக்குக் கொடுக்க வேண்டியிருந்த மான்தோல்கள் பற்றிக் குறிப்பிடுகையில் பச்சிலைப்பள்ளி என்ற பிரிவு குறிப்பிடப்பட்டிருத்தலைக் காணலாம்.[49] ஆகவே இவற்றைக் கவனிக்கும்போது போர்த்துக்கீசர் காலத்தில் இருந்த அதே வன்னிப்பிரிவுகள் டச்சுக்காரர் ஆட்சியின் போதும் இருந்திருக்கின்றன என அறியலாம்; மேலும் 1765 அளவில் இலங்கையிலிருந்த ஒல்லாந்த தேசாதிபதி ஜான் ஷ்றெய்டர் (Jan Schreuder) என்பவர் தனது அறிக்கையில் வன்னியர்களைப்பற்றிக் குறிப்பிடுகையில், வன்னி ஆறு மாகாணங்களை அடக்கியிருந்தது எனக் குறிப்பிட்டுள்ளார்; அவர் குறிப்பிட்ட அந்த ஆறு மாகாணங்கள் - தென்னமரவடி, பனங்காமம், மேல்பத்து, முள்ளியவளை, கரிக்கட்டு மூலை, கருநாவல்பத்து என்பனவாகும்.[50] இதுவரை நாம் கவனித்தவற்றை நோக்கும்போது இலங்கையில் போர்த்துக்கீசரின் ஆட்சிக்காலத்திலிருந்து ஒல்லாந்தரது ஆட்சியின் இறுதிப்பகுதிவரை வன்னிப்பிரிவுகள் மாற்றமடையாது இருந்திருக்கின்றன என அறிந்துகொள்ளக் கூடியதாக இருக்கின்றது. இன்றுள்ள வன்னிநாட்டில் காணப்படும் பிரிவுகளைக் கவனிக்கின்றபோது, போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் காலத்தில் காணப்பட்ட வன்னிப் பிரிவுகளே தொடர்ந்திருக்கின்றன என்பதனைக் கண்டுகொள்ளலாம்;

மேலே குறிப்பிட்ட வன்னிப் பிரிவுகள் பற்றி நமது செப்பேட்டில் குறிப் பிடப்பட்டபோதும் கருநாவல் பற்று என்ற பிரிவு நமது செப்பேட்டில் குறிப்பிடப் படவில்லை. நாம் அறியக்கூடியதாகவுள்ள போர்த்துக்கீசர் காலப்பகுதியிலிருந்து தற் காலம்வரை வன்னிப்பிரிவுகளுள் கருநாவல் பற்று என்ற பிரிவும் இருந்து வருகின்ற போதும் அதுபற்றிய செய்தி நமது செப்பேட்டில் குறிப்பிடப்படாமை கவனிக்கத் தக்கது. சில வேளைகளில் இத்தானம் அளிக்கப்பட்டபோது, கருநாவல்பற்றுக்கு அதி காரியாக இருந்தவர், இத்தானத்தில் பங்குகொள்ளாது இருந்திருக்கலாம். அன்றேல் தானங்கொடுக்கப்பட்ட பின்னர் ஏறக்குறைய ஏழு வருடங்கள் கழித்து இத்தானம் எழுதப்பட்டமையால் கருநாவல்பற்று என்ற பிரிவைச் சேர்த்துக்கொள்ள மறந்திருக் கலாம். இருந்தும் கருநாவல்பற்று, செப்பேட்டில் சேர்த்துக்கொள்ளப்படாமைக்கான காரணத்தைத் திட்டவட்டமாகக் கூறுதல் கஷ்டமாகும்.

டச்சுக்காரரின் ஆட்சிக்காலத்தில், மேலே நாம் கவனித்த வன்னிப்பிரிவுகள் ஏறக்குறைய முந்நூறு கிராமங்களையுள்ளடக்கியனவாய் இருந்தன. இந்த வன்னி மாகாணங்கள் அளவில் பெரியனவாக இருந்தபோதிலும், குறைவான குடித்தொகை கொண்டனவாகவே காணப்பட்டன.[51] இவ்வன்னிப் பிரிவுகள் பெருமளவிற்கு ஒல் லாந்தரின் கவனத்தை ஈர்த்தமைக்குக்காரணம் அப்பிரிவுகளிலிருந்து ஒல்லாந்தர் பெற் றுக்கொண்ட யானை வருமானமே யெனலாம். அதாவது இப்பிரிவுகளில் அதிகமான யானைகள் காணப்பட்டன. இப்பிரிவுகளிலிருந்து ஒல்லாந்தர்பெற்ற யானை வருமா னத்தைப்பற்றிக் குறிப்பிடுகையில் பேராசிரியர் அரசரத்தினம் பின்வருமாறு குறிப் பிட்டுள்ளார்.

> ''இப்பிரிவுகளில் முன்னர் நல்ல நெல்வயல்கள் காணப்பட்டன. ஆனால் இங்குள்ள நீர்ப்பாசனத் திட்டம் பழுதடைந்த காரணத்தினால் அங்குள்ள நெல்வயல்கள் தரிசு நிலங்களாயின. இந்நிலையில் இப்பகுதிகள் மிக விரைவில் காடுகளாக மாறின. இதன்பின் இப்பகுதி காட்டு யானை களின் இருப்பிடங்களாயின. இந்த யானைகள் பெரும் லாபந்தரக்கூடிய வியாபாரப் பொருட்களாக இருந்தன. இந்த யானைகள் பிடிக்கப்பட்ட போது இவை யாழ்ப்பாணத்திலுள்ள சந்தைகளுக்கு எடுத்துச்செல் லப்பட்டு அங்கு இந்திய வியாபாரிகளினால் உயர்ந்த விலைக்கு வாங்கப் பட்டன. இந்த யானை வியாபாரம் ஆண்டொன்றுக்குச் சராசரியாக 100,000 விலொறின் (Florins) வருமானத்தை ஒல்லாந்தருக்களித்தது''[52]

மேற்கூறியதனைக் கவனிக்கும்போது, வன்னிப்பிரிவுகள் ஒல்லாந்தரது நடவடிக்கை களுக்கு அடங்க மறுத்தபோதும், ஒல்லாந்தர் தொடர்ந்து அவற்றின்மேல் தமது கவனத்தைச் செலுத்தியதற்குக் காரணம், அங்கிருந்து தாம் பெறவிருந்த யானைவரு மானத்தைப் பெறுவதற்காக இருக்கவேண்டும். இவ்வாறு இக்காலமளவில் வன்னிப் பிரிவுகளின் வருமானம் அங்குள்ள யானைகளில்தான் பெருமளவு தங்கியிருக்கவேண் டும் எனக் கொள்ளலாம்.

நாம் இங்கு அவதானிக்கின்ற பனங்காமம், கரிக்கட்டுமூலை, கருநாவல் பத்து, தென்னமரவடி, மேல்பத்து, முள்ளியவளை, பச்சிலைப்பள்ளி ஆகிய வன்னிப் பிரிவுகளில் பனங்காமப்பகுதியே செழிப்பிலும் அளவிலும் பெரிதாக இருந்தது எனக்

கயில வன்னியன் பற்றிக் கவனிக்கையில் கூறினோம்; வன்னிப்பிரிவுகளிலிருந்து ஒல்லாந்தர் பெற்றுக்கொண்ட வருமானத்தின் அளவைக் கவனிக்கையில், மேற்படி நமது கூற்று உண்மையாவதனை அறியலாம். அதாவது ஆரம்பத்தில் டச்சுக்காரர் இப்பகுதிகளிலிருந்து பெறவேண்டியிருந்த வருமானம் —

| | | |
|---|---|---|
| பனங்காமப்பகுதி | — | 16 யானைகள் |
| கரிக்கட்டுமூலை | — | 7 யானைகள் |
| கருநாவல்பத்து | — | 4 யானைகள் |
| தென்னமரவடி | — | 1 யானை |
| மேல்பத்து | — | 1 யானை |
| முள்ளியவளை | — | 1 யானை.[53] |

மேலும் நாம் முன்னர் கவனித்த றைக்லொவ் வான் கூன்ஸ் என்பவரின் (1675-1679) அறிக்கையிலிருந்தும், பனங்காமப் பகுதியிலிருந்து கூடுதலான யானைகள் ஒல்லாந்தருக்குக் கொடுக்கப்பட்டன என அறியலாம். இத்தகையதான ஒவ்வொரு பிரிவுக்கும் வரையறுக்கப்பட்ட யானைகளின் தொகை அப்பிரிவுகளில் காணப்பட்ட யானைகளின் எண்ணிக்கை விகிதாசாரத்துக்கிணங்கவே கணக்கிடப்பட்டது.[54] இதனைக் கவனிக்கும்போது பனங்காமப்பகுதி அதிக யானைகளைக் கொண்டு அதிக வருமானம் கொடுக்கும் பகுதியாக இருந்திருக்கின்றது என்பது தெரிகின்றது. நாம் ஏற்கனவே கவனித்தவற்றிலிருந்து பனங்காமப் பகுதியில் ஆதிக்கம்பெற்ற வன்னியர்கள் ஏனைய பிரிவைச் சேர்ந்தோரைக்காட்டிலும் கூடிய ஆதிக்கமுள்ளவர்களாக விளங்கினார்கள் என அறிந்து கொள்ளலாம். அதாவது கயிலவன்னியன், நல்லமாப்பாணர், நிச்சயச் சேனாதிராயர், குலசேகரர் ஆகியோர், அவர்களது நடவடிக்கைகளைப்பொறுத்து ஏனையோரைக்காட்டிலும் அதிகாரம்வாய்ந்தவர்களாக இருந்திருக்கிறார்கள் எனத் தெரிகின்றது. ஏனெனில் டச்சுக்காரருடன் கூடிய தொடர்பை அடிக்கடி கொண்டிருந்தவர்கள் அவர்களே. இவ்வாறு இவர்கள் ஏனையோரைக் காட்டிலும் கூடுதலான அதிகாரம் பெறுவதற்குப் பனங்காமப்பகுதி கூடிய வருமானங் கொடுக்கக்கூடிய ஒரு பகுதியாக இருந்தமை காரணமாக இருந்திருக்கவேண்டும்.

## நிர்வாகப் பதவிப் பெயர்கள்

இச் செப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகள் பெற்றிருந்த பதவிப் பெயர்களின் உதவியுடன், இக் காலமளவில் பொதுவாக வடக்கே, சிறப்பாக வன்னி நாட்டில் எத்தகைய நிர்வாகமுறை இருந்ததென்பதை ஓரளவுக்காவது அறிந்துகொள்ள முடிகின்றது; இச் செப்பேட்டிலிருந்து நாம் அறிகின்ற பதவிப் பெயர்கள்:- இறைசுவதோர், வன்னிபம், முதலியார், உடையார் என்பனவாகும்; இப் பதவிப் பெயர்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியே எடுத்து ஆராய்வதன் மூலம் அப்பதவிகளின் தன்மையினை நாம் விளங்கிக்கொள்ள முடியும். முதலில் இறைசுவதோர் என்ற பதவிப்பெயர் பற்றி நாம் இங்கு கவனிக்கலாம்.

## இறைசுவதோர்[59]

இச் சொல் போர்த்துக்கீச நிர்வாகச் சொல்லாகிய றெசிபதோர் (Recebedor) என்பதன் தமிழ்த் திரிபாகும். இச்சொல் போர்த்துக்கீசச் சொல்லாகிய றெசிபர் (Receber), (ஆங்கிலம் - Receive, லத்தீன் - Recipere) என்னுமடியாகப் பிறந்ததாகும்.[56] Receber என்றால் பெறுவது, சேகரிப்பது என்னும் பொருள்படும். Recebedor என்பது பெறுபவரை அல்லது (வரி) சேகரிப்பவரைக் குறிக்கும். இலங்கையில் போர்த்துக்கீசர் ஆட்சி நடத்திய காலத்தில் அவர்கள் பல புதிய நிர்வாக முறைகளைப் புகுத்தியிருந்தனர். அவற்றுள் ஒன்றாக Recebedor மூலம் சிறுசிறு பிரதேசங்களின் வரிகளைச் சேகரிக்கும் முறை இருந்துவந்ததனைக் காணலாம். இலங்கையில் போர்த்துக்கீசரது ஆட்சி நிர்வாகத்தால் ஏற்பட்ட பாதிப்பில் இந்த நிர்வாகப் பதவியும் ஒன்றாகும். இதே போன்று வேறு நிர்வாகப் பதவிகளும் இடம்பெற்றிருந்தன. எடுத்துக்காட்டாக ''அட்ஜுதந்தே'' (Adjutante) என்ற போர்த்துக்கீச நிர்வாகச் சொல்லு குறிப்பிடத்தக்கது. 1781 ஆம் ஆண்டுக்குரிய ஆவணமொன்றில் ''அயுதாந்தி வன்னிபம்'' எனவும் ''உடையார் கங்காணி அயுதாந்தி மொத்தக்கர்'' எனவும் குறிப்புகள் உண்டு.[56அ] இங்கேயுள்ள அயுதாந்தி என்பது போர்த்துக்கீசச் சொல்லாகிய ''அட்ஜு தந்தே''யின் திரிபாகும்.[57] இதன் பொருள் உதவியாளன் (Assistant) என்பதாகும். இவை எல்லாம் போர்த்துக்கீச ஆட்சியினால் இலங்கை அடைந்த பாதிப்பினை விளக்குவதற்கு நல்ல உதாரணங்களாகும். தொடர்ந்து நாம் எடுத்துக்கொண்ட றெசிபதோர் என்ற பதவிப்பெயரைக் கவனிக்கலாம். 1645 ஆம் ஆண்டளவில் இத்தகைய வரிசேகரிக்கும் உத்தியோகத்தர்கள் கடமை புரிந்தார்கள் என்பதனை, இக்காலத்துக்குரிய போர்த்துக்கீச ஆவணங்களிலிருந்து கண்டுகொள்ளமுடிகின்றது.

> "The collection of these village dues was entrusted to Recebedores (Collectors) and Adigar, and as usual the system had been abused. The number of collectors was unnecessarily large, and as each of them tried to create new charges of his own, there was much oppression. No clear rules existed for the regulation of their conduct. It was a common practice for them to use the collections of one year to meet their arrears of the previous year, and when a collector died the loss fell on the Fazenda. It was now laid down that the office was never to be held for life, but only for the three years at a time. Weligama was the most important of the provinces, and over this one officer was appointed to the joint posts of Recebedor and Adigar, as it was thought that his increased emlouments were likely to reduce his unlawful exactions. He was allowed the pay assigned to the adigar in the recently completed Tombo, and as Recebedor one per cent of the land rents and poll tax collected by him, as well as from the other dues which had to be paid by the villages of Weligama and the islands of Cardiva and Tanadiva, which belonged thereto. He was provided with a Patola containing all the details. If any Foreiro in the Province undertook to make good the sums due in respect of his lands, the Recebedor was at liberty to accept

his undertaking on sufficient security being given. This, however, did not extend to the Faros, which had to be recovered by a seperate collector.

A similar system was established in Tennmarachchi, while Pachchilapalai and Wadamarachi, which yielded but little, were combined under one officer as Adigar and Recebedor."[58]

மேலே நாம் கவனித்தவற்றிலிருந்து, இறைசுவதோர் என அழைக்கப்பட்ட வரி சேகரிப்பாளர்கள் கொண்டிருந்த கடமைகளை அறிந்துகொள்ளக்கூடியதாகவுள்ளது. அத்துடன் இந்தக் குறிப்பிட்ட பதவியை ஒருவர் மூன்று வருடத்திற்கு மாத்திரம் அனுபவிக்க முடிந்தது எனவும் அறியலாம்; போர்த்துக்கீச ஆவணங்களிலிருந்து றெசிபதோர் எனப்பட்டோர் பெற்றிருந்த சில உரிமைகளையும் நாம் அறியலாம்; தமக்குச் சேரவேண்டிய வருமானப் பாதுகாப்புக் கருதிச் சில நடவடிக்கைகளை மேற்கொள்ள உரிமையுடையவர்களாக இருந்தார்கள்; எடுத்துக்காட்டாக, புதிய தோம்பில் காணப்படுகின்ற தலையர்கள் (Talears) இல்லாத சமயங்களில், இவர்களைப் போன்று, வருமானத்தைப் பாதுகாக்கவும் அதனைப் பெற்றுக்கொள்ளவும் தகுதியுடையோரை நியமிக்கும் அதிகாரத்தை றெசிபதோர் என்போர் பெற்றிருந்தனர்; அத்துடன் பல்வேறுபட்ட சாதியினர், மக்களிடமிருந்து வரிகளைச் சேகரிப்பதற்கு வரிசேகரிக்கும் கொப்ருடோரிஸ் (Cobradores) எனப்பட்டோரை நியமிக்கும் அதிகாரம் பெற்றிருந்தனர் நாம் மேலே கவனித்த றெசிபதோர் என்போர்.[59]

நமது செப்பேட்டில் குறிப்பிடப்பட்டதிலிருந்து அதாவது, ''பச்சிலைப்பள்ளி இறைசுவதோர் இலங்கை நாராயண முதலியார்'' என்பதிலிருந்து, போர்த்துக்கீசர் காலத்தில் நிலவிவந்த றெசிபதோர் என்ற பதவி ஒல்லாந்தரது காலத்திலும் வழக்கத்திலிருந்திருக்கின்றது என அறியலாம். போர்த்துக்கீசரது ஆவணங்களிலிருந்து, றெசிபதோர் என்போர் கொண்டிருந்த கடமைகள், உரிமைகள் என்பவற்றை நாம் அறிந்துகொண்டபோதிலும், இதே உரிமைகளையே ஒல்லாந்தர் கால இறைசுவதோரும் கொண்டிருந்தார்களா? மற்றும் போர்த்துக்கீச றெசிபதோர் பதவி மூன்று வருடகாலத்துக்கு மாத்திரம் ஒருவரால் அனுபவிக்கப்பட்டதுபோன்று ஒல்லாந்தர் காலத்திலும் இப் பதவியின் ஆயுட்காலம் மூன்று வருடமாகத்தான் இருந்ததா? என்பன போன்ற கேள்விகள் எழுகின்றன. இறைசுவதோர் எனப்பட்டோர், கொண்டிருந்த அதிகாரங்கள், கடமைகள் என்பனவற்றைப் பொறுத்துத் தெளிவான ஆதாரங்கள் ஒல்லாந்த ஆணவங்களில் இல்லாமையால், மேற்கண்ட வினுக்களுக்குத் திட்டவட்டமாக விடையிறுத்தல் கஷ்டமானதொன்ருகும்.

பவில்லியன் (Pavilioen) என்ற ஒல்லாந்தத் தேசாதிபதியினுல் 1665 இல் எழுதப்பட்ட அறிக்கையொன்றில் றெசீவர் எனப்பட்ட அறவிடுவோர் கொண்டிருந்த கடமைகள்பற்றிச் சில குறிப்புகள் காணப்படுகின்றன; அவ்வறிக்கையிலிருந்து நாம் அறிய முடிவது - தோம்புகளில் குறிப்பிடப்பட்டவற்றிற்கிணங்க வருமானங்களைச் சேகரித்து, கொமாண்டரின் கட்டளைகளின்பேரில் மூன்று மாதங்களுக்கொருமுறை அவற்றைக் கணக்குக் குமாஸ்தாவிடம் (Cashier) கொடுக்கவேண்டும் அறவிடுவோர்; முதலியார்களும் அறவிடுவோரும் (Receivers) மாதமொன்றுக்கு 10 பணமும் (Fannums) இருபத்துநாலு சியேசுக்குச் (Seers) சரியான 1 பறை (Parra) அரிசியும் உப

காரச் சம்பளமாகப் பெறுவர்; மற்றும் முதலியார்களிலிருந்தும் அறவிடுவோர்களிலிருந்தும் நால்வர் தெரியப்பட்டு, 100 பணத்துக்கு மேற்படாத பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நீதிபதிகளாக நியமிக்கப்படுவர்.[60]

மேற்கண்டவாறு அறவிடுவோர் கொண்டிருந்த கடமைகள் பற்றிச் சிலவற்றை அறிய முடிந்தாலும் போர்த்துக்கீசர் காலத்தில் நிலவியதுபோல ஒல்லாந்தர் காலத்திலும் இப்பதவியின் ஆயுட்காலம் மூன்று வருடங்களுக்கு மாத்திரம் இருந்ததா என்பதனை அறிய ஆதாரங்கள் கிடைக்காமையால் தற்போதைய நிலையில் அதுபற்றி எம் முடிவினையும் கொள்ளமுடியாதுள்ளது. இருந்தும் 1697 ஆம் ஆண்டுக்குரிய ஒல்லாந்த அறிக்கையொன்றிலிருந்து, 'அறவிடுவோர் தாம் கடமை புரியும் மாகாணங்களில் அதிக காலம் நிலையாகக் கடமை புரிவதன்மூலம் மக்களிடையே செல்வாக்குப் பெற்று அச் செல்வாக்கைத் தங்களின் அதிகார வளர்ச்சிக்குச் சாதகமாகப் பயன்படுத்தாது கவனித்துக்கொள்வதற்கு அவர்கள் மூன்று வருடங்களுக்கொருமுறை இடமாற்றப்பட வேண்டுமென ஏற்கனவே 1673 க்கும் 1675 க்கும் இடைப்பட்ட காலத்தில் உத்தர விடப்பட்டிருந்தது' என்பதனை அறிய முடிகின்றது.[61] இவ்வாறு மூன்று வருடத்திற்கு ஒருமுறை இந்த அறவிடுவோர் எனப்பட்டோர் இடமாற்றப்படவேண்டும் என உத்தரவு ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டிருந்தாலும் அது நடைமுறையில் எவ்வளவு தூரத்துக்குப் பின்பற்றப்பட்டது என அறிதல் கஷ்டமாகும்.

நாம் எதிர்நோக்கும் இன்னோர் பிரச்சினை, நமது செப்பேட்டில் 'இறைசுவதோர்' பதவியை வகித்தவராகக் கூறப்படும் இலங்கைநாராயண முதலியாரவர்கள் யார்? என்பதாகும். இக் காலத்துக்குரிய ஒல்லாந்தக்குறிப்புகளில் அடிக்கடி குறிப்பிடப் படுபவர் நாம் முன்னர் கவனித்த இலெங்கைநாராயண முதலியாராவர். இலங்கை நாராயண முதலியார் ஒருவர் இறைசுவதோர் பதவியை வகித்திருந்தார் என்பதற்கு ஒல்லாந்தக் குறிப்புகளில் ஆதாரங்கள் கிடைக்கவில்லை. பெருமளவு பெயர் ஒற்றுமை கொண்டு மேலேகூறப்பட்ட இருவரும் (இலெங்கைநாராயணர் - இலங்கைநாராயணர்) உண்மையில் ஒருவராக இருந்திருக்கலாமா? என்ற கேள்வி எழுகின்றது. கிடைக்கின்ற தகவல்களைக்கொண்டு பார்க்கும்போது இவர்கள் இருவரும் ஒருவராக இருந்திருக்க முடியாது எனக்கூறலாம்; ஏனெனில் ஒரே செப்பேட்டில் இரு பெயர்களும் வெவ்வேறு விதமாகக் கொடுக்கப்பட்டுள்ளன. (மேல்பத்து முள்ளியவளை இலெங்கைநாராயண முதலியார் = பச்சிலைப்பள்ளி இறைசுவதோர் இலங்கைநாராயண முதலியார்) பெயர் வேறுபாடு மாத்திரமின்றி மேலே கூறப்பட்ட இருவரும் சமகாலத்தில் வெவ்வேறு பதவிகளை வகித்தவர்களாகக் கூறப்பட்டுள்ளார்கள். இக் காரணங்களினால் இருவரையும் ஒருவராக அடையாளங்கண்டுகொள்ள முடியாதுள்ளது. ஆகவே மேற்கொண்டு தகவல்கள் கிடைக்கும்வரை இறைசுவதோர் இலங்கைநாராயண முதலியாரவர்களை அடையாளங்கண்டுகொள்வது கஷ்டமானதொன்றாகும்.

## வன்னிபம்

இச் செப்பேட்டில் அடிக்கடி வன்னிபம் என, அதாவது பனைங்காமப் பத்து வன்னிபம், தென்னமரவடிப் பத்து வன்னிபம், மேல்பத்து வன்னிபம், முள்ளியவளை வன்னிபம் எனக் குறிப்பிடப்பட்டிருத்தலைக் கவனிக்கும்போது, இவ்வன்னிபமானது

பதவியைக் குறிக்கும் ஒரு சொல்லாகக் காணப்படுகின்றது. இச் சாசனத்தைவிட மட்டக்களப்பு மான்மியம் என்ற நூலில் வன்னிபங்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

''வன்னிபங்கள் குலவரிசை முட்டிகூற மகிழ்ச்சிகொண்டு
எழுந்திடுன் மரபும் நாடுமெந்த
மன்னருன்னை வன்னிபமாய் வகுத்ததென்றும
மாநிலத்திலுங்கள் முன்னோர் வாழ்ந்தவூரும்
துன்னுபுகழ் கோத்திரமும் தொன்றுதொட்டுத்
துணையரசன் பேருருஞ் சொன்னுலிந்த
பன்னுபுகழ் சபையோர்கள் மகிழக்கூறிப்
பங்குபெறு மறியாயனுற் பாவமாமே.

''அறியாதானிச் சபைக்கு அகலநிற்பான் [னெங்கள்
பரன்றெழும்பேர் பழிப்புரைப் பாரறைவே
நெறிதவருர் சுயநாடு காளிகட்டம் நீர்குலமே
படையாட்சி யுழுதூனுண்டோர்
வெறிகமழ மகாலிங்க வாசனெங்கள் திறத்தோரைப்
படைத்துணைக்குத் தலைவனுக்கி
முறியறிந்து வன்னிபங்கள் குலமே என்றும்
குகப்பட்டதரசு கொண்டோனுனே.[62]

நமது செப்பேட்டிலுள்ள வன்னிபம் என்ற குறிப்பு பதவியை குறிப்பதாகவுள்ளது எனக் கூறினோம்; மேலேயுள்ள செய்யுட்களில், ''மன்னருன்னை வன்னிபமாய் வகுத்த தென்றும்'' எனக் கூறப்பட்டிருத்தலைக் கவனிக்கும்போதும் அது பதவிப் பெயரையே குறிப்பதாகக் காணப்படுகின்றது. செப்பேட்டில் இடம் பெறும் வன்னிபம் பதவிப்பெயர் என்ற அடிப்படையில் அது வன்னி நாட்டின் பிரிவுகளுக்குரிய தலைவர் பதவியைக் (Chieftain) குறிக்கும் ஒன்றுகக் காணப்படுகின்றது.

மேற்கூறிய இரண்டாவது செய்யுளில் ''குறியறிந்து வன்னிபங்கள் குலமே என்றும்'' என்ற தொடரைக் கவனிக்கையில் அங்கு வன்னிபம் என்பது பதவிப் பெயரை அன்றிக் குலத்தைக் குறிப்பதாக அல்லது வன்னியர்கள் என்ற இனத்தைக் குறிப்பதாகத் தோன்றுகின்றது. கோணேசர் கல்வெட்டு என்ற நூலில் வன்னியனுர் என்ற பொருளில் வழங்கும் பல வன்னிபங்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இக் குறிப்பிட்ட நூலில் வன்னிபங்களின் வரவுபற்றிக் குறிப்பிடுகையில் கூறப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

''தனியுண்ணுப் பூபாலவன்னிபம் முதலாக
எத்தனை வன்னிபம் இத்தலத்துக்கு அரசுரி
மை பண்ணின தென்று கனகசுந்தரப்
பெருமாளைக் கேட்க அவர் சொன்ன
வசனம்.........''[63]

மேற் குறிப்பிடப்பட்டுள்ள வன்னிபம் என்பது, பதவியொன்றைக் குறிக்காததால், வன்னியர் என்ற பொருளில் இனத்தைக் குறிப்பதாகவுள்ளதனைக்காகவனிக்கலாம் ஆகவே, இதுவரை கவனித்தவற்றைக் கொண்டு வன்னிபம் என்ற செல்லு பதவியொன்றின் பெயராகவும் இனத்தின் பெயராகவும் வழங்கப்பட்டுவந்தது எனக் கூற முடியும். இவ்வன்னிபப் பெயர் திட்டவட்டமாக ஒரே பொருளைக் குறிக்கத்தக்கவகையில் பயன்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. நமது செப்பேட்டில் இந்த வன்னிபம் எனப்பட்டது பதவிப் பெயரையே குறித்து நின்றது எனக் கண்டுகொள்ளலாம். ஏனெனில் ஒரு அதிகாரி பதவி பெற்ற இடம், அவரின் இனம், அவரின் பெயர் எல்லாம் குறிப்பிடப்பட்டே வன்னிபம் என்பது குறிப்பிடப்படுகின்றது. எடுத்துக்காட்டாக ''தென்னமரவடிப்பத்து வன்னிபம் புவிநல்ல மாப்பாண வன்னியனர்'' என்பதனைக் காணலாம். இதனுல் வன்னிபம் என்ற சொல் இங்கு பதவியைக் குறிக்கின்றது என்பது உறுதிப்படுத்தப்படுகிறது. வன்னிமை எனப்படுவதும் வன்னிபம் என்பதனை ஒத்ததாய் 'வன்னிய அதிகாரி' என்ற பதவியைக் குறிப்பதாகும். வையா பாடல் என்ற நூலில் பூபால வன்னிமை (பூபால வன்னிய அதிகாரி) ஒருவன் குறிப்பிடப்படுவதனைக் காணலாம்.[64]

நமது செப்பேட்டில் வன்னிபப் பதவியைப் பெற்றிருந்தோர் எல்லோரும் வன்னியராக இருந்துள்ளதனைக் காணலாம். இதனைக்கொண்டு வன்னியர்கள் மாத்திரமே வன்னிபப் பதவியைப் பெற்றிருந்தார்கள் என்ற முடிவுக்கு வருதல் கஷ்டமாகும். மட்டக்களப்பு மான்மியம் என்ற நூலில் இன்னேரிடத்தில் முக்குவர் சாதியைச் சேர்ந்தோர் வன்னிமையாக இருந்தமை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது[65]. இதனடிப்படையில் வன்னிய அதிகாரிகளாக இருந்தோர் எப்போதும் வன்னிய இனத்தினராக இருக்கவில்லை எனத் தோன்றுகின்றது.[66]

## முதலியார்

நமது செப்பேடு குறிப்பிடுகின்றவற்றுக்கிணங்க அறிவதென்னவெனில், நிச்சயச் சேனதிராயரும், ரணசூரரணதீரராகரும், இலெங்கைஞராயணரும் வன்னிபப் பதவியோடு முதலியார் பதவியையும் பெற்றிருந்தார்கள். அதே நேரத்தில் குலசேகரர் தனியே முதலியார் பதவியைப் பெற்றிருந்தார். இறைசுவதோராக இருந்த இலங்கைஞராயணரும் முதலியார் பதவியைப் பெற்றிருந்தார் என அறியலாம். இவ்வாருக இந்த சாசனத்தில் இடம்பெறும் முதலியார் பதவிபற்றிய குறிப்புகள் இக்காலமளவில் அதாவது 17 ஆம் நூற்ருண்டின் பிற்பகுதியிலும் பதினெட்டாம் நூற்ருண்டின் முற்பகுதியிலும் வடக்கே நிலவிய நிர்வாக முறைபற்றி அறிந்துகொள்ள ஓரளவுக்காவது உதவுகின்றன எனலாம். இதனுல் இந்த முதலியார் பதவியின் தன்மைபற்றி இங்கு கவனித்தல் பொருத்தமானதாகத் தோன்றுகின்றது.

இடைக்காலத் தென்னிந்திய சாசனங்கள் பலவற்றில் முதலிகள், முதலியார் என்பன பற்றிய குறிப்புகள் அடிக்கடி இடம்பெறுகின்றன[67]. இச் சாசனங்களில் குறிப்பிட்ட முதலி, முதலியார் என்பவை இடம்பெறுகின்ற சந்தர்ப்பங்களை நோக்கும் போது இவை குறிப்பிட்ட சில பதவிகளைக் குறித்தன எனக்கூறுவதற்கில்லை. அவை தலைவர், பிரதானிகள் என்ற கருத்தில் வழங்கியிருக்கின்றன எனக் கொள்ளவேண்

டும். 14 ஆம் நூற்றாண்டுக்குரிய இலங்கா திலக விகாரைச் சாசனத்திலும் முதலிகள் பற்றிய குறிப்புக் காணப்படுகின்றது. அதில் 'நாமும் முதலிகளும் நாட்டவரும்' என்ற குறிப்புக் காணப்படுகின்றது.[68] இந்த இடத்திலும் முதலிகள் என்பது 'பெரியவர்கள்' தலைவர்கள் என்ற கருத்தில் வழங்கப்பட்டிருப்பதனை அவதானிக்கலாம். இவற்றைக் கொண்டு கவனிக்கையில் இக்காலமளவில் இந்த முதலியார், முதலி என்ற சொற்கள் குறிப்பிட்ட ஒரு பதவியொன்றினைக் குறித்ததாக இல்லாமல், பொதுவான கருத்தில் வழங்கப்பட்டிருக்கவேண்டும் எனக்கூறலாம். பிற்பட்ட காலத்தில், குறிப்பாக விஜய நகர காலத்தில், முதலியார் என்ற பெயர் சில சிறப்புப் பதவிகளைத் தாங்கியோருக்கு அளிக்கப்பட்ட விருதாக இடம்பெறுவதனைக் காணலாம்.[69] அத்தகைய ஒரு விருதாகவே இங்கு ஆராயப்படும் சாசனத்திலும் இப்பெயர் காணப்படுகின்றது. இப்படியான பெயர்கள், தென்னிந்தியச் செல்வாக்கின் விளைவாக வடஇலங்கை நிர்வாகத்தில் இடம்பெற்றவையாகும்.

ஆரம்பத்தில் குறிப்பிடும்போது நமது செப்பேட்டில் இடம்பெறும் அதிகாரிகளில் சிலர் வன்னிப் பதவியைப் பெற்றிருந்த சமயத்தில் முதலியார் என்ற பதவியையும் பெற்றிருந்தார்கள் எனக் கவனித்தோம். வன்னிபப் பதவியைப்பற்றி முன்னர் கவனித்தபோது, இது வன்னிநாட்டிலுள்ள பிரிவுக்குரிய அதிகாரப் பதவியைக் குறித்தது எனக் கூறினோம். இதனடிப்படையில் நோக்கும்போது வன்னிபம், முதலியார் பதவியைவிட உயர்ந்தது என அறியலாம். அவ்வாறாயின் வன்னிப்பதவியைப் பெற்ற ஒரு வன்னியர் ஏன் முதலியார் பதவியையும் பெற்றிருந்தார் என்ற கேள்வி எழுகின்றது. இக்கேள்வியைப் பொறுத்து இங்கு கொடுக்கக்கூடிய விளக்கம், இந்த வன்னிபப் பதவியையும் முதலியார் பதவியையும் குறிப்பிட்ட வன்னிய அதிகாரிகள், அவர்கள் வன்னிபப் பதவியைப் பெறமுன்னர் முதலியார் பதவியைப் பெற்றிருந்தார்கள் என்பதும் பின்னர் அவர்கள் வன்னிபப் பதவியைப் பெற்றபொழுதிலும், முதலில் அவர்கள் பெற்றிருந்த முதலியார் என்ற பதவிப் பெயர் தொடர்ந்து அவர்களுக்காயிருந்திருக்கவேண்டுமென்பதாகும். இவ்வதிகாரிகள் முதலில் முதலியார் என்ற பதவியைப் பெற்றிருந்து பின்னர் வன்னிபப் பதவியைப் பெற்றிருந்திருப்பர் என்ற நமது விளக்கத்திற்கு இச்சாசனம் குறிப்பிடும் குலசேகர முதலியார் நல்லோர் உதாரணமாக அமைகின்றார். இச் சாசனத்தில் குலசேகரர் என்பவர் தனியே முதலியார் என்ற பட்டத்தையே பெற்றிருந்தார் எனக்கண்டோம். முன்னர் இக் குலசேகர முதலியாரை ஒல்லாந்தக் குறிப்பில் இடம்பெறும் குலசேகர வன்னியருடன் அடையாளங்கண்டு கவனித்தபோது, இக் குலசேகரர், ஒல்லாந்தரின் நம்பிக்கையைப் பெறக்கூடியதாக நடந்தமையால் அதாவது புவிநல்லமாப்பாணரையும், நிச்சயச் சேனாதிராயரையும் ஒல்லாந்தருக்குக் காட்டிக்கொடுத்து வன்னிபப் பதவியைப் பெற்றுக்கொண்டார் எனக் கவனித்தோம். குலசேகரர் முதலில் முதலியாராக இருந்து பின்னர் வன்னியராக மாறினதுபோன்று முன்னர் குறிப்பிட்ட ஏனைய அதிகாரிகளும் முதலியாராக இருந்து பின்னர் வன்னிபப் பதவியைப் பெற்றிருக்கலாம்.

வன்னியர் பற்றிக் குறிப்பிடுகின்ற கி. பி. 18 ஆம் நூற்றாண்டுக்குரிய ஆவணத்திலுள்ள குறிப்புகளின் துணைகொண்டும் முதலியார் பதவிபற்றிய சில தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருப்பது:-

''... ....சாதி வெள்ளாழன் ஆள்வயினுர் கந்த உடையான்
வந்து கிழக்கு மூலைக்குத் தொளிலும் முதலியாரெ—
ன்கிற பட்டப்பெருங் கிடைக்கவெணுமென்று
மிகுந்த எளிதாவுடனெ மன்ருடிக் கெட்ட
படியால் நாமுஞ் சம்மதித்துச் சொல்லப்பட்ட
கந்த உடையானுக்கு திசைவிளங்க நாய முதலி—
யென்கிற பட்டமுங் கட்டி..................சகலரும்
இவனைத் தங்கள் முதலியாரென்கிற
தறிந்து அடித்த சங்கை பண்ணி முதலியாரென்ற
பெர் சொல்லிஅழைக்கவும்............''[70]

மேலே குறிப்பிட்ட ஆவணச் செய்தியிலிருந்து நாம் அறிந்துகொள்ள முடிவது—முதலியார் என்ற பதவி, பரம்பரை பரம்பரையாக வழங்கிவராமல், பிறரால் அது ஒரு பதவியாக அளிக்கப்பட்டிருக்கின்றது என்பதாகும். குலசேகர நல்லமாப்பாண வன்னியன் இந்த முதலியார் பதவியை அளித்திருந்தான் என அறிய முடிவதால், முதலியார் பதவியை அளிக்கும் அதிகாரத்தை வன்னிப்பிரிவுக்குத் தலைவராக இருந்தோர் (வன்னிமை) பெற்றிருந்திருக்கிறுர்கள் எனத் தெரிகின்றது. அத்துடன் உடையான் ஒருவன் இந்த முதலியார் பதவி வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டமையால் உடையார் என்ற பதவியிலும் முதலியார் பதவி முக்கியத்துவம் உடையதாக விளங்கியது எனவும் கவனிக்கலாம்.

முற்பட்ட காலத்து முதலியார் சிலரைப்போன்று, இக்கால முதலியார்களும் நீதி சம்பந்தமான கடமைகளைச் செய்திருக்கிறுர்கள் என்பதற்கு ஒல்லாந்தக் குறிப்புகளில் சில தகவல்கள் கிடைக்கின்றன. ஒல்லாந்த அறிக்கையொன்றில் நில அளவையாளர்களைப் பற்றிக் குறிப்பிடுகையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

''நில அளவையாளர் இப்போது கடமையில் இருக்கிறுர்
வடமராட்சி மாகாணத்தில், குடியானவர்களி—
ன் நிலங்கள் அளக்கப்படும்போது, அவர்களிடை
யே ஏற்படும் சிறு தகராறுகளைத் தீர்ப்பதற்காக அளவை
யாளர் தங்களுடன் இரு முதலியார்களையும் வைத்திருக்கி
றுர்கள். இந்த முதலியார்கள் கிராமங்களிலுள்ள
மஜோறல்ஸுகளுக்கு (majoraals) முன்னிலை—
யில் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றுவார்கள்.
மிக முக்கியமான வழக்குகள் திசாவை—
யின் கவனத்துக்குக் கொண்டுவரப்படவேண்டும்.''[71]

மேலும் ஒல்லாந்த தேசாதிபதியான பவில்லியன் (Pavilioen) என்பவரின் அறிக்கையில் இந்த முதலியார் எனப்பட்டோர் மாதமொன்றுக்கு 10 பணம் 24 சியேசுக்குச் சரியான 1 பறை அரிசியும் உபகாரச் சம்பளமாகப் பெற்றனர் எனக் கூறப்பட்டிருத்தலைக் காணலாம்.[72] அத்துடன் 100 பணத்துக்கு அதிகமாகாத பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இந்த முதலியார்கள் அறவிடுவோருடன் சேர்ந்து கடமையாற்றி

ஞர்கள் எனவும் கூறப்பட்டுள்ளது.[73] இத் தகவல்களைக் கவனிக்கும்போது இக்கால மளவில் முதலியார்கள் என்போர் பெரிதும் நீதிபரிபாலனக் கடமைகளைப் புரிவோராக இருந்திருக்கிறார்கள் எனத் தோன்றுகிறது. மிகப் பிற்பட்ட காலங்களிலும் முதலி யார்பதவி வழக்கத்திலிருந்தபோதிலும், அப்பதவியைப் பெற்றிருந்தோர் கொண்டி ருந்த கடமைகள் வேறுபட்டனவாக விளங்கலாயின எனலாம். இடைப்பட்ட காலத் தில் சிங்களப் பிரதேசங்களிலும் இத்தகைய முதலியார் பதவி வழக்கத்தில் இருந்தது என்பதனைக் காணலாம்.

## உடையார்

நமது சாசனத்திலுள்ள குறிப்பின் பிரகாரம், இந்த உடையார் என்ற பதவி யைப்பெற்றிருந்தவர் மயிலாத்தை என்பவர் மாத்திரமே. முதலியார் போன்று உடையார் என்பதும் ஒரு உள்ளூர் நிர்வாகப் பதவி ஒன்றைக் குறித்து நிற்பதால் இக்காலத்தில் வடக்கேயிருந்த நிர்வாக ஆராய்ச்சிக்கு இதுவும் உதவுகின்றதனைக் காண லாம். முன்னர் முதலியார் பதவியைக் கவனித்ததுபோன்று இந்த உடையார் பதவி யின் ஆரம்பத்தையும் ஓரளவுக்குக் கவனித்துக்கொள்ளலாம்.

முற்பட்ட காலத்துக்குரிய கல்வெட்டுக்களிலே இந்த உடையார் எனப்பட்டது அடிக்கடி கடவுளினதும் அரசனினதும் பெயர்களுடன் இணைத்துக் கூறப்பட்டது; இவ்வாறிருந்தும், அரசனின் அதிகாரிகள் சிலரும் இந்த உடையார் என்ற பதவியைப் பெற்றிருந்தார்கள். பல கல்வெட்டுக்களிலே இந்த உடையார் எனப்பட்டோர் பொது விவகாரங்களுடன் தொடர்புகொண்டிருந்தமையை அறியக்கூடியதாக உள்ளது. எடுத் துக்காட்டாக மாறவர்மன் சுந்தரபாண்டியனுக்குரிய திரிப்புவனம் கல்வெட்டில் பத்தி ரத்துக்குக் கையெழுத்திட்டவர்களில் உலகளந்த சோழ நல்லூரான மாஞபரண மூவேந்தவேளாளர் உடையான், சோழபாண்டிய வளநாட்டு காவேரி நல்லூரான நம்பி பொன்னம்பலக் கூத்தனுடையான் என்போர்கள் குறிப்பிடப்பட்டுள்ளார்கள்.[74]

தொடர்ந்து விஜயநகர காலப்பகுதியிலும் இந்த உடையார் என்ற பதவியைத் தாங்கியோர்பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன; சில குறிப்புகளிலிருந்து, மாகாண ஆட்சியாளர்களாக வெளியிடங்களுக்கு அனுப்பப்பட்ட முதல் விஜயநகர வம்சத்தைச் சேர்ந்த இளவரசர்கள் உடையார் என்ற விருதைப் பெற்றிருந்தமையையும் கவனிக்க முடிகின்றது.[75]

நமது செப்பேட்டில் உள்ள குறிப்பு மாத்திரமன்றி, நாம் முன்னர் கவனித்தது போல, பதினெட்டாம் நூற்றாண்டுக்குரிய ஆவணத்திலும், வடபகுதியில் நிலவிய உடை யார் பதவிபற்றியறிந்துகொள்ள முடியும்.[76] கந்த உடையான் என்பவன் முதலியார் பதவிக்கு உயர்த்தப்பட்ட செய்தியை அறியலாம். இந்த உடையார் என்ற பதவிப் பெயரே பிற்காலம்வரை நிலைபெற்றிருக்கிறது போலும். முதலியார் போன்று இந்த உடையார் பதவியும் வட இலங்கையின் நிர்வாகத்தையும் பொறுத்து, தென்னிந்தியச் செல்வாக்கின் தன்மையைக்காட்டுகின்றது.

## கங்காணி

சாசனத்தின் இறுதிப் பகுதியில், சாசனத்துக்குக் கைச்சாத்திட்டவனாகக் கண் காணித் தாண்டவராயன் என்பவன் ஒருவன் குறிப்பிடப்படுகின்றான். இங்கு கண்காணி என்பது ஒரு பதவியைக் குறிக்கும் பெயர் என அறியலாம். இந்தக் கண்காணி என்ற பதவி மேற்பார்வை செய்வோன், மேல் விசாரணை செய்வோன் என்ற பொருளைக் குறிக்கின்றது.[77] கிடைக்கின்ற குறிப்புகளின் உதவிகொண்டு குறிப்பிட்ட ஒரு வேலையை யன்றி எந்த ஒரு வேலையையும் மேற்பார்வை செய்வோனை இப்பதவி குறித்தது எனக் கூறக்கூடியதாகவுள்ளது; பன்னிரண்டாம் பதின்மூன்றாம் நூற்றாண்டுகளில் இப்பதவி யானது தென்னிந்தியாவில் பெரு வழக்கில் இருந்தது என்பதற்குச் சோழ மன்னர், பாண்டி மன்னர்களது சாசனங்களில் இப்பதவி அதிகமாக இடம்பெறுவது சான்றாக வுள்ளது; சோழர் காலத்துத் திருமுக்கூடல் கல்வெட்டில் ''சாத்திரக் கண்காணியோடும் கிடைக் கண்காணியோடும்'' என்ற குறிப்பும் 'புரவு வரித் திணைக்களத்துக் கண்காணி' என்ற குறிப்பும் காணப்படுகின்றன.[78] அதிகமான பாண்டியர் சாசனங்களில் 'புரவு வரித் திணைக்களத்துக்குக் கண்காணி' என்ற குறிப்பு இடம்பெறுகின்றது.[79] பாண்டி மன்னன் ஜடாவர்மன் சிறிவல்லவனுக்குச் சேர்ந்த ஒரு கல்வெட்டில் பின்வரும் குறிப் புக் காணப்படுகின்றது:—

> ''......தெவர் கங்காணி இரவூருடையான் அரயன் சொழ பாண்டிய......வன் தில்லைக் கூத்தனும் நக்கந் தொன்றியும் பந்மாயேஸ்வரக் கங்காணி கொ...ழ...தருஞ் சைவசிகாமணியும் பிள்ளையடியா னும் கங்காணியாகக் கல்வெட்டி னென் பராக்கிரம பாண்டியப் பெருந்தச்சனென் எழுத்து...''[8]

இத்தகையதாக, மேற்கண்ட குறிப்புகள், சோழ, பாண்டியர் காலத்தில் குறிப்பிட்ட கண்காணிப் பதவி வழக்கிலிருந்தமையைக் காட்டுகின்றன. தென்னிந்தி யாவில் மாத்திரமின்றி, இக்காலமளவில் இக் கண்காணிப் பதவி இலங்கையிலும் இருந்ததென்பதற்குச் சில சான்றுகள் கிடைகின்றன. எடுத்துக்காட்டாக, கி. பி. 12 ஆம் நூற்றாண்டின் மத்திய பகுதிக்குச் சேர்ந்ததான II ஆம் கஜபாகுவின் மங் கானைக் கல்வெட்டொன்றில் ''சிவிகை யாரில் கண்காணி மிந்தன் கொற்றனென்'' என்ற குறிப்புக் காணப்படுகின்றது.[81] இதன் பொருள் 'சிவிகையாருக்கு மேற்பார்வை யாளனான மிந்தன் கொற்றன்' (Mintan Korran, the overseer of the Palanquin bearers) எனக் கவனிக்கப்படும்.[82]

முற்பட்ட சோழ, பாண்டியர் காலத்தில் மட்டுமன்றிப் பிற்பட்ட விஜயநகர காலத்திலும் இப்பதவி வழக்கத்திலிருந்தமைக்குச் சில குறிப்புகள் காணப்படுகின்றன. தமிழ் நாட்டு நிர்வாகத்தைப் பொறுத்து, குமாரகம்பண (Kumāra Kampaṇa) என்ற அரசனுக்கு உதவிபுரிந்த அதிகாரிகளின் கூட்டத்தில் கண்காணி என்ற அதிகாரியும் இருந்தமையைக் காணலாம்.[83] திருப்பனங்காட்டுச் சாசனம் ஒன்று, குமாரகம்பண என் வன், கோவிலொன்றையும் தனது அரண்மனையையும் பாதுகாப்பதற்காக 'ஜயசிங்க தேவ' என்பவனொருவனைக் கண்காணியாக நியமித்தான், எனக் குறிப்பிடுகின்றது.[84]

இதுவரை நாம் கவனித்தவற்றிலிருந்து, காலத்துக்குக் காலம் மேற்பார்வை செய்யும் தொழிலையுடைய கண்காணி எனப்பட்ட அதிகாரிகள் கடமைபுரிந்திருக்கிறார் கள் எனக் காணலாம். இந்தக் கண்காணி என்பது சில வேளைகளில் 'மேற்பார்வை

செய்வதற்காக இறுக்கப்படவேண்டிய வரி'யையும் குறித்ததாக இருந்திருக்கின்றது; சில சமயங்களில் பல வகைப்பட்ட வரிகளுடன் சேர்த்து இந்தக் கண்காணி என்ற சொல் குறிப்பிடப்படுகின்றது.[85] இருந்தும் நமது செப்பேட்டில் இடம்பெறும் கண்காணி என்பது பதவியைக் குறிக்கின்றது எனக்கண்டுகொள்ளலாம். 1781 ஆம் ஆண்டுக்குச் சேர்ந்த ஆவணமொன்றிலும் கண்காணி என்ற பதவிப் பெயர் குறிப்பிடப்பட்டிருத்தலைக் காணலாம்.[86] நவரத்தினம் அவர்கள், வன்னியரின் நிர்வாகம் பற்றிக் கவனிக்கையில், கண்காணி என்பதற்கு 'யுத்த காலங்களில் படைவீரரைச் சேகரிப்போராக இருந்த இராணுவ அதிகாரி' எனப் பொருள் கொடுத்துள்ளார்.[87] இவ்வாறு பொருள் கொள்ளுவதற்கான சான்றுகளை அவர் கொடுக்கத் தவறியமையால் அதனை ஏற்றுக்கொள்ள முடியவில்லை; பெரும்பாலும் இப்பதவி மேற்பார்வையாளரைக் குறித்ததென்பதற்கே சான்றுகள் கிடைக்கின்றன. இக்காலமளவிலும், நில அளவையாளர்களிடையே 'கங்காணி' எனப்பட்ட உத்தியோகத்தர்கள் இருப்பதனைக் கண்டுகொள்ள முடிகின்றது;

## வேங்கடபதி தேவமகாராயர்

நமது சாசனத்தின் தொடக்கத்தில் கூறப்பட்டுள்ள மெய்க்கீர்த்திப் பகுதியில் "வேங்கட பதி தேவ மகாராயர் பிருதுவி ராஜ்யம் பண்ணியருளா நின்ற" என்ற குறிப்புக் காணப்படுகின்றது. இங்கே நாம் கவனிக்கும் வேங்கட தேவ மகாராயர் என்ற குறிப்பு விஜயநகர மன்னர்கள் சிலரின் சாசனங்கள் பலவற்றில் இடம்பெறுவதனைக் காணலாம். அச் சாசனங்களைக் கவனிக்கையில் அவற்றில் வேங்கடபதி தேவ மகாராயர், மகா மண்டலேசுவர வேங்கடபதி தேவ மகாராய,[87அ] ஸ்ரீ வீரப்பிரதாப ஸ்ரீ வேங்கடபதி,[88] வீரப்பிரதாப வீர வேங்கட பதி தேவ மகாராயர்[89] ஆகிய குறிப்புக்களைக் கண்டுகொள்ளமுடிகின்றது. இங்கே கவனிக்கப்படும் வேங்கடபதி என்பது இக்கால விஜய நகர மன்னர்களின் பெயரைக் குறித்ததாகும்.

விஜய நகரப் பேரரசின் வரலாற்றை எடுத்துநோக்குகையில் அங்கு வேங்கட என்ற பெயரைத் தாங்கிய மூன்று அரசர்கள் ஆட்சிபுரிந்திருக்கிறார்கள் என்பதனைக் கண்டுகொள்ளலாம். வேங்கட I என்பவன் கி. பி. 1542 இல் பதவியேற்று மிகக் குறுகிய காலம் ஆட்சிபுரிந்தவனாக அறியப்படுகின்றான். வேங்கட II என்பவனின் ஆட்சி கி. பி. 1586 இல் ஆரம்பித்து கி. பி. 1614 வரை நீடித்திருந்தது என அறியலாம்; வேங்கட III கி. பி. 1630 இல் ஆட்சிபெற்று 1641 வரை ஆட்சி புரிந்தான்.[90] விஜய நகர மன்னர்களது சாசனங்களிலும், மேற்குறிப்பிட்ட 'வேங்கடபதி' என்ற குறிப்பு இடம்பெறுகின்ற சாசனங்களைக் கவனிக்கையில், இவை பெரும்பாலும் மேலே கவனித்த வேங்கட எனப் பெயர்கொண்ட மூன்று அரசர்களின் காலத்துக்குரியனவாகவே காணப்படுகின்றன. இவற்றை அடிப்படையாகக்கொண்டு நோக்குகையில், சாசனங்களில் கூறப்பட்டுள்ள 'வேங்கடபதி மகாராயர்' என்பது வேங்கட எனப் பெயர் கொண்ட விஜயநகர மன்னர் ஒருவரைக் காலத்துக்குக் காலம் குறித்ததெனக் கூறலாம்.

மேலே குறிப்பிடப்பட்ட செய்தி ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருந்தால், நாம் இங்கு ஒரு பிரச்சினையை எதிர்நோக்கவேண்டியவர்களாயுள்ளோம். அப்பிரச்சினை இங்கு கவனிக்கத்தக்க தொன்றாகும். நாம் முன்னர் இச் செப்பேட்டின் காலத்தைப் பற்றிக்

கவனித்தபோது அதன் காலம் சகாப்தம் 1644 (இது கி. பி. 1722க்குச் சமமான தாகும்) எனக் குறிப்பிடப்பட்டது சரியாகவுள்ளது எனக் கூறினேம். இக்காலப்பகுதி யளவில், அதாவது பதினெட்டாம் நூற்ருண்டின் முற்பகுதியளவில் வேங்கட எனப் பெயர்கொண்ட விஜயநகர அரசன் ஆட்சிசெய்தமைக்குச் சான்றில்லை. அவ்வாறெனில் நமது சாசனத்திலுள்ள மெய்க்கீர்த்திப் பகுதியில் வேங்கடபதிதேவமகாராயர் ஒருவர் எப்படிக் குறிப்பிடப்பட்டிருக்கலாம் என்ற கேள்விக்கு இங்கு இடமுண்டு. இந்த இடத்தில் இவ்வினவைப் பொறுத்து நாம் கொடுக்கக்கூடிய விளக்கம்: 16 ஆம் நூற்ருண்டுக்கும் 17 ஆம் நூற்ருண்டின் முற்பகுதிக்கும் சேர்ந்த சாசனங்களில் வழங்கப்பட்டது போல, குறிப்பிட்ட வேங்கடபதி என்ற சொல்லு, நமது சாசனத்தில் விஜய நகர மன்னர் ஒருவரின் பெயராக வழங்கப்படவில்லை எனத் தெரிகின்றது. முதலில் விஜய நகர மன்னர் ஒருவரின் பெயரைக் குறித்த இச் சொல் பிற்பட்ட காலத்தில் ஒரு விருதுப் பெயர் போன்று வழங்கப்பட்டிருக்கவேண்டும் எனலாம். மற்றும் நமது செப் பேட்டிலுள்ள மெய்க்கீர்த்திப் பகுதி, விஜய நகர சாசனங்களிலுள்ள மெய்க்கீர்த்திப் பகுதியைப் பெரிதும் ஒத்ததாக இருப்பதனுல், இவ்வாறுன சாசனவியல் செல்வாக்கினுல், முற்பட்ட விஜயநகர காலத்துக்குச் சேர்ந்த சாசனங்களிலுள்ளதை ஒத்த ஒரு மெய்க்கீர்த்தியினை அர்த்தமற்ற முறையில் நமது செப்பேட்டைப் பொறிப்பித்தோர் பின்பற்றுகையில் 'வேங்கடபதிதேவ மகாராயர்' பற்றிய குறிப்பு இடம்பெற்றிருக்கலாம். இந்த இடத்தில் கி. பி. 1750 ஆம் ஆண்டுக்குச் சேர்ந்த ஒரு சாசனம் தருகின்ற தகவல் கவனிக்கற்பாலது. இச் சாசனம், நமது செப்பேட்டிலுள்ளதுபோன்ற மெய்க்கீர்த்திப் பகுதியுடன் ஆரம்பித்து தொடர்ந்து செல்கின்றது.

> "......ஒரு கொடைக்கீள் உலகமெல்லாம் ஆண்டருளிய ஸ்ரீ பிறவுடதெவ மகாராயர் வீற வெங்கிட தெவ மகாராயர் மல்லிகாற்சுனராயர் கிற்ஷ்ண தெவ மகாராயர் விறுபாட்சிராயர் யிம்மடி ராயர் வீரநரசிங் - கதெவ மகாராயர் ஸ்ரீ ரங்கராயர் யிவர்கள் காரியகர்த்தரான விசுவனுத ஞயக்கர வற்கள் முத்து கிற்ஷ்ணப்ப ஞயக்கரவர்கள் பெரிய வீரப்ப ஞயக்கரவற்கள் குமார கிற்ஷ்ணப்ப ஞயக் கரவற்கள் சொக்கனுத ஞயக்கரவற்கள் ரங்க கிற்ஷணமுத்து வீரப்பஞயக்கரவர்கள் ராச ஸ்ரீ விஜய ரங்க சொக்கனுத கறய்யரவர்கள் பிறதிவீ சாம்பிஞயக்ருச்சியம் பண்ணும் ஞளையில......"[91]

மேலே குறிப்பிடப்பட்ட சாசனச் செய்தியிலிருந்து அறிய முடிவது - விஜய நகர, நாயக்கவம்சங்கள் அழிவுற்றிருந்த காலத்தில் பொறிக்கப்பட்ட சாசனங்களின் மெய்க்கீர்த்திப் பகுதியில் அவ்வம்சங்களைச் சேர்ந்த அரசர்கள் குறிக்கப்பட்டிருக்கிறுர்கள் என்பதாகும். மன்னர்கள் ஆட்சி செய்யாத காலத்திலும், அவர்களாட்சிக்குப் பிற்பட்ட காலங்களில் பொறிக்கப்பட்ட சாசனங்களில் அவர்களது பெயர்கள் குறிப்பிடப்பட்டன என்பதற்கு மேற் கூறிய சாசனம் ஒரு உதாரணமாகும். இதேபோன்று தான், விஜயநகர மன்னர் ஆட்சிசெய்யாத காலத்தில், அதாவது அதற்குப் பெருமளவு பிற்பட்ட காலத்தைச் சேர்ந்த நமது சாசனத்தில், வேங்கடபதி தேவர் மகாராயர் என்ற விஜயநகர மன்னர், மெய்க்கீர்த்திப் பகுதியில் இடம்பெற்றுள்ளார் என விளக்க வேண்டியுள்ளது.

## ஓம்படைக்கிளவி

பொதுவாக அனேகமாக எல்லாக் கல்வெட்டுக்களின் இறுதிப் பகுதியிலும் ஓம்படைக் கிளவி கூறப்பட்டிருத்தலைக் காணலாம். இவ்வாறு ஓம்படைக்கிளவி தானத்தின் இறுதிப் பகுதியில் குறிப்பிடப்படுவதற்குக் காரணம், குறிப்பிட்ட தானத்

தைப் பாதுகாத்துப் பரிபாலிக்கச் செய்வதற்காகும். சுருங்கக் கூறுமிடத்து இந்த ஓம்படை வாசகம், ஒரு தானத்துக்கு அரணாக அமைவதொன்றாகும். இவ்வாறு இவ் வாசகம் அரணாக அமைவதால், அது தானத்தின் பாதுகாப்பை வலியுறுத்தக் கூடிய தாக இருக்கவேண்டும். ஓம்படை வாசகம் என்பது, கொடுக்கப்பட்ட ஒரு தானத்துக் குத் தொடர்ந்து நன்மைசெய்து அதனைப் பாதுகாக்கவேண்டும் என்றும் அவ்வாறு பாதுகாத்தால் எத்தகைய நன்மையுண்டாகும், பாதுகாக்கத் தவறினால் எத்தகைய தீமை விளையும் என்றும் எடுத்துக் கூறுவதாகும். கொடுக்கப்பட்ட தானத்தின் பாது காப்புக் கருதியே ஓம்படை வாசகம் அமைக்கப்படுகின்ற காரணத்தினால், பெரும் பாலும், சமூகத்தில் மிகப்பெரிய பாவ, புண்ணியங்களாகக் கருதப்படுபவற்றையே ஓம்படைக் கிழவியாக அமைத்துக் கூறுதல் வழக்கம். பல சாசனங்களில் தானத்தைப் பாதுகாக்கத் தவறினால் ஏற்படும் பாவம் மாத்திரமே எடுத்துக் கூறப்பட்டிருக்கின் றது.

முற்பட்ட கல்வெட்டுக்களில் அடிக்கடி கூறப்பட்டிருக்கும் ஓம்படை வாசகம்- தர்மத்துக்குத் தீங்கு விளைவிப்பவர்கள் ''கங்கைக் கரையிலே காராம் பசுவையும் பிரா மணனையும் கொன்ற பாவத்துக்குள்ளாவர்'' என்பதாகும். இந்து மதப்படி பசுவையும் பிராமணரையும் கொல்லுதல் மிகப் பெரிய பாவமாதலால், தானத்தின் பாதுகாப்பாக இப்பாவம் எடுத்துக்கூறப்பட்டது.[92] சில வேளைகளிலே, சமூகத்திலே ஒழுங்கற்ற நட வடிக்கைகளால் தேடும் மிகப்பெரிய பாவத்தையும் எடுத்துக்கூறுவர். விஜயநகர காலத்துக்குச் சேர்ந்த கல்வெட்டொன்றில்,

> ''ஆனபடியினாலே அந்தபூமியை அவன் இறகிச்சால் தன்னுடனே பிறந்த தங்கச்சியை வச்சுக் கொண்ட தோஷம் வருமென்று தற்ம்மசாத்திர சொலகத்திலெ சொல்லுகுரது''[93]

இன்னோர் முற்பட்ட கால இலங்கைச் சாசனமொன்றில் ஓம்படை வாசக மாகப் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

> ''இதுக்கு ஆசைப்படுவான் தன்தா(ய்)க்கு ஆசைப்படுவா(ந்)''[94]

மேலே நாம் கவனித்தவாறு வெவ்வேறு பாவங்கள், இடத்துக்கிடம் காலத் துக்குக் காலம் கூறப்பட்டிருத்தலைக் காணலாம். நாம் இப்போது ஆராய்கின்ற சாச னத்தில், ஓம்படைக் கிளவி, புண்ணிய தலம் சம்பந்தப்பட்டதொன்றாகும்; அதாவது சிதம்பரத்தைத் தொடர்புபடுத்திக் கூறப்பட்டுள்ளது.

> ''இந்தத் தர்மத்துக்கு யாதாமொருவர் சகாயம் பண்ணினார்கள் அவர் கள் பூலோக கயிலாசமாகிய சிதம்பரத்திலெ அர்த சாம வேளையிலெ சபாபதி தரிசனம் பண்ணின புண்ணியம் பெறக் கடவராகவும் இந்தத் தர்மத்துக்கு அகிதம் பண்ணினவர்கள் சிதம்பரத் தலத்திலெ தீயிட்ட வர்கள் போகிற தொஷத்திலே போகக்கடவொராகவும்.'' —

தலங்களுக்கு நன்மை புரிவது பெரும்புண்ணியமாகவும் தீங்கு செய்வது பெரும் பாவமாகவும் எடுத்துக்கூறப்பட்டபோது மிகப் பிரசித்திபெற்ற தலங்களையே தொடர்பு படுத்திக்கூறுவது வழக்கம். விஜயநகர காலத்துக்குச் சேர்ந்த சில சாசனங்களில்

ஓம்படைக் கிளவி சம்பந்தமாக வேறு தலங்கள் தொடர்புபடுத்திக் கூறப்பட்டிருத்த லைக் காணலாம். பதினெட்டாம் நூற்றாண்டின் இரண்டாம் காற் பகுதியைச் சேர்ந்த (திருச்சிராப்பள்ளியிலுள்ள முசிறிதாலுக்காவிலுள்ளது) சாசனமொன்றில் :

> ''இந்த தர்மத்துக்கு யாமொருவரும் மனோவாக்காயங்களினால் சகாயம் பண்ணுகிறார்களோ அவர்கள் காசி, சிதம்பரம், திருவாலூர் அருணா சலம், காள அவதி (காளஹஸ்தி) காஞ்சி, களிக்கொன்கணம் பங் [...]லி, கும்பகோணம், ராமெஸ்வரம் முதலிய சிவஸ்தலங்களில் அநெக கொடி சிவலிங்கப் பிறதிஷ்டை பண்ணின பலனை அடைந்து சுகமாக நீடூழி வாழ்ந்துயிருப்பார்கள்...'' எனக் கூறப்பட்டிருக்கின்றது.[95]

இலங்கையிலுள்ள சம்பாந்துறைச் செப்பேடொன்றிலும் (16 அல்லது 17 ஆம் நூ; ஆ;) ஓம்படைக் கிளவி சில தலங்களைக் குறித்துக் கூறப்பட்டிருப்பதனைக் காண லாம். அதாவது :

> ''இதில் யாதாமொருத்
> தர் தடைபண்ணினால்
> காசியிலெ ராமெசுவரத்
> திலெ கதிர்காமத்தில்ம
> ணிக்க கெங்கையிலெ
> தீயிட்ட பாவத்தில் பொ
> வாராகவும்.''[96]

மேலே குறிப்பிடப்பட்ட ஓம்படைக்கிளவி பற்றிக் கவனித்த கலாநிதி இந்திர பாலா அவர்கள் குறிப்பிட்டுள்ளதாவது:- ''பொதுவாக இலங்கைத் தமிழ் சாசனங் களிலும் இப்படியான ஓம்படைக் கிளவிகளிலே இந்தியப் புண்ணியத் தலங்களிலே செய்யப்படும் பாவமே குறிப்பிடப்படும்; ஆனால் இச்சாசனத்திலே கதிர்காமத்து மாணிக்ககங்கை குறிப்பிடப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. ஏனெனில் பதினேழாம் நூற்றாண்டளவிலே கதிர்காமமும் ஒரு குறிப்பிடத்தக்க புண்ணியத்தலமாகக் கருதப் பட்டதை இது காட்டுகிறது.''[97]

மேலே நாம் கவனித்தவாறு, சாசனங்களின் பிற்பகுதியில் ஓம்படைக் கிளவி கூறும்போது புண்ணியத் தலங்களைத் தொடர்புபடுத்துவதனைக் கவனிக்கையில், பிரசித்தி பெற்ற தலங்களுக்குச் சென்று பூசித்தல் பெரும் புண்ணியம் செய்வதற்கொப்பாகும் எனக் கருதப்பட்டது என அறியலாம். அதே நேரத்தில் இத்தகைய தலங்களுக்குத் தீங்கு விளைவித்தல் பெரும் பாவமெனக் கருதப்பட்டது என்பதனையும் காணலாம். பெரும்பாலும், ஓம்படைக் கிளவியில் புண்ணிய தலம் தொடர்புபடுத்தப்படும்போது அங்கு பல தலங்கள் குறிப்பிடப்பட்டிருக்கும். பிற்பட்ட தென்னிந்திய சாசனங்களில் இதனைக் காணலாம். ஆனால் அவ்வாறன்றி நமது சாசனத்தில் சிதம்பர தலத்தைப் பற்றிய குறிப்பு மட்டுமே காணப்படுகின்றது. இவ்வாறு சிதம்பரத்தை மட்டும் குறிப் பிட்டமைக்குக் காரணம், இச்சாசனம் சிதம்பதத்துக்கு அளிக்கப்பட்ட தானமொன் றைப் பதிவுசெய்வதால், சிதம்பர தலத்தின் மகிமையை உயர்த்திக் கூறுவதற்காக இருக்கலாம்.

## சுலோகங்களும் செய்யுட்களும்

முன்னர் நமது செப்பேட்டின் எழுத்துப் பற்றிக் கவனித்தபோது, இதில் முப்பத்தொன்பது வரி தொடக்கம் நாற்பத்து மூன்ருவது வரிவரையுள்ள பகுதி பெரும்பாலும் முற்ருகக் கிரந்த எழுத்துக்களினுலேயே எழுதப்பட்டுள்ளது எனக் கூறினேம். இந்தக் குறிப்பிட்ட பகுதி (வரி 39 - 43) சமஸ்கிருத மொழியிலான இரு சுலோகங்களைக் கொண்டதாக விளங்குகின்றது.[98] இவ்வாருகச் சாசனங்களில் சுலோகங்கள் இடம் பெறுவதனை விஜயநகர சாசனங்களில் பெருமளவுக்குக் காணலாம். நமது செப்பேட்டில் இடம்பெற்றுள்ள அதே சுலோகங்கள் விஜயநகர சாசனங்களிலும் உண்டு. அவற்றில் முதல் சுலோகம் அடிக்கடி இடம்பெறுவதனைக் கண்டுகொள்ளலாம்.[99] விஜயநகர காலத்துச் சாசனங்களிலுள்ள சுலோகங்களைப் பற்றிக் கவனித்த தி. நா. சுப்பிரமணியம் அவர்கள் கூறியது போன்று பெரும்பாலும் இந்தச் சுலோகங்கள் தானம் அளிப்பவர்களுக்குக் கிட்டும் புண்ணியம், அந்தத் தானங்களைக் கெடுப்பவர்கள் அடையும் பாவம், தானம் அளித்ததைப் பாதுகாக்கவேண்டிய முறை ஆகிய விஷயங்களைத் தெரிவிப்பனவாகவுள்ளன.[100]

நமது செப்பேட்டில் நாற்பத்து மூன்ருவது வரி தொடக்கம் ஐம்பதாவது வரி வரையுள்ள பகுதி இரு செய்யுட்களைக் கொண்டதாக விளங்குகின்றது. பரராச மகா ராசாவின் பணிகூறும் செப்பேட்டில் ஒரு செய்யுள் மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளது. அச் செய்யுளும் நாம் இப்போது எடுத்துக்கொண்ட சாசனத்திலுள்ள முதல் செய்யுளும் ஒன்ருகும். இச் சாசனத்தில் வரும் செய்யுட்கள் :

(1) அரிய நல்லறமுற்றினேன் றன்னினு மதனைப்
புரிதி யென்பவன் காப்பவன் புகலிருவர்க்கும்
பெருகும் பயன் பதின்மடங்கென்றனர் பெருநூற்
குரிய மாந்தர் கடிவினைவழிக்கு மீதொக்கும்.

(2) மனை மடத்திடை யெல்லையின் மன்றுகளொன்றுக்
கனைய செய்தவர் சிவபதத்தா யிரங்கற்ப
முனைவர் போற்றிட வீற்றினிதிருப்பரிம் முறையே
யினைய நற்பயனேற்குக விசைக்கு மாறென்னே.[101]

## தென்னிந்திய சாசனச் செல்வாக்கு

இச் செப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு தகவல்களையும் கவனித்த போது தென்னிந்திய, குறிப்பாக விஜயநகர அரசின், செல்வாக்கு இலங்கையில் ஏற்பட்டிருந்தமையைக் காணமுடிந்தது. இவற்றைப் போன்று இந்த சாசன அமைப்பு முறையிலும் விஜயநகரச் சாசனங்களின் செல்வாக்கை நாம் கண்டுகொள்ளமுடிகின்றது.

இச்சாசனம் விஜயநகர காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுக்களில் காணப்படும் மெய்க்கீர்த்திப் பகுதியுடன் அதாவது ''சிறிமன் மகா மண்டலேசவரன் ஹரிஹராய விபாடன் பாஷைக்குத் தப்பு வராயர் கண்டன் மூவராயர் கண்டன் கண்டனுடு

கொண்டு கொண்டநாடு குடாதான் பூர்வ தக்ஷிண பச்சிமோத்தர ஸமுத்திராதிபதி கஜவேட்டை கண்டருளிய'' என்ற மெய்க்கீர்த்திப் பகுதியுடன் ஆரம்பிக்கின்றது. அதனைத் தொடர்ந்து தானம்பற்றிய செய்தி குறிப்பிடப்பட்டபின்னர் முன்னர் கவனித்ததுபோன்று இரு சுலோகங்கள் சமஸ்கிருத மொழியில்கூறப்பட்டிருத்தலைக் காணலாம். இச்சுலோகங்கள் விஜயநகர காலச் சாசனங்களில் அடிக்கடி இடம்பெற்ற சுலோகங்கள் மாத்திரமின்றி, சாசன அமைப்பு முறையைப் பொறுத்த வரையிலும் இந்தச் சுலோகங்கள் விஜயநகர சாசனச் செல்வாக்கை எடுத்துக்காட்டுகின்றன. அதாவது தானத்தைப்பற்றிய குறிப்புக்கு அடுத்ததாகவே விஜயநகரகாலச் சாசனங்களிலும்நமது சாசனத்திலும் இச் சுலோகங்கள் அமைந்திருப்பதனைக் காணலாம்.

மேலும் இச் சாசனத்தின் அதி பிற்பகுதியில் குறிக்கப்பட்டிருப்பதுவும் கவனிக்கத்தக்கது: அங்கே ''இந்தச் சாசனமெழுதின நன்மைக்குக் கங்காணித் தாண்டவராயன் கை எழுத்து இப்படிக்கு நிச்சயச் சேனாதிராய முதலியார்'' என எழுதப்பட்டுள்ளது; இதே முறையிலேயே விஜயநகரச் சாசனங்கள் பலவும் எழுதப்பட்டுள்ளன. 17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிக்குச் சேர்ந்த ஒரு சாசனத்தில் 'யிந்த சிலா சாசனம் எழுதின நன்மைக்குக் கோவில் கணக்கு ரெங்கனாராயணன் பிரியன் எழுத்து' என அச் சாசனத்தின் பிற்பகுதியில் கூறப்பட்டுள்ளது.[101] நமது சாசனம் பலவிதங்களிலும் மேற்கூறிய பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சேர்ந்த சாசனத்தைப் பெரிதும் ஒத்ததாய்க் காணப்படுகின்றது. இவற்றைக் கவனிக்கும்போது, கயிலவன்னியனார் தருமம்பற்றிய நமது சாசனம், பிற்பட்ட தென்னிந்திய சாசனமொன்றைத் தழுவியே அதாவது அதன் அமைப்பு முறையைத் தழுவியே எழுதப்பட்டிருக்கிறது எனக்கூற இடமுண்டு.

## திருத்திய பாடப் பிரதி

### கயில வன்னியனார் மடதர்ம சாதனப்பட்டையம். சிதம்பரம்

ஸ்வஸ்தி ஸ்ரீ மன் மஹா மண்டலேசுவரன் ஹரிஹராய விபாடன் பாஷைக்குத் தப்புவராயர் கண்டன் மூவராயர் கண்டன் கண்டநாடுகொண்டு கொண்டநாடு குடாதான்பூர்வ தக்ஷிண பச்சிமோத்தர சதுஸ் சமுத்திராதிபதி கஜவேட்டை கண்டருளியபதி வேங்கடபதி தேவ மஹாராயர் பிருதுவி ராஜ்யம் பண்ணியருளாநின்ற சகாப்தம் 1644 இதன்மேற் செல்லாநின்ற சுபகிருது ஸு சித்திரை மீ 22ஆம் திகதியும் பூர்வ பக்ஷத்தில் பறுவமும் சுவாதி நக்ஷத்திரமும் குருவாரமும் கூடின சுபதினத்திலே சிதம்பரம் பரராசசேகர மகாராசாவின் கட்டளை நடத்தும் சூரிய மூர்த்தித் தம்பிரானவர்களுக்குப் பனங்காமப்பத்து வன்னிபம் நிச்சயச் சேனாதிராய முதலியாரவர்களும் குலசேகர முதலியாரவர்களும் கரிக்கட்டு மூலைப்பத்துத் தென்னமரவடிப்பத்து வன்னிபம் புவிநல்ல மாப்பாண வன்னியனாரவர்களும் புணணிப்பிள்ளை வன்னியனாரவர்களும் மேல்பத்து வன்னிபம் ரணசூரராணதீரராக வன்னியராய முதலியாரவர்களும் கந்தயினா வன்னியனாரவர்களும் மேல்பத்து முள்ளியவளை வன்னிபம் இலெங்கைநாராயண முதலியாரவர்களும் மயிலாத்தை உடையாரவர்களும் பச்சிலைப்பள்ளி இறைசுவதோர் இலங்கைநாராயண முதலியாரவர்களும் நீலயினா வன்னியனாரவர்களும் மூத்தர் வன்னியனாரவர்களும் இவர்களும் இவர்களைச் சேர்ந்த ஊரில் குடியானவர்களும் தங்கள் கயிலப்பிள்ளை வன்னியனாரவர்

கள் மடதருமத்துக்குத் தர்மசாதனப் பட்டையங் குடுத்தபடி கமத்துக்கு மூன்று மரக்கால் நெல்லு மடதருமத்துக்குச் சந்திராதித்தியவரைக்கும் புத்திர பவுத்திர பாரம்பரியமுங் குடுத்துவரக் கடவோமாகவும்.

இப்படிச் சம்மதித்துச் சூரியமூர்த்தித் தம்பிரானவர்களுக்கு நாங்களெல்லோருந் தரும சாதனப் பட்டையங் கொடுத்தோம். தாங்களென்றென்றுந் தருமத்தைப் பரிபாலனம் பண்ணி நடப்பித்துக்கொள்ளக் கடவராகவும். இந்தத் தருமத்துக்கு யாதாமொருவர் சகாயம்பண்ணினார்கள் அவர்கள் பூலோக கயிலாசமாகிய சிதம்பரத்திலே அர்த்த சாமவேளையிலே சபாபதி தரிசனம் பண்ணின புண்ணியம் பெறக் கடவராகவும். இந்தத் தருமத்துக்கு அகிதம் பண்ணியவர்கள் சிதம்பர தலத்திலே தீயிட்டவர்கள் போகிற தோஷத்திலே போகக் கடவோராகவும்:

𑌦𑌾𑌨𑌪𑌾𑌲𑌨𑌯𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇
𑌦𑌾𑌨𑌾𑌚𑍍𑌛𑍍𑌰𑍇𑌯𑍋𑌽𑌨𑍁𑌪𑌾𑌲𑌨𑌮𑍍 ।
𑌦𑌾𑌨𑌾𑌤𑍍𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌮𑌵𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿
𑌪𑌾𑌲𑌨𑌾𑌦 𑌅𑌚𑍍𑌯𑍁𑌤𑌂 𑌪𑌦𑌮𑍍 ॥

𑌸𑍍𑌵𑌦𑌤𑍍𑌤𑌾𑌦𑍍𑌵𑌿𑌗𑍁𑌣𑌂 𑌪𑍁𑌣𑍍𑌯𑌂
𑌪𑌰𑌦𑌤𑍍𑌤𑌾𑌨𑍁𑌪𑌾𑌲𑌨𑌮𑍍 ।
𑌪𑌰𑌦𑌤𑍍𑌤𑌾𑌪𑌹𑌾𑌰𑍇𑌣
𑌸𑍍𑌵𑌦𑌤𑍍𑌤𑌂 𑌨𑌿𑌷𑍍𑌫𑌲𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥

அரிய நல்லறமுற்றினோன் றன்னினு மதனைப்
புரிதி யென்பவன் காப்பவன் புகலிருவர்க்கும்
பெருகுமப்பயன் பதின்மடங்கென்றனர் பெருநூற்
குரிய மாந்தர் கடிவினைவழிக்கு மீதொக்கும்.

மனை மடத்திடை யெல்லையின் மன்றுகளொன்றுக்
கனைய செய்தவர் சிவபதத்தாயிரங் கற்ப
முனைவர் போற்றிட வீற்றினிதிருப்பரிம் முறையே
யினைய நற்பயனேற்றுக விசைக்கு மாறென்னே.

ஸுபமஸ்து. இப்படிச் சிதம்பர புராணத்திற் சிவ புண்ணிய மகிமை யுரைத்தலின் இந்தச் சாதன மெழுதின நன்மைக்குக் கண்காணித் தாண்டவராயன்கை எழுத்து. இப்படிக்கு நிச்சயச் சேனாதிராய முதலியார்.

செப்பேட்டிலுள்ளபடி: பாடப்பிரதி *

1. ---ஹ ?-
2. கயி லை வளளி
3. யுரெ மடதரம
4. சாதளப பட
5. டையம உ

சிதமபரம

1. ஸ்வஸ்தி ஸ்ரீ சி ? ? ஹாச மணடலெசுரன ஹரி)
ஹ ராயவிபாடன பாஷை(மு)க
2. குததபபுவராயா கணடன மூவராயா கணடன கணடலுடு கொணடு
3. கொணடலுடு குடாதாள பூறுவ தக்ஷிண உ(ஷ)ச
த்(ர)உதாஸ்டு
4. ராயிவிதிஷ ஜவெடடை/கண்டருளியபதி வெஙகடபதிதெவ
5. யா(மு)டமீவீ ராஜ்யம பணணியருளாநினற ( ஹாரா
ஹகா ஷ சதசிராதயது ?தன
6. மெல்செல்லாநினற சுபகிறுது ஹூ சிததிரை மீ உயஉ வயும
பூறுவப க்ஷ
7. ததிலப பறுவமும சுவாதி நக்ஷததிரமும குருவாரமும கூடி -
8. ன சுபதினததிலெ சிதமபரம பரராச செகரமகாராசாவின
9. கடட ளை நடததும சூரிய மூறதித தமபிரான ?வாகளுககுப ப-
10. ளைவகாம பதது வளளிபம தீசசயச செயளுதிராய
11. முதலியாரவாகளும குலசெகர முதலியாரவாகளும
12. கரிககடடை மு லைபபதது தென ?மரவடிப பதது
13. வளளிபம புவிநலலமாபபாண வளளியுரெ வரக
14. ளும புணணிப பிள ளை வளளியுரெவாகளும மெலப -
15. தது வளளிபம ரகூரரண தீரராக வளளியராய-
16. முதலியாரவாகளும கந்தயிலு வளளியுரெவாக
17. ளும மெலபதது முளவியவ ளை வளளிபம இலெஙகைளு -
18. ராயண முதலியாரவாகளும மயிலாததை உ -
19. டையாரவாகளும பசசி லைப பளளி இறைசுவ -

20. தொா இலஙகைகுராயண முதலியாரவா -
21. களும நீலயிஙு வனியனுரவாகளும மு -
22. ததா வனியனுரவாகளும இவாகளும இவ -
23. ரகளைச சொநத ஊரிலக குடியானவா -
24. களும தஙகள கயிலைப பிளளை வனியனுர-
25. வாகள மடதறமததுககுத தறமசாதனப -
26. படடையங குடுததபடி கமததுககு மூனறு மர -
27. க கால நெலலு மடதறமததுககு சநதிராதிததியவ -
28. ரைககும புததிர பவுததிர பாரமபரியமும கொடுததுவ -
29. ரக கடவொமாகவும இபபடிச சமமதிததுச சூரியமுறதித
30. தமபிரானவாகளுககு நாஙகளெலலாருந தறமசாத-
31. னப படடையங கொடுததொந தாஙகளெனறெனறு -
32. ந தறமததைப பரிபாலனம பணணி நடபபிததுக -
33. கொளளக கடவராகவும இநதத தறமததுககு யாதாமொ-
34. ருவா சகாயம பணணுனாகள அவாகள பூலொக கயிலா-
35. ச மாகிய சிதமபரததிலெ அறத சாமவெளையிலெ சபா -
36. பதி தெரிசனம பணணின புணணியம பெறககடவராகவும
37. இநதத தறமததுககு அகிதம பணணினவாகள சிதமபரத -
38. தலததிலெ தீயிடடவாகள பொகிற தொஉஷததிலெ பொகக-
39. கடவொராகவும [illegible]
40. [illegible]
41. [illegible]
42. [illegible]
43. [illegible] | அரியநலலற முறறிஞௌறனினு -
44. மதளைப புரிதியெனபவன காபபவன புகலிருவாககு -
45. ம பெருகுமபயன பதின மடஙகெனறனா பெருநூ-
46. றகுரிய மாநதா கடி வினை வழிககு மீதொககும உ ம -
47. னை மடததிடை யெலலையின மனறுகளொனறுகக -
48. ளைய செயதவா சிவபததாயிரங கறப முளைவா-
49. பொறறிட வீறறிலி திருப பரிம முறையெயிளையநறபயனைற-

50. ருக விசைககு மாறெளனெ [illegible]
51. இபபடி சிதமபர புராணததிற சிவபுணணிய
52. மகிமை யுரைததலின இநதச சாதனமெழுதின
53. நனமைககுக கஙகாணித தாணடவராயன
54. கை எழுதது இபபடிககு நிசசயச செயஞுதி-
55. ராய முதலியாா.

---

* கிரந்த எழுத்துக்களைப் பெறமுடியாத காரணத்தினால் இப் பகுதியை அச்சிடமுடியவில்லை.

## அடிக்குறிப்புகள்

1. ஓதுவார் எனப் பலராலும் அழைக்கப்படும் இவர் கள்ளியங்காட்டிலுள்ள முக்குறுணிப் பிள்ளையார் கோவிலுக்கு அணித்தாகவுள்ள இல்லத்தில் வசித்து வருகிறார். தனது தந்தைக்குப் பின்னர் நல்லூர் கோவிலில் ஓதுவாராக இருந்து நற்பணி புரிந்து வருகின்றார்.

1அ. இப்பத்திரிகையின் ஆங்கிலத்தேதி:- 4-9-1932 ஆகும்.

1ஆ. இந்தப் பரராசசேகர மகாராசாவின் தானம்பற்றிய செப்பேடு பின்னர் கலாநிதி சி. பத்மநாதன் அவர்களாலும் பிரசுரிக்கப்பட்டது.

'இரு தமிழ்ச் செப்பேடுகள்,' சிந்தனை, மலர் 3, இதழ் 1, பேராதனை (ஜனவரி, *1970*), பக். 52-57.

3. இந்தப் பகுதி சமஸ்கிருத மொழியிலான இரு சுலோகங்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. இச் சுலோகங்கள் பற்றி, இப்பதிப்பின் இறுதிப்பகுதியில் 'சுலோகங்களும் செய்யுட்களும்' என்ற தலைப்பில் எடுத்துக்கூறப்பட்டுள்ளது.

3அ. **T. N. Subramaniam,** *South Indian Temple Inscriptions*, **Vol. II, (Madras, 1954),** No. 883.

4. இவ்வாறாகக் குறிப்பிட்ட மெய்க்கீர்த்திக்கு விஜயநகரச் சாசனங்களிலிருந்து பல உதாரணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

> "ஸ்ரீமன் மஹா மண்டலேசுவர அரியராய விபாடன் பாஷைக்குத் தப்புவராயர கண்டன் கண்ட நாடு கொண்டு கொண்டநாடு குடாதான் பூர்வதக்ஷிண பச்சிம உத்தர சதுச் சமுத்திராபதி ஸ்ரீ வீரப்பிரதாப ஸ்ரீ வீரகிருஷ்ண தேவமகாராயர்."

**(T. N. Subramaniam,** முன் குறிப்பிடப்பட்ட நூல் (மு. கு.), **Vol. II, p. 765)**

5 கா. இந்திரபாலா, 'ஈழநாட்டுத் தமிழ்ச் சாசனங்கள் 3-கிழக்கிலங்கைச் சாசனங்கள்', சிந்தனை, மலர் 2, இதழ் 2 - 3, (ஜூலை - ஒக்டோபர், பேராதனை 1968), பக். 149.

6. **L. D. Swamikannu Pillai,** *An Indian Ephemeris A. D. 700- A. D. 1799*, **Vol. VI - A.D. 1600 to A.D. 1799, (Madras, 1922), p. 246**

7. இங்கு கமம் என்ற சொல்லு விளைச்சலைக் குறித்து நிற்பதனைக் காணலாம். 18ம் நூற்றுண்டின் பிற்பகுதிக்குரிய ஆவணமொன்றில் இடம்பெறும் கமம் என்பதும் இதே பொருளிலேயே வழங்கப்பட்டிருப்பதனைக் காணலாம். அங்கே 'வேளாண்மை செய்விக்கப்பட்ட இடத்திலே கமம் ஒன்றுக்கு' என்ற குறிப்புக் காணப்படுகின்றது.

S. Gnanaprakasar, 'Nallamappana Vannian and the Grant of a Madaliyarship,' ***Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society (J. R. A. S. C. B.)*, Vol. XXXIII, No. 89, (1936), p. 218.**

8. ம. க. வே. பிள்ளை, சந்திர மௌலீசர் சதகம் என்னும் ஈழமண்டல சதகமும் யாழ்ப்பாணம் உரும்பிராய் ந. சபாபதிப்பிள்ளை இயற்றிய உரையும், (சென்னை, ருதிரோற்காரி ஸ்ரீ), பக். 131

9. கா. இந்திரபாலா, மு. கு. பக். 36.

10. S Arasaratnam, 'The Vanniar of North Ceylon: A Study of Feudal Power and Central Authority' *The Ceylon Journal of Historical and Social Studies*, Vol. 9, No. 2, (July - December 1966), p. 107.

11. Instructions From The Governor - General and Council of India to the Governor of Ceylon, 1656-1665,' *Memoirs and Instructions of Dutch Governors Commandeurs &c.*, Translated by Sophia Pieters, (Colombo, 1908), pp. 67-68.

11அ. S. Arasaratnam, மு. கு., பக். 108.

12. மேலே குறிப்பிடப்பட்ட நூல் (மே. கு.)பக். 108

13. கயில வன்னியனின் மரணம் கி. பி. 1678 இல் ஏற்பட்டது என்ற செய்தியைப் 'பத்தேவியா டாக் பதிவேடு' தரும் தகவலிலிருந்து பெற்றுக்கொள்ள முடிகிறது. F. H. De Vos (Compiled by), Extracts Relating to Ceylon From the Dag - Register, Batavia, A. D. 1678-80,' *J. R. A. S. C. B.* Vol. XXVI, No. 71, (1918), p. 182,

14. *Instructions From The Governor - General and Council of India to the Governor of Ceylon, 1656. 1665*, p. 89.

15. S. Arasaratnam, மு. கு., பக். 104.

16. பத்தேவியா. 'டாக் பதிவேடு' தரும் தகவல்களிலிருந்து கயிலவன்னியனுரின் மரணத்தைத் தொடர்ந்து நேரடி வாரிசுரிமையைப் பெற்றுக்கொண்டவர் கயில வன்னியனுரின் பேரன் முறையான (Grand Nephew) காசியனுர் (Caysianaer) என்பவராவர் என அறிந்துகொள்ள முடிகின்றது. இருந்தும் நாம் இங்கு கூறிக்கொள்ள முடிவது, இக் காலத்துக்குரிய ஒல்லாந்தக் குறிப்புகளில் மேற்கூறிய காசியனுர் பற்றிய குறிப்புகள் மிக அருமையாகவே கிடைக்கின்றன. அதே நேரத்தில் பனங்காமப் பகுதிக்கு அதிகாரமுடையவன் என நல்லமாப்பாண வன்னியனுரே அடிக்கடி இடம் பெறுகின்றார். ஒல்லாந்தக் குறிப்புகளின் உதவி கொண்டு நாம் கூறக்கூடியது, கயில வன்னியனுரின் இறப்பைத் தொடர்ந்து காசியனுர் நேரடி வாரிசுப் பதவியைப் பெற்றிருந்தாலும் உண்மையாக நடைமுறையில் அதிகாரத்தை அனுபவித்தவர் நல்லமாப்பாண வன்னியனுரே என்பதாகும். நமது மேற்படி விளக்கத்துக்கு ஒரு சிறந்த உதாரணத்தையும் நாம் இங்கு காட்ட முடியும். 1675 க்கும் 1679 க்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்த ஒல்லாந்த அறிக்கையொன்று, வன்னியர் ஒல்லாந்தருக்குத் திறையாகக் கொடுக்கவிருந்த யானைகள் பற்றிய செய்தியினைக் குறிப்பிடுகையில் பனங்காமப் பகுதியின் சார்பில் நல்லமாப்பாணரும் காசியனுரும் $11\frac{1}{2}$ யானைகளைக் கொடுக்கவேண்டும் என்ற செய்தியைக் குறிப்பிட்டுள்ளது. (*Memoir left by Ryclof Van Goens, Jun.*, Governor of Ceylon, 1675-1679, Trd. by Spophia Pieters, p. 31) இக் குறிப்பிலிருந்து காசியனுரும் பனங்காமத்தில் அதிகாரம் பெற்றிருந்தார் என அறிந்துகொள்ள முடிந்தபோதும், காசியனுர் தனிநின்று செயற்படவில்லையெனவும் அறியலாம். நல்லமாப்பாணரே இங்கு முதலில் குறிப்பிடப்படுகின்றார். சில வேளைகளில் கயில வன்னியனுரின் இறப்பின் பின் ஆட்சியுரிமைக்கு உடையவர் என்ற கருத்தில் காசியனுர் பனங்காமப் பகுதிக்கு அதிகாரியாக இருந்தாலும ஆட்சி செய்வதற்கான வயது முதிர்ச்சியற்றவராக அவர் இருந்திருக்கலாம். இக் கருத்து ஏற்கத்தக்கதாயின், காசியனுருக்கு உதவிபுரிவதன் மூலம் நல்லமாப்பாணரே பனங்காமப் பகுதியின் அதிகாரத்தை நடைமுறையில் அனுபவித்திருக்கலாம்.

17. *Instructions From The Governor - General and Council of India to the Governor of Ceylon, 1656 - 1665, p. 68.*

18. *Memoir of Hendrick Zwaardecroon, (1697)*, Trd by Sophia Pieters, p. 7.

19. மே. கு.

20. S. Arasaratnam, மு. கு., பக். 108.

20அ. 1697 ஆம் ஆண்டுக்குரியதும் அதற்கு முற்பட்ட காலத்துக்குரியதுமான வன்னியர் பற்றிய ஒல்லாந்த அறிக்கைகளில் இந்த நல்லமாப்பாணர் என்பவர் அடிக்கடி குறிப்பிடப்படுகின்ருர். 1697 க்குப் பிற்பட்ட குறிப்பகளில் இவரது மகனுன நிச்சயச் சேனுதிராயர் பற்றிய குறிப்புகளே கிடைக்கின்றன. இவற்றைக் கொண்டு நோக்குகையில் இவர் 1697 க்குப் பின் பதவியில் இருக்கவில்லை எனக்கூற இடமுண்டு. இருந்தும் இவர் பதவியில்லாமற் போனமைக்குக் காரணம் என்ன எனத் திடமாகக் கூறத்தக்க வகையில் ஆதாரங்கள் கிடைக்கவில்லை. இவர் பலதடவை ஒல்லாந்தருக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டமையை அறிந்துகொள்ள முடிவதால், ஒரு சந்தர்ப்பத்தில் பதவியிலிருந்து நீக்கப்பட்டிருக்கலாம் என ஊகிக்க இடமுண்டு.

21. *Diary of occurrences during the tour of Gerrit De Heere*, Governor of Ceylon, from Colombo to Jaffna. (1697), (Colombo, 1914), p. 19.

22. இவனது பெயர் தொன் அந்தோனி குலசேகரன் என்பதாகும்.

23. S. Arasaratnam, மு.கு., பக். 109; *Memoir of Hendrick Becker*, 1716, (Colombo, 1914), p. 15.

24. *Memoir of Hendrick Becker* 1716, p. 16.

25. மே. கு., பக். 15.

26. மே. கு., பக். 17 - 18.

27. *Selections from the Dutch records of the Ceylon Government, No. 5, Memoir of Jan Schreuder' Governor of Ceylon, 1762*, p. 58.

28. இதற்கு எடுத்துக்காட்டாகக் குலசேகரர், கந்தயினர், மைலாத்தை ஆகியோரது பெயர்கள் ஒல்லாந்தக் குறிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தினைக்காட்ட முடிகின்றது. குலசேகரர் - கொலசேகர எனவும் கந்தயினர் என்பது கியந்தயினர் எனவும் மைலாத்தை - மைலாத்தே எனவும் குறிப்பிடப்பட்டுள்ளன.

29. *Diary of occurrences during the tour f Gerrit De Heere*, Governor of Ceylon from Colombo to Jaffna, 1697, p. 19

30. மே. கு., பக். 20 - 21.

31. இக்காலமளவில் ஒல்லாந்தர், வன்னிநாட்டை ஒரு "செய்திகளை அறிவிக்கும் இடமாகப் (Sounding board for the news of Kandy)" பயன்படுத்த விரும்பினர். அத்துடன் கண்டியின் அரசியல் விவகாரம் குறித்துச் செய்திகளைப் பெறுவதற்கு வன்னியர் கண்டியில் வைத்திருந்த தொடர்புகளையும் பயன்படுத்த விரும்பினர். (S. Arasaratnam, மு. கு., பக். 106)

32. *Memoir of Hendrick Becker*, 1716, p. 15.

33. F. H. De Vos, (Compiled by), 'Extracts Relating to Ceylon from the Dag. Register, Batavia, A. D. 1678 - 1680,' *J. R. A. S. C. B*, Vol. XXVI., No. 71 (1918), p. 182.

34. கா. இந்திரபாலா, 'செய்தியும் குறிப்பும்: யாழ்ப்பாணத்தில் சாசனங்கள்', சிந்தனை, மலர் 3, இதழ் 2, (ஜூலை 1970), பக். 159.

35. 'தொன்' என்ற சொல்லுக் கத்தோலிக்க மதப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட பொதுவான மதப்பெயராகும். தொன் என்ற சொல் தோன்றிய விதம்பற்றி நகைச்சுவையான தகவலை வூல்வ் என்பவர் கொடுத்துள்ளதனைக் காணலாம். (Wolf, John Christopher, *The Life and Adventures of John Christopher Wolf*, Translated from the German, Robinson (1785), pp. 253 - 55; C. S Navaratnam, மு. கு., பக். 225.

36. Fernaõ De Queyroz, *The Temporal and Spiritual Conquest of Ceylon*, Books 3 and 4, Translated by S. G. Perera, (Colombo, 1930), p. 659.

37. S. Arasaratnam, மு. கு., பக். 111

38. மே. கு. பக். III

39. க. அருமைநாயகம், 'இலங்கையில் ஒல்லாந்தர் பின்பற்றிய சமயக் கொள்கை,' **சிந்தனை**, மலர் 1 இதழ் *1*, (ஏப்பிறில், 1967), பக். 38.

40. மே. கு., பக். 38

41. J. E. Tennent, *Christianity in Ceylon* (London, 1850), pp. 41-42.

42. Tikiri Abeyasinghe, *Portuguese Rule in Ceylon 1594-1612*, (Colombo, 1966), p. 214.

43. S. Arasaratnam, மு. கு., பக். 111; *Memoir of Hendrick Zwaardecroon*, Commandeur of Jaffnapatnam, 1697, p. 52.

44. மே. கு. p. 52

45. S. Gnana Prakasar, மு. கு., பக். 217.

46. S. Arasaratnam, மு. கு., பக். 102.

47. Fernao De Queyroz, மு. கு., 1, பக். 51.

48. *Memoir left by Rycloff Van Goens, Jun. 1675 - 79*, (Colombo, 1910), p. 31.

49. மே. கு., பக். 32.

50. *Selections from The Dutch Records of the Ceylon Government No. 5, Memoir of Jan Schreuder*, 1762, p. 58.

51. S. Arasaratnam, மு. கு., பக். 102.

52. மே. கு. பக். 102

53. மே. கு., பக். 103.

54. மே. கு. பக். 103

55. P. E. Pieris, *The Kingdom of Jafnapatam 1645*, Second Edition, (1944), p. 10; ஆரம்பத்தில் இச் சொல்லைப் போர்த்துக்கீசச் சொல்லாகிய றெகிதோர் (Regedor) என்ற சொல்லுடன் அடையாளங்காணலாமா என்பதுபற்றிக் கொழும்புப் பல்கலைக் கழகச் சிரேஷ்டவரலாற்று விரிவுரையாளர் T. B. H. அபெசிங்ஹா அவர்களுடன் தொடர்பு கொண்டபோது, அவர், அவ்வாறு அடையாளங் காண்பது பொருத்தமாகத் தோன்றவில்லை எனக் கூறினார். இதுபற்றிப் பின்னர் கலாநிதி வா. கணபதிப்பிள்ளை அவர்களிடம் விசாரித்தபோது அவர் 'சேகரிப்பாளர்களைக்' குறிக்கும் 'றெசிபதோர்' என்ற போர்த்துக்கீசச் சொல் இருப்பதாகக் கூறினார். பின்னர் இந்த றெசிபதோர் என்ற சொல்லை தமது செப்பேட்டிலுள்ள இறைசுவதோர் என்ற சொல்லுடன் அடையாளங் காணக்கூடியதாக இருந்தது.

56. Houaiss and Avery, *The New Appleton Dictionary of the English and Portuguese Languages*, (New York, 1964), p. 452.

56அ. S. Gnana Prakasar, மு. கு., பக். 217.

57. Houaiss and Avery, மு. கு., பக். 34.

58. P. E. Pieris, மு. கு., பக். 10.

59. மே. கு., பக். 11.

60. *Instructions from the Governor - General and Council of India to the Governor of Ceylon 1656 - 1665*, p. 88.

61. *Memoir of Hendrick Zwaardecroon 1697*, (Colombo, 1911), p. 25.

62. F. X. C. நடராசா (பதிப்பாசிரியர்), **மட்டக்களப்பு மான்மியம்**, (கொழும்பு, 1962), பக். 104.

63. பு. பொ. வைத்தியலிங்க தேசிகர் (பதிப்பாசிரியர்), **ஸ்ரீ தக்ஷிணகைலாச புராணம்**, (பருத்தித்துறை, 1916); கோணேசர் கல்வெட்டு (பிற்சேர்க்கை), பக். 38.

64. K. Indrapala, 'The Origin of the Tamil Vanni Chieftaincies of Ceylon,' *The Ceylon Journal of the Humanities*, Vol. 1. No. 2, (July, 1970), p. 126.

65. F. X. C. நடராசா, மு. கு., பக். 95.

66. K. Indrapala, 'The Origin of the Tamil Vanni Chieftaincies of Ceylon, மு. கு., பக். 134.

67. *South Indian Inscriptions* (S. I. I.), தொகுதி 4, இல. 128; 5, இல. 303, 999; 6, இல. 262, 264; 7, இல. 23, 24, 25; 8, இல. 166, 172, 192, 195.

68. S. Paranavitana, 'Lankatilaka: Tamil Inscriptions', *University of Ceylon Review* (U. C.R. Vol. XVIII, Nos. 1 and 2, (Peredeniya, January 1960), p, 17.

69. T. N. Subramaniam, மு. கு., தொகுதி II, இல. 773 788.

70. S. Gnana Prakasar, மு. கு., பக். 217

71. *Memoir of Hendrick Zwaardecroon, 1667, p. 19.*

72. *Instructions from the Governor - General and Council of India to The Governor of Ceylon, 1656 - 1665*, p. 88.

73. மே. கு. p. 88

74. Burgess, James, Tamil and Sanskrit Inscriptions, *Archaeological Survey of Southern India*, Vol. 4, translated by S. M. Natesa Sastri, Madras, 1886, No. 123

75. T. V. Mahalingam, *Administration and Social Life Under Vijayanagar*, (Madras, 1940), p. 186

76. S. Gnana Prakasar, மு. கு., பக். 217

77. T. N. Subramaniam, மு. கு., தொகுதி III, பகுதி II, பக். 1411; *Tamil Lexicon*, Published Under the Authority of the University of Madras, Vol. II, (Madras, 1926), p. 684.

78. K. V. Subrahmanya Ayyar, 'The Tirumukkudal Inscription of Vira Rajendra, *Epigraphia Indica, Vol. 21*, (1931 - 32), No. 38, p. 240.

79. *S. I. I.*, Vol. XIV, (Madras, 1962), Nos. 157, 160, 194

80. மே. கு., இல. 239

81. K. Kanapathi pillai, 'Mankanai Inscription of Gajabhahu II,' *U. C. R.*, Vol. 22, No. 1, (1962,) p. 13.

82. மே. கு., பக். 14

83. A. Krishnaswami, *The Tamil Country Under Vijayanagar*, (Annamalainagar, 1964), p. 49.

84. மே. கு., பக். 63

85. T. N. Subramaniam, மு. கு., தொகுதி III, பகுதி II, பக். 1411
சோழர்காலக் கல்வெட்டொன்றில், 'ஆயம், பாடிகாவல், கண்காணி, கணக்கவரி' என்ற குறிப்புக் காணப்படுகின்றது. (*S. I. I*, Vol. I, No. 64, p. 91). இங்கு கண்காணி என்பது வேறு வரிகளுடன் சேர்த்துக் கூறப்பட்டுள்ளமையால், கண்காணி என்பதும் ஒரு வரியையே குறித்தது எனக் கூறவேண்டும்.

86. S. Gnana Prakasar, மு. கு., பக். 217.

87. C. S. Navaratnam, *Vanni and the Vanniyas*, (Jaffna, 1960), p. 32

87 அ. T. N. Subramaniam, மு. கு., தொகுதி I, இல. 30, 31, 446, 547

88. மே. கு., இல. 502.

89. மே. கு., இல. 370, 423, 441, 546.

90. K. A. Nilakantasastri, *A History of South India*, 3rd Edition, (Madras, 1966), pp. 311-12

91. T. N. Subramaniam, மு. கு., தொகுதி II, இல. 883, பக். 822

92. 18 ஆம் நூற்றுண்டுக்குரிய சாசனமொன்றில், பசுவைக்கொல்லும் பாவத்துடன் சேர்த்துக் 'குழந்தை, தாய், தந்தை என்போரைக் கொல்வதால் ஏற்படும் பாவமும் குறிப்பிடப்பட்டுள்ளது. (T. N. Subramaniam), மு. கு., தொகுதி III, பகுதி II, இல. 1196) குழந்தை, தாய், தந்தை ஆகியோரைக் கொல்வது, மிகப்பெரிய பாவமான ஒரு செயலாக - இன்றும் கருதப்படுவதாகும்.

93. T. N. Subramaniam, மு. கு., தொகுதி III, பகுதி I, பக். 1284

94. K. Kanapathipillai, 'A Pillar Inscription From Moragahawela,' *U. C. R.*, Vol. XVIII, Nos. 1 and 2, (January - April, 1960), p. 49.

95. T. N. Subramaniam, மு. கு., தொகுதி III, பகுதி, I, இல. 1196;
இதே காலப்பகுதிககுச் சேர்ந்த இன்னுேர் சாசனத்தில் தலங்களே அதாவது, 'யிந்தத் தர்மத்துக்கு வாக்கு சகாயம், சரீரசகாயம், பண்ணினவர்களுக்குக் காசி, கங்கை, ராமேஸ்வரம் புண்ணிய திர்த்தங்களிலே ஸ்நானம் பண்ணின பலனேப் பெறுவார்களாகவும்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (T. N. Subramaniam, மு. கு., தொகுதி II, இல. 883).

96. கா. இந்திரபாலா, 'கிழக்கிலங்கைச் சாசனங்கள்' **சிந்தனே**, மலர் 2, இதழ் 2 - 3, பக். 49.

97. மே. கு., பக். 48-49

98. அச்சுலோகங்களின் பொருள்· **முதலாவது சுலோகம்:-** தானம் செய்வது, அளித்த தானத்தைப் பரிபாலிப்பது, இவ்விரண்டினுள் தானத்தைக் காட்டிலும் பரிபாலனமே சிறந்தது. தானம் செய்வதால் சொர்க்கம் கிட்டுகிறது. பரிபாலனத்தாலோ வைகுந்தமே (அழிவற்ற ஸ்தானம்) கிட்டுகிறது.
**இரண்டாவது சுலோகம்:-** தான் அளிப்பதைக் காட்டிலும் பிறர் கொடுத்ததைப் பரிபாலனம் செய்வது இருமடங்கு புண்ணியத்தைக் கொடுக்கும். பிறர் அளித்ததை அபகரித்தாலோ தான் கொடுத்ததும் பலன் அற்றதாக (நிஷ்பலமாக)ப் போய்விடும். (T. N. Subramaniam, மு. கு., தொகுதி II. பிற்சேர்க்கை, பக். 1051)

99. T. N. Subramaniam, மு. கு., தொகுதி II, இல, 945, 798, 797, 781.

100. மே. கு., பக். 1057

101. மே. கு., தொகுதி II, இல. 767

# பிற்சேர்க்கை

நாம் இதுவரை ஆராய்ந்த சாசனத்தைவிட வன்னியர்கள் பற்றிய தகவல்களைத் தருகின்ற வேறு இரு கல்வெட்டுக்களையும் ஒரு ஆவணத்தையும் பெற்றுக் கொள்ளலாம்.

(1) திருகோணமலை மாவட்டத்திலுள்ள வெருகல் என்ற இடத்துக் கல்வெட்டு.

(2) அதே மாவட்டத்தில் கொட்டியாரப்பற்றிலுள்ள கங்குவேலி என்ற இடத்துக் கல்வெட்டு.

(3) 18 ஆம் நூற்றுண்டின் பிற்பகுதிக்குச் சேர்ந்த (கி. பி. 1781) ஆவணம் ஒன்று.

## (1) வெருகல் கல்வெட்டு

பாடப் பிரதி

(1) ஸ்ரீ ஸுப்ரமண்ய
(2) நம தெற்கு ம
(3) தில் கயில வன்னி
(4) யனுருபயம் திம
(5) ரசா மகன் பழை
(6) யிற் சிமயாப்பிள்ளை
(7) மெற்குப் பிறம் மை
(8) ட்டக்கழப்பூரவர் நிகொ
(9) ம்புக் கரையூரவர் வ
(10) டபுறம் செட்டியழுப
(11) யம் உ

## (2) கங்குவேலிக் கல்வெட்டு

பாடப் பிரதி

முதலாவது பக்கம்

(1) மலை (யில்) வ
(2) ன்னியனுரும்
(3) ஏழூரில் அட (ப்ப)
(4) ர்களும் கூடி தம்
(5) பிரானுர் கோணை
(6) நாதனுக்கு கங்
(7) குவெலியில் வெ
(8) (ளி) யும் புல்நடப் (பு)
(9) ம் ஆக விட்டோம்
(10) யிதுக்கு யாதொ
(11) ருவன் ஆகிலு
(12) ம் ஆகுதம் நி
(13) னைத்தவர்க
(14) ள் கெங்கை

இரண்டாவது பக்கம்

(15) கரையிலெ
(16) காராம் பசு
(17) வைக் கெ(ான்)
(18) ற பாபம் கெ(ாள்)
(19) ளக் கடவர்
(20) ஆகவும் யிப்ப
(21) டிக்கு யிரண்
(22) டு முதலிமை
(23) யும் தான(ம்)
(24) வரிப்பற்று
(25) ம்உ

மேற் கூறப்பட்ட வெருகல் கல்வெட்டும் கங்குவேலிக் கல்வெட்டும் கலாநிதி கா. இந்திரபாலா அவர்களால் பதிப்பிக்கப்பட்டுள்ளன. —

'ஈழநாட்டுத் தமிழ்ச் சாசனங்கள் – 3, கிழக்கிலங்கைச் சாசனங்கள்', சிந்தனை, மலர் 2) இதழ் 2x3, (ஜூலை - ஒக்டோபர் 1968), பக். 35 ff.

## 1781 ஆம் ஆண்டுக்குரிய ஆவணம்

(1) 1781 ஆண்டு சித்திரை மீ அ திகதி பனங்காமப்பற்று அயுதாந்தி வன்னிபந்

(2) தொஞ்சு வாங்குல செகர நல்லமாப்பாண வன்னியனர் அவர்கள் கற்பித்த படியாவது [:]

(3) பனங்காமப் பற்றுக்குச் செர்ந்த கிளக்கு மூலைக்குச் செர்ந்த விளாங்குளம்

(4) சாதி வெள்ளாழன் ஆள் வயினர்கந்த உடையான் வந்து கிழக்கு மூலைக்குத் தொளிலும்

(5) முதலியாரென்கிற பட்டப்பெருங் கிடைக்கவெணுமென்று மிகுந்த எளிதா வுடனே மன்றுடிக் கெட்

(6) ட படியால் நாமுஞ் சம்மதித்துச் சொல்லப்பட்ட கந்த உடையானுக்கு திசை விளங்க நாயக

(7) முதலியென்கிற பட்டமுங்கட்டிக் கிளக்கு மூலைப் பிரிவுக்குத் தொளிருங் கற்பித்திருக்கி[ற]

(8) படியால் கிளக்கு மூலைக்குச் செர்ந்த உடையார் கண்காணி அயுதாந்தி மொத்தக்கர்

(9) பணிக்கமார் பொதியகமக்காறர் மற்றுங் குடியானவர்கள் வாத்தர் பொக்க[ர்]

(10) கச்ச வடகாறர் இனிமெல் வரப்பட்ட குடியானவர்கள் தலையர் பட்டங் கட்டிமார் ச[கலரும்]

(11) இவனைத் தங்கள் முதலியாரென்கிறதறிந்து அடுத்த சங்கைபண்ணி முதலியா ரென்[ற]

(12) பெர் சொல்லி அழைக்கவும் [.] இன்னமுமந்த ஊருக்குள்ளெ வரப்பட்ட நீதி ஞாயங் கெட்[டு]

(13) பிளை கண்ட இடத்து அஞ்சு பொன்னுக்குள்ளெ குற்றம்பொட்டு வாங்கவும் [.] குற்றங் [கொடுக]

(14) இடமில்லாத தாள்ந்த சாதியின் மனுஷருக்கு மரத்திலெகட்டி இருபத்தஞ் [சடி]

(15) அரைக்குப் பணிய அடிப்பிக்கவும் [.] இவன் சொல்லப்பட்ட யானைத் தீவு முதலாக மற்றுஞ் சகல பண்டார பணிவிடை சகலமும்

[16] இவன் சொற் கீளமைச்சலுடனெ கெட்டு நடந்து கொள்ளவும் [.] இன்னமு மிந்தத் திசை விளங்க நாயக முதலியுடைய நயத்துக்கு வேண்டி இவ [? னுக்கு]

(17) வெள்ளாண்மைச் செய்விக்கப்பட்ட இடத்திலெ கமம் ஒன்றுக்கும் ஆள் அஞ்சு பெருக்கும் குரக்கன் புலொ ஒன்றுக்கும் அடையிறை சுவந்திர [?]

(18) உள்ளியமுங் களித்துக் கொடுத்து உத்தாரமாகவும் கற்பித்து இவனுக்கு வரப்பட்ட சுவசொபனங்களுக்கு வீட்டுக்கு வெள்ளை மெற்கட்டி கூரைமூடி

(19) செருடி இருபத்து நாலு பந்த தற்காலுக்கும் பந்தலுக்கும் வெள்ளை மெற்கட்டி இருக்கிற இடத்துக்கும் கலத்துக்கும் வெள்ளை பலகைக்கு வெள்ளை க

(20) திரை வில்லுக் குஞ்சம் ஒட்டுவிளக்கு பகற்பந்த மெலாப்பு பாவாடை கொடி வெடி நாகசுரம் தாரை மெளம் இப்படி இதிலெ குறித்த வரிசைகள் செய்[வித்துக்]

(21) கொள்ளவும்[.] கொயிற்சவை கொண்டச்சபை கலியாணச் சவைகளிலெ பொனை இடங்கழுக்கு இருக்கிற இடத்துக்கும் சாப்பிடுகிற இடத்துக்கும் வெள்ளை[.] ஆ [டி[

(22) காத்திகை வருஷப்பிறப்பு தைப்பொங்கலுக்கு வண்ணான் வந்து வெள்ளை கட்டவும் [.] பறையன் வந்து மெளஞ் செவிகவும் [.] கொல்லன் தச்சன் அம்பட்[டன்[

(23) வண்ணான் பறையன் என்று சொல்லப்பட்ட அஞ்சு குடிமையும் அழைத்த நெரமெ அவரவர் தொழிலுடனெ பொய் அடுத்த

(24) வரிசைகள் செய்து உள்ள சுவந்திரம் பெற்றுக் கொள்ளவும் [.] கற்பித்த கட்டளைப் படிக்கு எழுதினது[:] பரநிருப சிங்க முதலி [.]

மேற் கூறிய சாசனம் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களால் 1936 ஆம் ஆண்டில் பதிப்பிக்கப்பட்டது.

Rev. Father S. Gnana Prakasar, 'Nallamāppāṇa Vanniyan and the Grant of a Mudaliyarship', *Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society* (J.R.A S.C.B.), Vol. XXXIII, No. 89, (1936), pp. 217 - 219.

# இந் நூலாக்கத்திற்கு உதவியவை

## தமிழ் வெளியீடுகள்


1. அருமைநாயகம், க. — 'இலங்கையில் ஒல்லாந்தர் பின்பற்றிய சமயக் கொள்கை', சிந்தனை, பேராதனை கலைக் கல்விக் கழக வெளியீடு, மலர் 1, இதழ் 1, (ஏப்றில், 1967) பக். 33-39.

2. இந்திரபாலா, கா. — 'ஈழநாட்டுத் தமிழ்ச் சாசனங்கள்-3, கிழக்கிலங்கைச் சாசனங்கள்', சிந்தனை, மலர் 2, இதழ் 2+3, (ஜூலை - ஒக்டோபர், 1968), பக். 35 - 50.

   'செய்தியும் குறிப்பும்: யாழ்ப்பாணத்தில் சாசனங்கள்', சிந்தனை, மலர் 3, இதழ் 2, (ஜூலை, 1970), பக். 157 - 159.

3. நடராசா, F. X. C. — மட்டக்களப்பு மான்மியம், கொழும்பு, 1962.

4. பத்மநாதன், சி. — 'இரு தமிழ்ச் செப்பேடுகள்', சிந்தனை, மலர் 3, இதழ் 1, (ஜனவரி, 1970), பக். 52 - 57.

5. பிள்ளை, ம. க. வே. — சந்திர மௌலீசர் சதகம் என்னும் ஈழமண்டல சதகமும் யாழ்ப்பாணம் உரும்பிராய் ந. சபாபதிப்பிள்ளை இயற்றிய உரையும், சென்னை, ருதிரோற்காரி ஸு.

6. வைத்தியலிங்க தேசிகர், பு. பொ. (பதிப்பாசிரியர்), — ஸ்ரீ தக்ஷிண கைலாச புராணம், பிற்சேர்க்கை, கவிராஜரியற்றிய கோணேசர் கல்வெட்டு, பருத்தித்துறை, 1916.


## சாசனத் தொகுதிகள்


1. Burgess, James, *Tamil and Sanskrit Inscriptions.*, Archaeological Survey of Southern India, Vol. 4, tr. by S. M. Natesa Sastri, Madras 1886.
2. Archaeological Survey of India, *South Indian Inscriptions,* Vols. I, IV, V, VI, VII VIII, and XIV.

Vol. I, Edited (Ed.) by E. Hultzsch, Madras, 1890.
Vol. IV, Ed. by H. Krishna Sastri, Madras, 1923.
Vol. V, Ed. by H. Krishna Sastri, Madras, 1926.
Vol. VI. Ed. by K. V. Subrahmanya Aiyar, Madras, 1928.
Vol. VII, Ed. by K. V. Subrahmanya Aiyar, Madras, 1933.
Vol. VIII, Ed. by K. V. Subrahmanya Aiyar, Madras, 1937.
Vol. XIV. Ed. by A. S. Ramanatha Ayyar, Madras, 1962.

## ஒல்லாந்த அறிக்கைகள்

1. *Diary of Occurrences during the tour of Gerrit De Heere*, Governor of Ceylon, from Colombo to Jaffna, July, 1697, translated by Sophia Anthonisz, Colombo, 1914.

2. *Memoir of Hendrick Becker*, Governor and Director of Ceylon, for his successor, Isaac Augustyn Rumpf, 1716, translated by Sophia Anthonisz, Colombo, 1914.

3. *Memoir of Hendrick Zwaardecroon*, Commandeur of Jaffnapatam, 1697, translated by Sophia Pieters, Colombo, 1911.

4. *Memoirs and Instructions of the Dutch Governors, Commandeurs C.*, Instructions from the Governor General and Council of India to the Governor of Ceylon 1656 - 1665, translated by Sophia Pieters, Colombo, 1908.

5. *Memoir left by Rycl of Van Goens Jun.*, Governor of Ceylon, 1675 - 1679, to hi Successor Laurens Pyl, translated by Sophia Pieters, Colombo, 1910.

6. *Selections from the Dutch Records of the Ceylon Government No. 5, Memoir of Jan Schreuder*, Governor of Ceylon, translated from the Original by E. Reimers, Colombo, 1946.

## ஆங்கில வெளியீடுகள்

1. **Abeyasinghe, Tikiri.** *Portuguese Rule in Ceylon 1594-1612*, Colombo, 1966

2. **Arasaratnam, S.** 'The Vanniar of North Ceylon: A Study of Feudal Power and Central Authority 1660 - 1760', *The Ceylon Journal of Historical and Social Studies*, Vol. 9, No. 2, (Peradeniya, July - December, 1966), pp. 101 - 112.

3. **Fernao De Queyroz,** *The Temporal and Spirltual Conquest of Ceylon*, Translated by Father S. G. Perera, Book 1, Colombo, 1930; Book 4, Colombo, 1930.

4. **Gnāna Prakāsar, S.** 'Nallamāppāṇa Vannian and the Grant of a Mudaliyarship, *Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society*, Vol. XXXIII, No. 89, (Colombo, 1936), pp. 217 - 231.

5. **Houaiss and Avery,** *The New Appleton Dictionary of the English and Portuguese Languages*, New York, 1964.

6. **Indrapala, K.** 'The Origin of the Tamil Vanni Chieftaincies of Ceylon', *The Ceylon Journal of the Humanities*, Vol. 1, No. 2 (Peradeniya, July, 1970), pp. 111 - 140.

7. **Kanapathi pillai, K.** 'A Pillar Inscription from Moragahawela,' *University of Ceylon Review*, Vol. XVIII, Nos. 1 and 2, (Peradeniya January - April, 1960), pp. 46 - 49. 'Mankanai Inscription of Gajabhahu II,' *University of Ceylon Review*, Vol. 22, No. 1, (1962), pp. 12-14.

8. **Krishnaswami, A.** *The Tamil Country Under Vijayanagar*, Annamalai University Historical Series - No. 20, Annamalainagar, 1964.

9. **Mahalingam, T. V.** *Administration and Social Life Under Vijayanagar*, Madras University Historical Series – No. 15, Madras, 1940.

10. **Navaratnam, C. S.** *Vanni and the Vanniyas with a Map of the Vanni Districts*, Jaffna, 1960.

11. **Nilakanta Sastri, K. A.** *A History of South India from Prehistoric times to the fall of Vijayanagar*, 3rd Edition, Oxford University Press, Madras, 1966.

12. **Paranavitana, S.** 'Lankatilaka Inscriptions', *University of Ceylon Review*, Vol. XVIII, Nos. 1 and 2 (January, 1960), pp. 1 - 45.

13. **Pieris, P. E.** *The Kingdom of Jaffnapatam 1645*, Second Edition, 1944.

14. **Subrahmanya Ayyar, K. V.** 'The Tirumukkudal Inscription of Vira Rajendra', *Epigraphia Indica*, Vol. 21, (Delhi 1931 - 32), No. 38, pp. 220 - 250.

15. **Subramaniam, T. N.** *South Indian Temple Inscriptions*, Published Under the Authority of the Government of Madras, Vol. I, Madras, 1953; Vol. II, Madras, 1954; Vol, III, part I, Madras, 1955; Vol. III; part II, Madras, 1957.


16. **Swamikannu Pillai, L. D.** *An Indian Ephemeris A. D. 700-A. D. 1799*, Published under the Authority of the Government of Madras, Vol. VI–A.D. 1600 to A. D. 1799, Madras, 1922.

17. **Tennent, J. E.** *Christianity in Ceylon*, London, 1850.


18. **Vos, F. H. De, (Compiled by)** 'Extracts Relating to Ceylon From the Dag - Register, Batavia, A. D. 1678 - 80,' *Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society*, Vol. XXVI, No. 71, (1918), pp. 181 - 198.

19. **Wolf, John Christopher,** *The Life and Adventures of John Christopher Wolf*, late Principal Secretary of State at Jaffna Patnam, in Ceylon, to which is added a short description of Ceylon by Eschelskroon. Translated from the German, 1785.

---



செப்பேட்டின் முதற்பக்கம்



செப்பேட்டின் இரண்டாம் பக்கம்

# அட்டவணை


அகிதம்—6
அட்ஜா தந்தே—34
அயுதாந்தி—30, 34
அம்பலவாணர்—14, 23
ஆண்ரிலொபெஸ்—28
இலங்காதிலக விகாரைச் சாசனம்—39
இலங்கைஞராயண முதலியார்—7, 26, 35, 36
இலெங்கைஞராயண முதலியார்—7, 13, 14, 16, 22 - 24, 26, 36, 38
இரணசூரிய இரணராஜ முதலியார்-20,21
இறைசுவதோர்—7, 13, 26, 33, - 36,38
இயாட்பாணம்—3
ஈழகேசரி—1, 2
ஈழமண்டல சதகம்—7
உடையார்—13, 33, 40, 41
கதிர்காமம்—46
கப்ரின் பேக்மன்—18
கங்காணி (கண்காணி)—42, 43
கங்காணித் தாண்டவராயன்—13, 42, 48
கந்த உடையான்—40, 41
கந்தப்பர்—17
கந்தயினு வன்னியஞர்—7 ,13, 24, 26, 31
கமம்—7
கயிலாயவன்னியஞர்—2, 3,7 - 16, 29, 30, 33, 48
(கயிலவன்னியன்)
கரிக்கட்டு மூலே—7, 13, 17, 30-33
கன்னியங்காடு—1, 2
கஜபாஹு II—42
காசியஞர்—31
கிடைக் கண்காணி—42
குமார கம்பண—42
குலசேகர நல்லமாப்பாணர்—30
குலசேகர முதலியார்—7,13,17-19,26, 33,38,39
குவைறேஸ்—27, 28
குஷ்டவியாதி—10
கைமத்தர் (?)—31
கொற்றப் பிள்ளை (?)—31
கொப்ருடோரிஸ்—35
கோணேசர் கல்வெட்டு—37
சகாயம்—6
சம்பாந்துறைச் செப்பேடு—6, 46
சாத்திரக் கண்காணி—42
சிதம்பரம்—1, 3, 7, 28, 29, 45, 46
சிவிகையார்—42
சூரியமூர்த்தித் தம்பிரான் — 5
டாக் பதிவேடு—24, 25
டீன் ஹரன்—18
திருக்கைல உடையார்--14, 25, 31
திருகோணமலே—9
திருகோணமலே வன்னியஞர்—9
திருப்பனங்காட்டுச் சாசனம்—42
திருப்புவனம் கல்வெட்டு—41
திருமுக்கூடல் கல்வெட்டு—42
தென்னமரவடி—7,13,15,17,20,30-33,36,38
தொன் கஸ்பர் சிதம்பரப்பிள்ளை—13, 25
தொன் பிரான்சிஸ்கோ அமரக்கோன் முதலியார்—20, 21
தொன்பிராசிஸ்கோ சேதுகாவல மாப்பாணர்—20
தொன்பிலிப் நல்லமாப்பாணர்—13, 14, 16, 22, 23, 25, 29, 31, 33
பச்சிலேப்பள்ளி—7, 30 - 32, 35, 36
பனங்காமம்—7, 9 - 17, 19, 29 - 33,36
பரந்தன்வெளி—31
பரராசசேகரன் மடம்—7
பரராசசேகர மகாராசா—1-3, 6-8, 48
பவில்லியன்—35, 40
பிரஸஸ்தி—6
பிலிப் பால்டியஸ்—27
பிள்ளை மள்ளை தலேமுறை—6
புண்ணிப் பிள்ளை—7, 13, 14, 24, 25

புண்ணியம்பிள்ளை—14, 25
புரவுவரித்திணைக்களத்துக் கணக்காணி—42
புவி நல்லமாப்பாணர்—7, 13-16, 18,
19, 22, 23, 26, 38, 39
பேதுரு டீ பென்கொர்—27
றெசிபர்—34
றெசிபதோர்—34
றைக்லோவ் டீ பீற்றர்—23
றைக்லோவ் வான்கூன்ஸ்—10, 31, 33
றெபேர்ட் நொக்ஸ்—30
நல்லூர்—29
நாகபட்டினம்—29
நிச்சயச்சேனுதிராய முதலியார்—7, 12-
19, 22, 26, 29, 33, 38. 39
நீலயினுர்—7, 13, 25
மட்டக்களப்பு மான்மியம்—37, 38
மங்கானைக் கல்வெட்டு—42
மயிலாத்தை உடையார்—7,13,17,26,41
மரக்கால்—7
மாறவர்மன் சுந்தரபாண்டியன்—41
முக்குவர்—38
முதலி—38, 39
முதலியார்—7, 13, 19, 21, 33, 36,
38, 39, 40, 41
முள்ளியவளை—7, 17, 20, 30-33, 36
மூத்தர் வன்னியனுர்—7, 13, 25
மேல்பத்து—7, 17, 20, 21, 30-33, 36
மொத்தக்கர்—34
ரணசூரரணதீரராகவன்னியனுர்—7,
13, 20-22, 24, 26, 38, 48
ராஜராஜசோழன்—19
ரெங்கனுராயணன்—48
வன்னி—1, 8, 9, 11, 13, 26, 27, 30-
32, 37, 39
வன்னிபம்—7, 13, 16, 19, 38
வீரப்பிரதாபவீர வேங்கடபதி தேவமகா
ராயர்—43
வெருகல் கல்வெட்டு—9, 11
வேங்கட I—43
வேங்கட II—43
வேங்கட III—43
வேங்கடபதிதேவ மகாராயர்—43, 44
ஜடாவர்மன் சிறிவல்லவன்—42
ஜயசிங்கதேவன்—42
ஜான்ஷ்ரொய்டர்—20, 31
ஹியூ நெவில்—19
ஹென்றிக் பேக்கர்—15, 17, 18
ஷெவார் தெக்ரேன்—28, 29
ஸ்ரீ வீரப் பிரதாபவீர ஸ்ரீவேங்கடபதி தேவ
மகாராயர்—43